உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 02 வெள்ளிக்கிழமை (17.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 021

# வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாயகம் அல்ல முழு நாட்டையும் ஆண்டவர்கள் சிங்களவர்களே!

### ஆணைக்குழு முன் எல்லாவல தேரர் சாட்சியம்



கொழும்பு, டிசெம்பர் 17

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம், தமிழ்த் தேசியம் என்று எவரும் உரிமை கொண்டாடமுடியாது. அதற்கான ஆதாரங்களும் இல்லை; வடமுனை முதல் தென்கரை வரை ஆட்சி புரிந்தவர்கள் சிங்களவர்கள் தான் - என்று அடித்துக் கூறுகின்றார் எல்லாவல மேத்தானந்த தேரர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஐக்கியத்துடன் இணைந்து வாழ்வோம். ஆனால் எந்தப் பிரதேசத்தையும் ஆளும் ஆட்சி அதிகாரம் தமிழர்களுக்குக் கிடையாது. முழு நாட்டையும் ஆண்டவர்கள் சிங்கவளர்கள் தான். அதற்கான ஆதாரங்களும், சரித்திரச் சான்றுகளும் நிறையவே உண்டு. வடமுனை முதல் தென்கரை வரை ஆட்சி புரிந்தவர்கள் சிங்களவர்கள் தான் என்பதை உறுதிப்படுத்தும் கல்வெட்டுக்களும் உண்டு என்றும் கூறுகிறார் இந்த தேரர்.

கொழும்பு லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கை நெறிக்கான நிலையத்தில் நேற்று மாலை நடைபெற்ற நல்லிணக்க ஆணைக் குழுவின் முன் சாட்சியம் (28ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் ஆயுதக் குழுக்களுக்கு உடன் முடிவு கட்டப்பட வேண்டும்

### ஜனாதிபதியின் இணைப்பாளர் வலியுறுத்து

கொழும்பு, டிசெம்பர் 17

வடக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் அனைத்தும் முற்றாகக் களையப்படவில்லை என்று குற்றஞ்சாட்டி உள்ள ஜனாதிபதியின் இந்துமத இணைப்பாளர், அவை உடனடியாகக் களையப்பட்டு மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

சங்கானை முருகமூர்த்தி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ நித்தியானந்த குருக்களின் படுகொலை தொடர்பில் செய்தியாளர்களுக்கு விளக்கம் அளித்த போதே அவர் அப்படிக் கூறினார். (25ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நாடுகளுக்கு உதவ இலங்கை தயார் என்கிறது அரசு

கொழும்பு, டிச.17

பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ள நாடுகளுக்கு உதவ இலங்கை தயாராகவுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் செய்தியாள ரொருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உட்பட தமிழக முதல்வர் கருணாநிதி, அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரைப் புலிகள் கொலை செய்யத் திட்டமிட்டிருப்பது தொடர்பாக அந்நாட்டுப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளமை தொடர்பாகவே கேள்வி எழுப் பப்பட்டது. அமைச்சர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

(25ஆம் பக்கம் பார்க்க)

## தமிழில் தேசிய கீதம் பாடலாமா? கெஹலிய நேற்று மழுப்பல் பதில்

### அரசமைப்பில் உள்ளவாறு பயன்படுத்தலாம் என்கிறார்

கொழும்பு, டிசெ.17

இலங்கையின் தேசிய கீதத்தை இலங்கை அரசமைப்பில் உள்ளவாறு பயன்படுத்தலாமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல செய்தியாளர்களின் சரமாரியான கேள்விகளுக்குப் பிடிகொடுக்காமல் பதிலளித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அமைச்சரவை முடிவுகளை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்து முடித்ததுமே, தமிழில் தேசிய கீதம் பாட முடியுமா? இது குறித்து அமைச்சரவையில் ஆராயப்பட்டதா? என செய் (25ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடு குளத்தில் மீன் பிடிக்கத் தடை இல்லை

கொழும்பு, டிசெ.17

இரணைமடுக் குளத்தில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்படவில்லை. யார் வேண்டுமானாலும் அங்கு சென்று மீன் பிடிக்கலாம் என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இரணைமடுக் குளத்தில் மீன் (25ஆம் பக்கம் பார்க்க)

### ஆயிரக்கணக்கானோர் கதறியழ

## சங்கானை குருக்களின் பூதவுடல் நேற்றுமாலை தீயுடன் சங்கமம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

சங்கானையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்த நித்தியானந்தக் குருக்களின் இறுதிக்கிரியைகள் நேற்றுப் பிற்பகல் அவரது இல்லத்தில் இடம்பெற்றன. குருக்களின் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் கதறியழ அவரது உடல் சங்கானை, கரைச்சி மயானத்தில் தீயுடன் சங்கமமாகியது.

(25ஆம் பக்கம் பார்க்க)

### வன்னி, யாழ் .மாவட்டங்களில்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாளை முதல் உதவிப் பொருள்கள்

### கூட்டமைப்பினரும் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், டிசெ.17

வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நாளை முதல் நான்கு தினங்கள் உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு மீள்குடியேற்ற அமைச்சர் எம்.எம். குணரத்ன வீரக்கோன் அழைப்பு விடுத்துள்ளார்.

மக்களுக்கு உதவிப்பொருள் (25ஆம் பக்கம் பார்க்க)

வீட்டையோ வேலைத்தளத்தையோ எந்த நேரமும் எங்கிருந்தும் கண்காணிக்க
AT
Athavan Technology
Security camera, Door phone system, Finger print attandance, Burgler alarm
No. 111/2, Brown Road, Kokuvil East, Jaffna.
Tel - 0750 421 776

## சங்கானைச் சம்பவத்துக்கு மன்னிப்பு கோருகிறார் தளபதி

யாழ்ப்பாணம், டிசெ. 17

சங்கானையில் இடம்பெற்ற சம்பவத்துக்காகப் படையினர் சார்பில் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். இத்தகைய சம்பவம் எதிர்காலத்தில் இடம்பெற இடமளிக்காத வகையில் செயற்படுவோம் என உறுதி கூறுகிறேன்.

யாழ். படைகளின் தளபதி (25ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச் செல்வனின் சிலை எங்கே? அகற்றப்பட்டுவிட்டது என்கிறது அரசு

கொழும்பு, டிசெ.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் நினைவாக பிரான்ஸ்- லா கொர்னியூவ் நகரத்தில் வைக்கப்பட்டிருந்த சிலை அகற்றப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பந்துல ஜயசேகர ஊடகங்களுக்கு நேற்று இத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிரான்ஸ்- லா கொர்னியூவ் நகரத்தில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ச் செல்வனின் சிலை தொடர்பில் வெளிவிவகார அமைச்சு முன்பு கண்டனம் (25ஆம் பக்கம் பார்க்க)

நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு...
சொல்பெக்
EW 050
10%
Hayleys
ஹேலீஸ் காட்சியறை 47, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 2221292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்துக்குரு ஒருவரின் கொலை சாதாரண சம்பவமாக பார்க்கப்படுவது கண்டிக்கத்தக்கது பொறுப்பானவர்கள் பதில்சொல்ல வேண்டும் என்கிறார் ஐயப்பதாஸக் குருக்கள்

உதயன் செய்தியாளர்கள் : உமா, சந்திரகுமார்

சங்கானை, டிசெ.17

ரி-56 போன்ற பயங்கர ஆயுதங்கள் தனி மனிதர்கள் பாவிக்கத் தடை செய்யப்பட்டவை. இந்துக் குருவின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் இராணுவச் சிப்பாய் மூலம் சம்பந்தப்பட்டவருக்குக் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்குப் பொறுப்பானவர்கள் பதில் சொல்ல வேண்டும்.

இதற்குப் பொறுப்பாளியாராக இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத் தப்பட வேண்டும் என்பதனை ஜனாதிபதி யிடம் வலியுறுத்தி உள்ளோம்.

சங்கானையில் நிகழ்ந்தது போன்ற



கோரக்கொலை ஒரு பௌத்த குருவுக்கோ கிறிஸ்தவ குருவுக்கோ நடந்திருந்தால் நாடே தட்டிக் கேட்டிருக்கும். அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் குரல்கள் ஓங்கி ஒலித்திருக்கும். இந்துக் குரு ஒருவருக்கு ஏற்பட்ட கதி குறித்து எவரும் குரல் கொடுக்காதிருப்பது கவலைக்கு உரியது; கண்டிக்கப்பட வேண்டியது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## குருக்கள் வீரமரணம் அடைந்திருக்கிறார் அவர் கோழைத்தனமாக இறக்கவில்லை

### சித்திவிநாயகர் ஆலய நிர்வாகி

தமது பணிகளை ஏனையோருக்கு முன்னுதாரணமாக ஆற்றிவந்தவர் நித்தியானந்தக் குருக்கள். அவர் கோழைத் தனமாக இறக்கவில்லை. வீரமரணம் அடைந்திருக்கிறார். துணிவு மிக்க ஒரு குருவை நாம் இழந்துவிட்டோம்.

வடலியடைப்பு சித்தி விநாயகர் ஆலய நிர்வாகிகள் சார்பில் இரங்கலுரை ஆற்றிய க.கந்தசாமி கூறியுள்ளார். அவர் தமது இரங்கல் உரையில் தெரிவித்தவையாவது:

(4ஆம் பக்கம் பார்க்க)

## குருக்களுக்கு ஏற்பட்ட கதி எமக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்

### சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயப் பரிபாலகர்

சிவாச்சாரியர் நித்தியானந்தக் குருக்களுக்கு ஏற்பட்ட நிலை எமது மக்கள் அனைவருக்கும் ஓர் பாடமாக அமைய வேண்டும்.

இவ்வாறு தமது இரங்கல் உரையில் தெரிவித்தார் சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயப் பரிபாலன சபையைச் சேர்ந்த குமரேசு சின்னத்துரை. அவர் மேலும் கூறியதாவது:

எமது சிவாச்சாரியார் ஒரு பிரதமகுரு ஆவார். அவரை நோக்கித் துப்பாக்கி நீட்டப்பட்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## திருவெம்பாவை நிறைவுற்றதும் ஆலயங்களை பூட்டி எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும்

### மக்கள் சக்தி அமைப்பு அழைப்பு

போர் நடைபெற்றவேளை மட்டக்களப்பில் ஓர் இந்துக் குரு சுட்டுக் கொல்லப்பட்டார். போர் முடித்து சமாதானம் வந்துவிட்டதாகச் சொல்லிக் கொள்ளும் இப்போது சங்கானையில் ஓர் இந்துக் குரு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு திருவெம்பாவை முடிவுற்ற பின்னர் குடாநாட்டில் உள்ள சகல ஆலயங்களையும் பூட்டி எமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

யாழ். மக்கள் சக்தி அமைப்பைச் சேர்ந்த

(4ஆம் பக்கம் பார்க்க)

## குருக்களுக்கு நேர்ந்த அனுபவம் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது

### சிவாச்சாரியசிரோண்மணி சர்வேஸ்வரக் குருக்கள் கவலை

சிவாச்சாரியார் நித்தியானந்தக் குருக்களுக்கு நேர்ந்த துயரச் சம்பவம் மக்கள் மனதில் பெரும் பீதியைத் தோற்றுவித்துள்ளது.

மூக்கிருந்தும் நுகர முடியாத, வாயிருந்தும் பேச முடியாத, நாவிருந்தும் சுவைக்க முடியாத ஒரு சூழலில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் எமது மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு தமது இரங்கல் உரையில் கூறினார் கதிரமலைச் சிவன்கோயில் பிரதம குரு கிரியாகலாமணி நா.சர்வேஸ்வரக் குருக்கள். அவர் மேலும் தெரிவித்ததாவது: (25 ஆம் பக்கம் பார்க்க)

குருக்கள் ஐயாவுக்குப் பிள்ளைகள் இறுதிக்கடன்...





குருக்கள் இல்லத்தில் திரண்ட மக்களில் ஒரு சில துளியினர்....





சிவாச்சாரியாருக்கு இரங்கல் உரை நிகழ்த்துவோர்....





மக்கள் பெருந்திரள் புடைசூழ இறுதிஊர்வலம்....





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிகள் அகற்ற அகற்ற உடன் அந்த இடங்களில் மீள்குடியமர்வு

## யாழ்.தளபதி தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.17

வலி.வடக்கில் கண்ணி வெடிகள் அகற்ற அகற்ற அந்த இடங்களில் மீள்குடியமர்வு இடம் பெறும். விரைவாக மீள்குடியமர்வை மேற்கொள்ள கண்ணிகளை அகற்றும் பாணியை துரிதமாக்கியுள்ளோம்.

யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குடாநாட்டின் மீள்குடியமர்வு தொடர்பாக கேட்ட போது- வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த 333 பேர் இராமாவில் முகாமில் உள்ளனர். அதே போல வலி. வடக்கைச் சேர்ந்த 93 ஆயிரம் பேரும் மீள்குடியமர்த்தப்பட வேண்டியவர்கள்.

அவர்களை மீள்குடியமர்த்த தடையாக இருப்பது கண்ணி வெடிகள்தான் அவற்றை அகற்றும் பணியை துரிதமாக்குமாறு அந்தப் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களிடம் கோரியுள்ளோம்.

அண்மையில் கன்னி வெடியகற்றப்பட்ட மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் மீள்குடியமர்வு இடம்பெற்றது. கண்ணி வெடி அகற்றப்பட்டவுடன் அந்தப் பிரதேசத்தில் மக்கள் குடியமர்த்தப்படுவர்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கு மேற்குப் பகுதியிலும் கீரிமலைப்பகுதியிலும் கண்ணி வெடி அகற்றும் பணிகள் தற்சமயம் இடம்பெறுகின்றன.

கிறிஸ்மஸ், புதுவருடக் கொண்டாட்டங்களை ஒட்டி ஹலோரஸ்ட், டெனிஸ் ஆகிய நிறுவனங்கள் கண்ணி அகற்றும் பணியை எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை இடை நிறுத்தவிருக்கின்றன. படையினரின் பணி தொடர்ந்து இடம்பெறும் என்று கூறினார் தளபதி. (ஐ)

# புலனாய்வுப் பிரிவினரால் நேற்று வித்தியாதரன் விசாரிக்கப்பட்டார்

கொழும்பு, டிச. 17

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு நாடு திரும்பிய சிரேஷ்ட ஊடகவியலாளர் என். வித்தியாதரனை பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் வைத்து தேசிய புலனாய்வுப் பிரிவினர் 3 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தினர்.

இவ்விடயம் தொடர்பில் வித்தியாதரன் கூறியவை வருமாறு:-

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்குத் தனிப்பட்ட விஜயம் ஒன்றினை மேற் கொண்டு விட்டு புதன்கிழமை இரவு 10.30 மணியளவில் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தேன். உங்களை விசாரிக்க வேண்டும் என்று கூறிய தேசிய புலனாய்வுப் பிரிவினர் என்னை அழைத்துச் சென்றனர்.

சுமார் 3 மணித்தியாலங்கள் நாகரிகமான முறையில் என்னை பல கோணங்களில் விசாரித்தனர். பத்திரிகைத் துறையிலிருந்து ஒதுங்கியிருக்கும் என்னை எதற்காக விசாரிக்கிறீர்கள் என்று நான் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் உங்கள் பெயர் எமது தரவில் இருக்கிறது. அதனால்தான் விசாரிக்கிறோம் என்று கூறினர்.

அரசியலில் ஈடுபடப் போகிறீர்களா? எதற்காக சிங்கப்பூர், மலேசியா போனீர்கள்? இப்பொழுது என்ன செய்கிறீர்கள்? போன்ற பல கேள்விகளை என்னிடம் கேட்டவர்கள் வியாழன் அதிகாலை 1.30 மணியளவில் வெளியில் செல்ல அனுமதித்தனர். - என்றார்.

(த)

# காணாமற்போனோரை தடுப்பு முகாம்களில் தேடுகிறது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு

கொழும்பு, டிசெ.17

வடக்கு, கிழக்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போரின்போது காணாமற்போனதாக அறிவிக்கப்பட்டுள்ளவர்கள் தடுப்புக்காவலில் உள்ளனரா என்பது குறித்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினர் கேட்டுக் கொண்டதையடுத்தே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு,கிழக்குப் பகுதிகளில் நல்லிணக்க ஆணைக் குழு நடத்திய அமர்வுகளின் போது காணாமற்போன தமது உறவினர்களைக் கண்டுபிடித்துத் தருமாறு ஏராளமான பொது மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து தடுப்பு முகாம்களுக்கு நேரடியாகச் சென்ற ஆணைக்குழுவினர் காணாமற் போனவர்களைக் கண்டறிவது தொடர்பாக பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு காவல் துறையினருடன் பேச்சு நடத்தியிருந்தார்.

அப்போது காணாமற்போனவர்கள் தடுப்புமுகாம்களில் இருக்கின்றாரா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறும் ஆணைக் குழுவின் தலைவர் கோரியிருந்தார்.

இந்தநிலையில் ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ள காணாமற் போனவர்கள் பற்றிய ஆவணங்கள் மொழி பெயர்க்கப்பட்டு, விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

இந்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர் விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் இந்தப் பணி எப்போது நிறைவடையும் என்று காலஅவகாசத்தைக் கூற முடியாது என்று பயங்கரவாதத் தடுப்புக் காவல்துறைப் பிரிவின் இணைப்பாளர் அசல தசநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை, இந்த விவரங்கள் வெளியானதும், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிவித்துள்ளது. (த)

# இலங்கை - இந்திய கப்பல் சேவை ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்து

கொழும்பு, டிசெ.17

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடற்பயணத்தை மேற்கொள்வதற்கான கப்பல் சேவையொன்றை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தமொன்று இரு நாடுகளுக்கிடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று அரசாங்கம் நேற்று அறிவித்தது.

அடுத்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தக் கப்பல் சேவைக்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்வுள்ள நிலையில் அதன் ஆரம்ப கட்ட மாக தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலும் கொழும்புக்கும் தூத்துக்குடிக்கு இடையிலும் இந்த கப்பல் சேவை அமுல்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் எதிர்காலத்தில் ஏனைய துறைமுகங்களிலிருந்து இந்தியாவுக்கான கப்பல் சேவையை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக சேவையினை முன்னெடுக்கும் வர்த்தகர்கள் மற்றும் உல் லாசப் பயணிகள், பக்தர்கள், மாணவர்கள் ஆகியோரின் நலன் கருதியே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

(த)

# 404 முஸ்லிம் குடும்பங்கள் குடாநாட்டில் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்ப்பாணம் மக்கள் பணிமனையில் பதிவுகளை மேற்கொண்டு 404 முஸ்லிம் குடும்பங்கள் யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ளன.

கடந்த 2002 ஆம் ஆண்டிலிருந்து நேற்று வியாழக்கிழமை வரையும் 404 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரை அண்டியுள்ள ஏழு கிராம அலுவலர் பிரிவுகளில் இவர்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். ஜே/87 இல் 240 குடும்பங்களும் ஜே/86 இல் 102 குடும்பங்களும் ஜே/ 84 மற்றும் ஜே/ 85 இல் 29 குடும்பங்களும் ஜே/ 88 மற்றும் ஜே/ 80 இல் 15 குடும்பங்களும் இவ்வாறு குடியமர்ந்துள்ளன.

யாழ். நகருக்கு வெளியே தென்மராட்சி, மண்கும்பான், சண்டிலிப்பாய் உள்ளிட்ட இடங்களில் 9 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன என்றும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. (ம-14)

# தேங்காய் இறக்குமதிக்கு அனுமதி

கொழும்பு, டிசெ.17

உள்ளூர் சந்தையில் தேங்காய் விலை உயர்வை கட்டுப்படுத்துவதற்காக ஆசிய நாடுகள் பலவற்றிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்தவற்கு அரசு தீர்மானித்துள்ளது.பண்டிகைக் காலத்திற்கு முன்பாக மலேஷியா, இந்தியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்வதற்கு பாரம்பரிய தேங்காய் ஏற்றுமதியாளர்களுக்கும் தெங்கு அபிவிருத்திச் சபைக்கும் அரசாங்கம் அனுமதி வழங்கும் என உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன தெரிவித்தார்.

(த)

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கியஸ்தர்களுக்குப் பிடிவிறாந்து

கொழும்பு, டிசெ.17

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கியஸ்தர்களைக் கண்ட இடத்தில் கைது செய்வதற்கான பிடிவிறாந்து ஒன்றை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குக் கிடைத்த நிதியுதவிகளை நிதி சட்டமூலங்களுக்கு மாற்றமான முறையில் விடுதலைப் புலிகளுக்கு வழங்கியது தொடர்பான வழக்கிலேயே அவர்களுக்கு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு தடைசெய்யப்பட்டுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கியஸ்தர்களைக் கைதுசெய்து நீதிமன்றின் முன் ஆஜர்படுத்துவதற்கு முடியுமான அனைத்து வழிகளையும் கையாளுமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதியை சட்டவிரோதமான முறையில் பயங்கரவாத நடவடிக்கைளில் பயன்படுத்தும் வண்ணம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் நடந்து வரும் வழக்கில் ஏற்கெனவே விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் நீதிமன்றத்துக்கு தொடர்ச்சியாக சமுகமளிக்காதுள்ளனர்.

அதன் காரணமாகவே தற்போது அவர்களுக்கெதிரான பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க நாடு முழுவதும் பாதுகாப்புக் கமரா

கொழும்பு, டிசெ.17

நாடு முழுவதும் பாதுகாப்பு கமராக்களை பொருத்தும் திட்டத்தின் கொழும்பு மாநகருக்கான நடவடிக்கை எதிர்வரும் 21 முதல் அமுலுக்கு கொண்டு வரப்படுகின்றது.

அதன்படி கொழும்பு உட்பட நாடு முழுவதிலும் உள்ள நகரங்களில் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

பாதாள உலகக் குற்றவாளிகள், திருட்டுக் கும்பல், கப்பம் பெறுவோர் மற்றும் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் ஆகியோரை மடக்கிப் பிடிப்பதற்கு ஏற்ற வகையில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படுகின்றது.

உலகில் வளர்ச்சியடைந்த நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இந்த முறைமை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கிணங்க இலங்கையிலும் கையாளப்படவுள்ளது.

தற்போது கொழும்பு நகரிலும் அதை அண்டிய பிரதேசங்களிலும் பொருத்தப்பட்டுள்ள கமராக்கள் எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு உத்தியோகபூர்வமாக இயங்குவதற்கு ஏற்ற வகையில் ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்தப் பாதுகாப்பு கமரா பொருத்தும் திட்டம் இதற்கு பல வருடங்களுக்கு முன்னர் முன்மொழியப்பட்ட போதிலும் அதற்காக செலவாகும் தொகை அதிகமா கக் காணப்பட்டமையால் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

எனினும் பல்வேறு குற்றச் செயல்களைச் செய்துவிட்டு தப்பிச் செல்லும் குற்றவாளிகளை பிடிப்பதற்காகவும் நாட்டிலே குற்றச் செயல்கள் இடம் பெறுவதை முற்றாகத் தடுப்பதற்காகவும் பாதுகாப்பு கமரா பொருத்தப்பட வேண்டுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

சில மாதங்க ளுக்கு முன்னர் இடம்பெற்ற எச்.எஸ்.பீ.சி. வங்கியில் 7 கோடி ரூபா கொள்ளை உட்பட நாட்டிலே நிகழ்ந்த பாரிய கொள்ளைகள் தொடர்பான சூத்திரதாரிகளை இதுவரையில் கண்டுபிடிக்க முடியவில்லை.

இதற்கான காரணம் பாதுகாப்புத் துறையினரிடம் சிக்காது பல உபாயங்களை திருட்டுத்தனமாகப் பாவித்து செயற்படுவதாகும். எனினும் பாதுகாப்புக் கமரா பொருத்தப்பட்டதன் பின்னர் நாள் முழுவதிலும் அனைத்து விடயங்களும் வீடியோவில் பதிவாகும்.

கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தத் திட்டமானது அடுத்த ஆண்டின் இறுதிக்குள் நாடு முழுவதிற்கும் விஸ்தரிக்கப்படும். இந்த பாதுகாப்பு கமரா பொருத்தப்பட்டதன் பின்னர் இதனை கண்காணிப்பதற்காக பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை உள்ளடக்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்குரு ஒருவரின்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது ஒரு சாதாரண விடயமாக, சம்பவமாகக் கருதப்படுகிறது. இந்த நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

சங்கானை வெல்வில் முருக மூர்த்தி ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ சி.நித்தியானந்தக் குருக்களின் இறுதிக் கிரியைகள் நேற்றுப் பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்ற வேளை- இரங்கலுரை ஆற்றிய சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்திரளான மக்கள் மத்தியில் ஆற்றிய இரங்கல் உரையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிறக்கின்ற மனிதன் இறப்பது நிச்சயமானது. அந்த இறப்பு தானாக அமைய வேண்டும். இவ்வாறான இறப்புக்கள் சம்ப வங்கள் வன்மையாக கண்டிக்கப்பட வேண் டியவை. இன்று நித்தியானந்த சிவாச்சாரியா ருக்கு நடந்தகதி நாளை எல்லாச் சிவாச்சாரியார்களுக்கும் நடக்கலாம். அவருக்கு நடந்து விட்டது என்று நாம் எல்லோரும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கின்றோமே தவிர இதனைத் தட்டிக்கேட்பதற்கோ கண்டனங்களைத் தெரிவிப்பதற்கோ யாழ்ப் பாணத்தில் உள்ள இந்துக் குருமார்கள் முன்வரவில்லை. இது வேதனைக்குரியதாகும். இன்றைய பத்திரிகைகளில் பார்த்தால் முன்னாள் போராளிகளுக்கு போதைவஸ்துகளுக்கு அடிமையான இராணுவ வீரர் ஒருவர் ஆயு தத்தைக் கொடுத்து உதவினார் என்று யாழ். மாவட்ட இராணுவத் தளபதி செய்தி வழங்கியிருக்கிறார். இது வேதனைக் குரியதாகும். போதைப் பொருளுக்கு அடிமையான ஒரு இராணுவச் சிப்பாயிடம் ஆயுதத்தை எவ்வாறு கொடுக்க முடியும்? ரி-56 ஆயுதத்தை தனி மனிதர்கள் பயன்படுத்த முடியாது. அதற்குப் பொறுப்பானவர்களே இதற்கும் பதில் சொல்ல வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிடம் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டிருக்கிறோம். இவ்வாறான சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டும். சங்கானைப் பகுதியில் முகமூடி அணிந்தவர்கள் கொள்ளைக்காரர்கள் என்று கூறுவதால் எந்தப் பயனும் இல்லை. இவ்வாறான சம்பவம் இடம்பெற்றால் அதனைத் தட்டிக்கேட்கும் முதுகெலும்பு வேண்டும். யாழ். மாவட்டத்திலே எத்தனையோ குருமார்கள் இருக்கின்றனர். ஒருவர் கூடப் பத்திரிகையிலே கண்டன அறிக்கை விடவில்லை. இது வேதனைக் குரியதாகும் என்றார்.(அ-14-29)

After A/L >>Be a Degree Holder in Medical Field
Learn Sri Lanka Medical Council Approved

**HND in Pharmacy**

Get a Government Job
Or Work in UK ?
Be a world Recognized Degree Holder !

Quality Assured

மருத்துவக்கல்வியின் முன்னோடிகளிடமிருந்து
யாழ்ப்பாணத்தில் முதல் முறையாக...

Lectures by MBBS Doctors
Guidance from Qualified Pharmacists
Internship Arrangements Free of Charge

**Application Closing Date : 28/12/2010**

Mode of Study : Part Time/Week end Classes
Entry Requirements: Pass in Chemistry in G.C.E A/L(3 s)

Free Counseling Available now !
Visit us for details
Call for appointments only :0777302882

**Knowledge Universe®**
Malaysian College of Business and IT
Tel: 0777302882 |# 75,Temple Road,Jaffna | www.kugroup.info
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

## குருக்கள் வீர...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னலம் கருதாது அந்தண சிவாச் சாரியார்களுக்கு முன்னுதாரணமாக ஆலயப் பணிகளைச் சிறப்பாக நடத்திய உத்தமர் எமது குருக்கள். அவர் இன்று உறங்கிக் கொண்டிருக்கிறார்.

எமது கிராமத்துக்கு மட்டுமன்றி அவரது மறைவு அந்தணர்குலச் சிவாச் சாரியார்களுக்கே இழப்பாகும். அவர் பல்வேறுபட்டங்களைப் பெற்றிருந்தார். ஆலயக் கிரியைகளை நேர்த்தியாக நிறைவேற்றும் திறமை மிக்கவர் அவர். அவரது பணிகளை அவரது பிள்ளைகள் தொடர்வார்கள் என்று நாம் நம்புகின்றோம். அவர் கோழையாக இறக்கவில்லை. வீரமரணம் அடைந்திருக்கின்றார். துணிவு மிக்க குருவை இழந் திருக்கின்றோம் - என்றார்.

## குருக்களுக்கு ஏற்....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

துயரச் சம்பவம் சங்கானைப் பகுதியில் இடம் பெற்றிருக்கிறது. எமது சமூகம், எமது இனம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

எமது சிவாச்சாரியாரை நோக்கி துப்பாக்கியை நீட்டியவன் பொலிஸில் இருப்பதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. சிவாச்சாரியாரின் இந்தத் துயரச் சம்பவம் எல்லோருக்கும் ஒரு பாடமாகவே அமைய வேண்டும். அவருக்கு ஏற்பட்ட நிலைமையைக் கண்டித்து நாம் எமது எதிர்ப்பை வெளிப் படுத்துவது மிக அவசியம் என்றார்.

(அ-14-28)

## திருவெம்பாவை....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம்.குமாரவேல் தமது இரங்கல் உரையின் போது இவ்வாறு அழைப்பு விடுத்தார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

இச்சம்பவம் தொடர்பாக எதிர்ப்புத் தெரிவித்து மாவட்டச் செயலகம் முன் பாக ஆர்ப்பாட்டம், பேரணி செய்ய ஒழுங்கு களை மேற்கொண்டேன். அது கைகூட வில்லை. இந்துக் குருமார் ஒன்றியம், கூட்டமைப்பினரைத் தொடர்பு கொண்டு கேட்டேன். அவர்கள் பின்னர் ஆராய்ந்து எதிர்ப்புத் தெரிவிக்கலாம் என்றனர். இந்துக்குரு ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டிருப்பது சாதாரண சம்பவம் அல்ல. போர் முடிந்தபின்னர் இந்துக் குரு ஒருவர் கொல்லப்பட்டிருப்பது பாரதூரமான ஒரு நிகழ்வாகும். இவ்வாறான சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதற்காக திருவெம்பாவை முடிந்தவுடன் அனைத்து ஆலயங்களையும் பூட்டி எமது எதிர்ப்பைக் காட்ட மக்கள் சக்தி அமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சகல ஆலயக் குருமார்களையும், பரிபாலன சபையினரையும் கேட்டுக்கொள்கின்றேன்-என்றார்.(அ-14-28)

## ஓராம் ஆண்டு நினைவு

உதிர்ப்பு 1950 . 05 . 19



உதிர்ப்பு 2009 . 12 . 17

### சிவப்பிரகாசம் பாலச்சந்திரன்

(பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், கரவெட்டி)

ஆண்டொன்று போனதுவோ
அப்பாவே உன் உரு மறைந்து
கர்த்தரின் நித்திரைக்குள்
கலந்துவிட்ட நாள்முதலாய்
ஈடில்லா இழப்புதனில்
ஈண்டிங்கு கலங்குகின்றோம்

களஞ்சியந் தோட்டம்,
கட்டைவேலி, கரவெட்டி. (9/573577) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**நேற்று (15.12.2010) புதன்கிழமை**
**கலாபூஷணம் விருது பெற்ற**
**கனகராசா மகேந்திரா**
**(அதிபர்)**

எமது மாவட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, கண்டாவளை மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு -வட்டக்கச்சி ஆகிய பாடசாலைகளில் கல்வியோடு கலை, இலக்கிய, நாடகத்துறைகளில் அளப்பரிய சேவைகள் செய்து திருகோணமலையிலும் இச் சேவையைத் தொடர்ந்து சேவையால் உயர்ந்து கலாசார அமைச்சினால் வழங்கப்படும் கலாபூஷணம் விருதைப் பெற்ற கீரிமலையைச் சேர்ந்த எமது முன்னைநாள் அதிபர் கனக. மகேந்திரா அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

வாழ்த்துவோர்:
முன்னைநாள் ஆசிரியர்களும்,மாணவர்களும்,
கிளிநொச்சி, வட்டக்கச்சி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தவில்வித்துவான் சங்கரப்பிள்ளை சொர்ணலிங்கம் (இசைஞானமணி, தவில் நாதமணி, சொற்சுடரொளி)

15.12.2010 அன்று அரசாங்கத்தினால் இந்து காலாசார அமைச்சின் கீழ் "கலாபூஷணம்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவர் பல்லாண்டுகாலம் வாழ்ந்து தவில், நாதஸ்வர இசைத் துறைக்கு சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

(107446)

வாழ்த்துவோர்:
ஆர். கண்ணன். (சித்தன்கேணி)
எஸ்.சுரேஸ்குமார் (கல்வியங்காடு) } தவில்

**நத்தார், புதுவருடத்தினை குடும்பத்துடன் ஆடைகட்டி**
**குதூகலமாய் கொண்டாடி மகிழ்ந்திட நாடவேண்டிய**
**ஒரே இடம்**

**Style Park**
**Perfect Collection**



யாழ்.நகரில் நவீன வசதிகளுடன் அனைத்து வகையான பல டிசைன்களுடன்
கூடிய புடைவை விற்பனைக் காட்சியகம்
யாழ்.நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள்
நிகரில்லாத் தரங்கள், அழகிய புடைவைத் தினி[illegible] சாம்ராஜ்யம்
ஸ்ரைல் பார்க்

இல.171, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 222 8383

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பிளேக்கின் யோசனைகள் எடுபடுமா?

✱ அவசரகாலச் சட்ட விதிகளில் மேலும் தளர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

✱ வடக்கில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்ற வேண்டும்.

✱ உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில், இன்னமும் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர், இதுவரை விடுவிக்கப்பட்டவர்களின் விவரங்களை அரசு உத்தியோக பூர்வமாக வெளியிட வேண்டும்.

- அப்போதுதான் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளோரின் குடும்பங்கள் அமைதியாக வாழ்வதற்கு வழி ஏற்படும்.

✱ வடக்கில் புதிய தலைமுறைத் தலைவர்கள் உருவாகுவதற்கு வசதியாக அரசாங்கம் அங்கு தேர்தல்களை நடத்த வேண்டும்.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான ராஜாங்கத்துறை துணை அமைச்சர் ரொபேர்ட் ஓ பிளேக், கொழும்பில் இருந்து வெளியாகும் 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்.

ரொபேட் ஓ பிளேக் தமது இப்போதைய பணிக்குப் பதவி உயர்த்தப்படுவதற்கு முன்னர், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக பணியாற்றியவர். அதனால், இலங்கை அரசியல் மற்றும் மக்களின் நிலைகளை நன்கு அறிந்தவர். அதனால் அவர் தெரிவித்திருக்கும் மேற்காட்டிய நான்கு விடயங்களும் தமிழ் மக்கள் மீதான கரிசனையுடனும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை கருதியும் தெரிவிக்கப்பட்டவை என்று கொள்வது பொருத்தமானதாகும்.

ஆனால், அவசரகாலச் சட்ட விதிகளைத் தளர்த்த வேண்டும் என்ற பிளேக்கின் முதலாவது யோசனை (அல்லது ஆலோசனை என்றும் சொல்லலாம்) அரசாங்கத்திடம் ஒரு சல்லிக்காசுக்கும் எடுபட மாட்டாது.

ஏன் தெரியுமா? அதனை கவனத்தில் எடுக்கும் பட்சத்தில் நாடாளுமன்றத்தில் மாதாந்தம் அவசரகாலச் சட்டம் நீடிக்கப்படும் போது, அதன் அவசியத்தை விளக்கிப் பிரதமர் தெரிவிக்கும் காரணங்கள் உண்மையானவை, சரியானவை அல்ல என்பதனை வெளிப்படுத்துவனவாக மாறிவிடும்.

ஆகப்பிந்தி, இம்மாத முற்பகுதியில் (கடந்த 8 ஆம் திகதியன்று) அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்குப் பிரதமர் கூறிய பிரதான காரணம்:

தலைமறைவாகித் திரியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரையும் ஆயுதக் குழுவினரையும் ஒன்று திரட்டி நாட்டில் மீண்டும் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்தச் சர்வதேச மட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது என்பதாகும். இதற்குச் சர்வதேச அமைப்புக்களிடம் உதவிகளைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக நம்பகரமான தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

இத்தகைய ஒரு பின்னணியில், பிளேக் நினைப்பது போன்று அல்லது அறிவுறுத்துவது போன்று அவசரகாலச் சட்டத்தில் தளர்வுகளை அரசு கொண்டுவர மாட்டாது என்பதனை எவரும் புரிந்துகொள்ள முடியும்.

ஆகையால், ரொபேர்ட் பிளேக்கின் கருத்தின் முதலாவது அம்சம் தானாகவே தட்டுண்டு போகிறது; அடிபட்டுப்போகிறது.

அவர் தெரிவித்திருக்கும் இரண்டாவது அம்சத்தையும் அரசாங்கம் காதில் போட்டுக்கொள்ளச் சந்தர்ப்பம் இல்லை. ஏனெனில் வடக்கில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களில் முக்கியமானவற்றை அகற்றமுடியாது என்று அரசு ஏற்கனவே கொள்கையளவில் முடிவு செய்து அறுதியாகத் தெரிவித்துவிட்டது.

ஆனால் -

அமெரிக்காவின் ராஜாங்கத்துறை துணை அமைச்சர் தெரிவித்த அடுத்த இரண்டு முக்கிய அம்சங்களை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய தேவை உண்டு. அவை தட்டிக்கழிக்க முடியாதவை.

இடம்பெயர்ந்தோரில் இதுவரை விடுவிக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களையும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரங்களையும் பகிரங்கப்படுத்த வேண்டும் என்பது இலகுவாக நிறைவேற்றப்படக் கூடிய ஒன்றாகும்.

இது மனிதாபிமானம் சம்பந்தமான ஒரு விவகாரம் ஆகும். இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருந்த போது படையினரால் கூட்டிச்செல்லப்பட்டவர்கள் - கைது செய்யப்பட்டவர்கள் - எங்கிருக்கிறார்கள், என்ன ஆனார்கள் என்று தெரியாமல் அவர்களின் பெற்றோர், மனைவியர், சகோதரங்கள் மற்றும் உறவுகள் நடைப்பிணங்களாக மாறியுள்ளனர். ஊன், உறக்கமின்றி சித்தப்பிரமை உண்டாகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலையை போக்கக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திடம் உண்டு. இது ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்துடன் சம்பந்தப்பட்டது. இவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிகளாகவும் இருக்கலாம்.

அமெரிக்கத் துணை அமைச்சர் கூறுவது போன்று இன்னமும் தடுத்து வைக்கப்பட்டோர், விடுவிக்கப்பட்டோரின் விவரங்கள் பகிரங்கப்படுத்தப்படின் அவர்களின் உறவுகள் மன ஆறுதல் அடைய முடியும், என்ன நேர்ந்தது என்பதையும் தெரிந்துகொள்ள முடியும் .இது விடயத்திலாவது அரசு தனது கருணை கலந்த மனிதாபிமானத்தை வெளிப்படுத்தக் கூடாதா?

வடக்கில் புதிய தலைமுறைத் தலைவர்கள் உருவாகுவதற்கு வசதியாக அங்கு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்ற ரொபேர்ட் பிளேக்கின் ஆலோசனை அல்லது கருத்து ஏற்புடையதே. ஆயினும் மேற்கூறிய மூன்று அம்சங்கள் சார்ந்த செயற்பாடுகள் நடைமுறைக்கு வந்த பின்னரே அது குறித்துச் சிந்திப்பது உகந்தது, நல்லது.

# தேசிய பாதுகாப்பு தினநிகழ்வு இந்தவருடம் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம் டிசெ.17

எதிர்வரும் 26ஆம் திகதி தேசிய பாதுகாப்புத் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வருடத்துக்கான தேசிய பாதுகாப்பு தினம் யாழ்.மாவட்டத்தில் நினைவு கூரப்படவுள்ளது.

அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

பிரதேச செயலர் பிரிவுகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் கடமையாற்றும் சகல கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு பொதுவான அழைப்பிதழ் வழங்கி எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பதாக அவர்களது விவரங்களை அனர்த்த முகாமைத்துவப் பிரிவில் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர்கள் உதவி அரச அதிபர்களுக்கு யாழ்.மேலதிக அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

விவரங்களை வன் பிரதியாகவும் மென் பிரதியாகவும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேற்படி உத்தியோகத்தர்களின் பெயர்,பதவி, அலுவலக முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் தொலை பேசிஇலக்கம்(அலுவலகம்) கையடக்கத் தொலை பேசி இலக்கம்போன்ற விவரங்களே சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-201)

## மீள்குடியேற்ற அமைச்சர் திங்களன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.17

மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன், பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோர் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றனர். அண்மையில் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வில் அமைச்சர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை வன்னிக்குச் செல்லும் அமைச்சர்கள் அங்கு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருள்கள் அடங் கிய பொதிகளை வழங்கவுள்ளனர். இதன் பின்னர் யாழ்ப்பாணம் வரும் இந்த அமைச்சர்கள் இங்கும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிப் பொருள்கள் வழங்குவார்கள். (த)

## பாடசாலைகளுக்கு உதவி வழங்க "ஈயூபோரம்" நிறுவனம் முன்வந்துள்ளது

வலி.வடக்கு, டிசெ.17

யாழ்.மாவட்டதில் இயங்கும் பாடசாலைகளின் தேவைகருதி பாடசாலைகளுக்கு உதவிகளை வழங்குவதற்கு யாழ்ப்பாணத்தில் உள்ள "ஈயூ போரம் " நிறுவனம் முன் வந்துள்ளது.

யாழ்.குடாநாட்டுப் பாடசாலைகள் பலவும் பின்தங்கிய நிலையில் இருப்பதைக் கருத்திற்கொண்டு உதவி வழங்க முன்வந்துள்ளதாக ஜேர்மனியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் "ஈயூ போரத்"தின் தலைவர் சட்டத்தரணி இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பாடசாலைகள் தமது தேவைகள் மற்றும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை என்பவற்றின் விவரங்கள் அடங்கிய அறிக்கையை தலைவர் ஈயூபோரம்" 29 பழம் றோட், கந்தர் மடம், யாழப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் மொழி அறிவூட்டுவதில் செயற்பட்ட இந்த நிறுவனம் அடுத்த ஆண்டில் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் தேவையும் அவரசமும் என்னும் தொனிப் பொருளில் உதவிகள் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

## "பனைமரக்காடு" திரைப்பட ஆரம்ப விழா

" ஏஏ மூவிஸ்" சர்வதேச திரைப்படநிறுவனம் தயாரித்து வழங்கவுள்ள "பனைமரக்காடு" என்னும் திரைப்படத்திற்கான ஆரம்ப விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வரவரதராஜப் பெருமாள் கோயிலில் (பெருமாள் கோயில்) விஷேட பூசைகளினைத் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர் இந்திய, இலங்கை கலைஞர்கள் கூட்டாக இணைந்து இந்தத் திரைப்படத்தில் பணியாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேற்படி நிறுவனம் ஏற்கனவே "பேசாத கண்ணும் பேசுமே", "கோடம்பக்கம்" முதலான திரைப்படங்களைத் தயாரித்துள்ளது.

'ஏஏ மூவிஸ்' சர்வதேச நிறுவனத்தினர் நடத்திய குறும்படப் போட்டிக்கான விருது வழங்கும் நிகழ்வு அன்றையதினம் ரில்கோ விருந்தினர் விடுதியில் மலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (201)

# இரணைமடுக்குளம் மீன்பிடித் தடையினால் 228 குடும்பங்கள் வாழ்வாதாரமின்றித் தவிப்பு

### சிறிதரன் எம்.பி. வவுனியா இராணுவப் பொறுப்பாளருக்குக் கடிதம்

கிளிநொச்சி, டிசெ.17

இரணைமடுக் குளத்தில் மீன் பிடிக்க அனுமதிக்கப்படாததால், சாந்தபுரத்தில் மீள் குடியமர்த்தப்பட்ட 228 குடும்பங்கள் வாழ்வாதாரம் இன்றி தவிக்கின்றன. எனவே, இவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் இரணைமடுக் குளத்தில் மீன்பிடிக்க அனுமதி வழங்கவேண்டும்.

மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்து கூட்டமைப்பு எம்.பியான எஸ்.சிறிதரன் வவுனியாவுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் ராஜ குருவுக்கு அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இரணைமடுக் குளத்தில் மீன் பிடிப்பதை வாழ்வாதாரமாகக் கொண்ட 228 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டு நான்கு மாதங்களாகின்றன. ஆனால் இவர்களுக்கு இதுவரை இராணுவத்தால் இரணைமடுக் குளத்தில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவில்லை. இதேவேளை, இவர்களுக்கு நிவாரணமாக மாதமொன்றுக்கு பத்து கிலோ அரிசியும், பத்து கிலோ கோதுமை மாவுமே குடும்பமொன்றுக்கு வழங்கப்படுகிறது. இந்த நிலையில் இக் குடும்பங்கள் தமது ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

இரணைமடுக் குளத்தில் பெரும்பான்மை இன சிங்கள மீனவர்கள் தம் பலகாமம் வழியாக வந்து மீன் பிடித்து உழவு இயந்திரங்களில் ஏற்றிச் செல்வதாகவும் சிறிதரன் எம்.பி மேஜர் ஜெனரல் ராஜகுருவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். (சி)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 03 | 18.12.2010 |
| | சனிக்கிழமை |
| திதி: | : துவாதசி |
| | பி.ப. 02.43 வரை |
| நட்சத்திரம் | : பரணி |
| | பி.ப. 03.44 வரை |
| சுபநேரம் | : 03.23-04.53வரை |
| ராகுகாலம் | : 09.23-10.53 வரை |

சனிப்பிரதோஷம்

## உயிருக்கு நலம் பயக்கும் பிரார்த்தனை

ஞானக்கதிர்

நாம் கடவுள் நினைப்புடன் என்றும் வாழ வேண்டியவர்கள். அதற்கு ஒரு வழி பிரார்த்தனையாகும். இறைவனுடன் கொள்ளுகின்ற உறவுதான் பிரார்த்தனை என்றும், அதன் மூலம் எமது எண்ணங்களை இறைவன் பற்றியதாக மேல் நிலைக்கு உயர்த்துகிறோம் என்றும் பெரியோர் கூறியுள்ளனர். கடவுளைச் சிந்தித்தல், துதித்தல், நாமங்களை உச்சரித்தல், தோத்திரஞ்செய்தல் என்பவற்றில் ஈடுபடும் நேரம் தவப்பொழுது ஆக அமைகின்றது. அவனைப் பற்றி " பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்கிறார் ஒரு அருளாளர்.

" பிரார்த்தனை ஆத்மாவின் அத்தியாவசியத் தேவையாகும். ஒவ்வொருமுறையும் கடவுளின் பெயரைத் திரும்பச் சொல்லும் போதும் கடவுளின் அருகே நீங்கள் வருகிறீர்கள்.." என்கிறார் காந்தியடிகள். மகாத்மா காந்தி, பிரார்த்தனை மூலம் தான் மாபெரும் சாதனைகளையெல்லாம் நிலை நாட்டினார். நாம் கடவுளுக்கு அருகில் இருக்கும்போது எவ்வித அச்சமும் இருக்காது. அவருடன் அளவளாவி அவரைக் கேட்டு எல்லாக் காரியங்களிலும் இறங்கலாம். கடவுளை முன்வைத்து அவர் சம்மதத் துடன் செய்யப்படும் காரியங்கள் அனைத்தும் நன்மையானவையா கவே விளங்கும்.

எமது உடல் தேவைகள், உலகியல் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றி விடுவதில் எமக்குள்ள தவிப்பும் தாகமும், துடிப்பும் பிடிப்பும் எமது ஆன்மாவின் தேவைகளை யும் நிறைவேற்றுவதில் இருக்கு மாயின் எத்துணை நல்லதாகவும் நன்மை யாகவும் இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உடலின் தேவை போன்றுதான் உயிரின் தேவையையும் உடனுக்குடன் நிறைவு செய்யவேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். உடல் தேவையை நிறைவேற்றா விட்டால் உடலுக்கு உபாதை வருத்தம் ஏற்படுகின்றன. அது போலத் தான் உயிரின் ஆன்மாவின் தேவைகளையும் நிறைவேற்றாவிட்டால் உயிருக்கு உபாதையும் வருத்தமும் ஏற்படுகின்றன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். உடலை வருத்தக் கூடாது என்று நினைக்கும் நாம் எமது உயிரை வருத்தலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழியில் ஏற்படுகின்ற பாண்டித்தியம் பல்வேறு துறைகளையும் வளர்க்க உதவும்

## பொன்.சுகந்தன் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.17

தமிழ்மொழியில் ஏற்படுகின்றன பாண்டித்தியம் அதனோடு தொடர்புடைய பேச்சு, கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், நாடகம், சமயம் போன்றவற்றை வளர்க்கவும், வளப்படுத்தவும் உதவுகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் ஞானவித்தகர் பொன். சுகந்தன்.

சதாவதானி கதிரவேற்பிள்ளையின் நினைவு தின நிகழ்வில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

சதாவதானி கதிரவேற்பிள்ளை தமிழ் மொழியிலே பாண்டித் தியம் பெற்றதன் காரணத்தினாலேதான் அவர் பலதுறைகளிலும் வளர்ந்து செல்வதற்குக் காரணமாக இருந்தது.

பேச்சு வன்மை கொண்ட இவர் சைவத்தினை வளர்க்கும் பொருட்டும் பிரசங்கங்களை நிகழ்த்தி வந்தார். சதாவதானி கதிரவேற்பிள்ளையின் பேச்சு வன்மை காரணமாக இவரது ஆசிரியர்களே இவருக்குச் சைவசித்தாந்த மகாசரபம் எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளனர். இத்த கைய பேச்சுத்திறன் கொண்ட சதாவதானி ஆறுமுகநாவலர் போன்றே கண்டனப் பிரசங்கங்களும் நிகழ்த்தியுள்ளார். தமிழிலும் வடமொழியிலும் மிகச்சிறந்த பாண்டித்தியம் பெற்ற கதிரவேற்பிள்ளை எழுதிய இந்நூல்கள் வேதாகமங்கள், புராணங்கள் முதலிய பெரு நூல்கள் குறிப்பிடும் செய்திக ளைச் சரியாகவும் தெளிவாகவும் உரை நடையில் தருகின்ற பான்மையினால் சைவக் கருத்து களஞ்சியங்களாக விளங்கு கின்றன. இதனால் பல சைவக் கோயில்களும் சபைகளும் இவரது உரை நடை நூல்களை பிரமாணங் களாகக் கொண்டு விளங்குகின்ற தன்மையையும் காணமுடிகின்றது.

சந்நிதிக் கந்தன்மீது புதுச் சந்திநிதிக் கந்தர்பிள்ளைத் தமிழ் எனும் பெயரிலான பிரபந்தம் ஒன் றைப் பாடியுள்ளார். இவரது செய்யுள்கள் பலவும் அணி இலக்கண நூல்கள் காட்டும் சொல்பொருள் அலங்காரங்களைப் பெற்றுத் திகழ்கின்றன. இவை தவிர தமிழ் சமய நூல்கள் அழிந்து போகாத வண்ணம் அவற்றினைப் பதிப்பித்து அவற்றுக்குப் புத்தொளி கொடுத்தார்.

பதிப்புப் பணியிலே ஆறுமுக நாவலர் போன்று பெரும் சேவையினை சதாவதானி கதிரவேற்பிள்ளை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகமே வியக்கும் முகமாக சதாவதானமாட்சி செய்து தன் ஆளுமையின் விஸ்வரூபத்தினை வெளிப்படுத்தினார். 24.02.1907 ஆம் ஆண்டு சென்னை இலக்குமி விலாச மண்டபத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்திருக்க சதாவதானம் செய்து காட்டினார். கதிரவேற்பிள்ளையிடம் கேள்விக்கணை தொடுப்பதற்காக பல்துறை சார்ந்த அறிஞர்கள் சூழ்ந்து நின்று கேள்விக்கணைகளைத் தொடுத்தபோதும் அவையாவற்றையும் உடனே உள்வாங்கி விடையும் கூறி வெற்றியும் கண்டு ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானித்த சாதனையால் சதாவதானி எனும் பட்டமும் பெற்று உலகெங்கும் தமிழின் பெருமையை உணரச் செய்தவர்.

சதாவதானி கதிரவேற்பிள்ளை போன்ற பேரறிஞர்களால் வளர்க்கப்பட்ட செம்மொழியான தமிழ்மொழியை நாமும் பேணிக் காத்துத் தமிழுக்கு வளம்சேர்க்க வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழ் மகனிடத்திலும் தங்கி உள்ளது. அக்கடமை உணர்ந்து தமிழையும் பண்பாட்டினையும் வளமாகக் காத்திட வேண்டும் என்றார்.

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத் தலைவர் குகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி முல்லை பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

(204-236)


ASIAN UNIVERSITY FOR WOMEN

The Asian University for Women, located in Chittagong, Bangladesh, is a new and unique institution of higher learning offering an innovative curriculum combining the best of the liberal arts tradition with professional training. The Office of Admissions at AUW seeks promising, talented and dynamic students from South and South East Asia who aim to make a difference.

**Eligibility Criteria**

- Be a female between the ages of 17-25 years
- Have completed GCE Advanced Level
- Have demonstrated leadership potential, commitment, and the ability to work for positive social change
- Have secured an average of 60% or equivalent grades in her final examinations with a minimum score of 60% English and Mathematics in her GCE Ordinary Level Examination.

Applicants will be evaluated for admission based on the entrance exam, personal interview, academic achievement, community commitment and leadership intent. While all applicants are initially considered for the undergraduate program, if a promising applicant's performance on the entrance exam shows the need for additional academic preparation, she will be admitted to the Access Academy. Access Academy Programme is One year pre-university program which is designed to build and develop the requisite English, Mathematics, and Computer skills in young women so that they are adequately prepared for AUW's Undergraduate program.

AUW offers Bachelor of Arts (B.A.) or Bachelor of Sciences (B.Sc.) degrees in the following Concentrations

1. Politics, Philosophy and Economics
2. Environmental Sciences
3. Public Health Studies
4. Biological Sciences
5. Asian Studies

In the next several years, the AUW plans to introduce new majors in the social sciences, including sociology, psychology, and anthropology.

AUW is on track to be accredited by the New England Association of universities & colleges, who also accredits Harvard and many other major universities in the United States and around the world.

AUW prepares the students to apply and compete for scholarships to the best graduate programs around the world, including masters and doctoral programs in the social sciences, sciences, humanities, public policy, international relations, and journalism, as well as professional programs in Public Health (MPH), and Medicine (M.D) if students choose either Public Health Studies or Biology as their majors. In addition the AUW prepares students for the study of business and management (M.B.A.) and law at the graduate level.

**Application forms may be obtained from the recruitment coordinator**
**Prof.A.Navaratnarajah**
Consultant/Director
Sewa Lanka Tertiary Education Programme
Sewa Lanka Foundation
432 A, Colombo Road,
Boralesgamuwa
Tel: 0113166334,0113166335 Mobile: 0777739261
Fax: 0112516240Email: anavaloga22@gmail.com

**For more information**
**Sewalanka Foundation**
Sewa Illam
54/2, Palaly Road
Kondavil
Tel: 0212228361
0212229850
0217451760
0217451761
Fax: 0212229850

**For more information/ forms: http://asian-university.org**

**Applications are due on 28th of February 2011**

*We encourage you to consider the Asian University for Women for your higher studies and discover your potential*


### முட்டை விலை உயர்வு

குருநகர்,டிசெ.17

யாழ்ப்பாணத்தில் கோழி முட்டையின் விலை அதிகரித்துச் செல்கின்றது. 12ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட கோழி முட்டை தற்போது 18 ரூபா வரை உயர் வடைந்துள்ளது.

இதேவேளை கிறிஸ்தவர்களின் நத்தார் மற்றும் புது வருட தினத்தை அண்மித்த நிலையில் கோழி முட்டை விலை மேலும் உயர்வடையலாம் என அந்த மக்கள் கூறுகின்றனர்.

(201-51)

### சங்கானை வைத்தியசாலைக்கு மருந்துப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.17

சங்கானையைச் சேர்ந்த ''கந்தசாமி அன் சன்ஸ்'' உரிமையாளர் இந்திரகுமார் தனது மனைவியின் இறந்தநாள் நினைவாக சங்கானை பொது வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி மருந்துப் பொதிகளைப் பொது வைத்தியசாலை அதிகாரி செல்வநாயகத்திடம் நேற்று வியாழக்கிழமை வழங்கியுள்ளார். (204-313)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி மீ.செல்லையா
அவர்களின் அன்புக் கணவரும், கல்லூரி ஆசிரியை
திருமதி ப. தாமோதரகுமார் அவர்களின் சகோதரருமாகிய

**முருகேசு செல்லையா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி

## Vacancy


கொழும்பைத் தலைமையகமாகவும் யாழ்ப்பாணத்தை பிராந்திய நிலையமாகவும் கொண்ட நிதி நிறுவனத்துக்கு, யாழ்.குடா மற்றும் வன்னிப் பிரதேசத்தில் வெகுவிரைவில் கிளைகளை ஆரம்பிக்க இருப்பதால் ஆண்/பெண் இருபாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமை:**
★ க.பொ.த. (ச/த) கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி

**மேலதிக தகைமை**
★ க.பொ.த. (உ/த) சித்தி
★ சந்தைப்படுத்தல் அனுபவம்
★ நிதியியல் துறை அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**நேர்முகத்தேர்வு:**
★ நாளை (18.12.2010) சனிக்கிழமை
★ இடம்: யாழ்ப்பாண Tilko City Hotel
கேட்போர் கூடம்
(பிரதம தபால் கந்தோருக்கு அருகில்)
★ நேரம்: காலை 9 மணி

## மரண அறிவித்தல்



**சங்கரப்பிள்ளை நடராசா**
(புகையிரத திணைக்கள ஓய்வுநிலை ஊழியர்)

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நடராசா (14.12.2010) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் இரண்டாவது புத்திரனும் இரத்தினம்மாவின் அன்புக் கணவரும் நல்லம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ஏரம்பமூர்த்தி, செல்லப்பா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஸ்ரீபுவனேஸ்வரி (ஜேர்மனி), ஸ்ரீதயானி (பிரான்ஸ்), ஸ்ரீறயனி (S.D.O., உடுவில் பிரதேச செயலகம்), ஸ்ரீகாந்தா (ஜேர்மனி, முன்னாள் C.O, நெடுங்கேணி பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவராசா,தர்மராஜா, சுதாகர், ஆகியோரின் அன்பு மாமனும் தாட்சாயினி, இந்துஜா, தனிஷா, தர்மியா, கெபின், ஸ்ரீசுதன், ஸ்ரீசுகந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.12.2010) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாநிதி வீதி,
ஏழாலை வடக்கு, ஏழாலை.
தொ.பே: 021 5680049, 0772032665

தகவல்:
குடும்பத்தினர்
(107439)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்த் தர்க்கம் வாள்வெட்டில் முடிந்தது

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்.நகரில் தனியார் பஸ் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்த் தர்க்கம் பிற்பகல் வாள்வெட்டில் முடிவடைந்தது. இந்தச் சம்பவத்தில் மூவர் வாள்வெட்டுக் காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

யாழ்.பஸ் நிலையத்தில் தரித்து நின்ற யாழ்.கொழும்பு தனியார் பஸ்ஸுல் பயணியில்லாத பெண் ஒருவர் ஏறி, பஸ்ஸில் பொருத்தப்பட்டிருந்த தொலைக்காட்சியில் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.


இதனை அடுத்து நேரக்கணிப்பாளருக்கும் குறித்த பெண்ணுக்குமிடையே வாய்த்தர்க்கம் இடம்பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் குறிப்பிட்ட பெண்ணின் உறவினர்கள் சிலர் பஸ் நிலையத்துக்கு வந்து நேரக்கணிப்பாளருடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இது முற்றிய நிலையில் வாள் வெட்டு இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இடம்பெற்ற இழுபறியை அடுத்து பெண்ணின் சகாக்களும் வாள்வெட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் மட்டுவிலைச் சேர்ந்த எஸ்.செல்வராஜா (வயது-55), மற்றும் சுழிபுரத்தைச் சேர்ந்த ரா.ராஜேந்திரன் (வயது-40), கட்டைப்பிராயைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பிராஜா (வயது-58) ஆகிய மூவரும் வெட்டுக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-319)

# அகலமாக்கி புனரமைக்கப்படும் வீதியில் மழையை அடுத்துப் பெரிய குழிகள்



அச்சுவேலி,டிசெ.17

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் வீதி அகலமாக்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட இடங்களில் குறிப்பாக ஆவரங்கால் பகுதியில் மழையை அடுத்து பெரும் குழிகள் காணப்படுகின்றன.

புதிய வீதியில் மழை நீர் தேங்கி நிற்கக் கூடிய அளவுக்கு பெரிய குழிகள் காணப்படுவதால் வீதியின் அமைப்பு முறையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் குறைபாடோ மழைநீர் அரிப்போ காரணம் என பொது மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

கருங்கல் பயன்படுத்தாமல் யாழ்.குடாநாட்டு சுண்ணாம்பு கல் பயன்படுத்தப்பட்ட பகுதிகளிலேயே கணிசமான அளவு குழிகள் காணப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

வீதி அகலமாக்கப்பட்டு உரிய முறையில் கையளிக்கப்படாத நிலையில் மழையை அடுத்து குழிகள் காணப்படுவதால் எதிர்காலத்தில் வீதியின் நிலை எப்படி இருக்கும் எனப் பொதுமக்கள் தரப்பில் கேள்வி எழுப்பப்படுகிறது. (ம-11)

# காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு; வர்த்தகருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம்

தென்மராட்சி,டிசெ.16

கொடிகாமம் நகர்ப் பகுதியில் விற்பனைத் திகதி காலாவதியான பொருள்கள் விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம்ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகரும் சாவகச்சேரி பொலிஸ் நிலைய விசேட பிரிவினரும் இணைந்து கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய திடீர் பரிசோதனையின்போது அகப்பட்ட வர்த்தகருக்கு எதிராக நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிபதி எஸ்.எம்.எம்.அப்துல்லா வர்த்தகருக்கு 5ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார். (204-207)

## பொக்கணை கிணற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்க கோரிக்கை

நாவற்குழி, டிசெ.17

ஊறெழு, பொக்கணை கிணற்றிலிருந்து குடிதண்ணீர் வழங்குமாறு இருபாலைப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்த கோரிக்கை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் முன் வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இப் பிரதேச மக்கள் குடிதண்ணீர்ப் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் இவர்களின் கோரிக்கை குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமென சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (204-121)

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மணிவாசகர் விழா இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.17

காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் மணிவாசகர் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை ஈழத்துச் சிதம்பர ஆலய வசந்த மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு தொடர்ந்து ஐந்து நாள்கள் நடைபெறும்.

முதலாம் நாள் நிகழ்வில் மாலை 5.30 மணிக்கு மு.சுந்தரலிங்கம் திருவாசகத் திருமுறை ஓதலை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்வில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் 'ஈசனவன் எவ்வுயிர்க்கும்' என்னும் தலைப்பிலும் காரைநகர் மணிகவாசகர் சபை முன்னாள் செயலாளர் ஆ.செந்தில்நாதன் 'திருவெம்பாவை' என்னும் தலைப்பிலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் சைவசமயப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பரிசில்களை வழங்கவுள்ளார். (204)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சுதந்திரம் பெற்றவை...



உரிமையுடன்: கட்டாக்காலிக் கால்நடைகளினால் வீதியில் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். யாழ்.பிரதான வீதியின் குறுக்கே கட்டாக்காலிக் கால்நடைகள் நிற்கின்றன. இதனால் சிரமத்தின் மத்தியில் மக்கள் பயணிக்கின்றனர். (23)

## யாழ். போதனா வைத்தியசாலை

# வெளிநோயாளர் பிரிவில் உரிய மருந்துகள் இன்மையால் மருந்தகங்களை நாடும் மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் உரிய மருந்துகள் இன்மையால் நோயாளர்கள் தனியார் மருந்துக்கடைகளை நாடிச் செல்கின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவரால் வழங்கப்படும். அனுமதிச் சிட்டையுடனே தனியார் மருத்துவமனையில் பணத்திற்கு மருந்துகளைப் பெற்றுவிட்டு மீண்டும் அதே பற்றுச் சீட்டை வெளிநோயாளர் பிரிவில் ஒப்படைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நோயாளர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

தனியார் மருந்துக்கடைகளில் இது பற்றி வினாவிய போது:-

அதிகமானோர் தற்போது இது போன்ற பற்றுச் சீட்டுடன் தான் வருகின்றார்கள். அத்துடன் பலர் மருந்துகளைப் பெறுவதற்கு போதியளவு பணம் இல்லாமல் திரும்பியும் செல்கின்றார்கள் - என்றும் தெரிவித்தனர்.

அரச பொது வைத்தியசாலையிலே இது போன்ற சம்பவங்கள் தொடருமானால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிவருமெனக் கூறப்படுகின்றது. (ம-313)

# ஜனவரியில் வர்த்தகக் கண்காட்சி பங்கேற்க விரும்புவோர் பதிவு செய்க

## வர்த்தகத் தொழில்துறை மன்றத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் டிசெ,17

'சர்வதேச வர்த்தகக் கண்காட்சி - 2011' எனும் மாபெரும் கண்காட்சி நிகழ்வு ஜனவரி மாதம் இடம்பெறவுள்ளது.

இதில் பங்கேற்க விரும்பும் வடமாகாண உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநபர்களை உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்.வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் எந்திரி கே.பூரணச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :

'வர்த்தகத்துக்கான திறவுகோல்' எனும் தொனிப் பொருளிலான இந்தக் கண்காட்சி ஜனவரி மாதம் 21, 22, 23 ஆகிய திகதிகளில் யாழ். சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாகவுள்ள பிரதான வீதியில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ். துரையாப்பா விளையாட்டு மைதானத்தில் நடத்த ஏற்படாகியிருந்தது. அது பின்னர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இருநூறிற்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்கள் அமையப் பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் 20 இற்கும் மேற்பட்ட காட்சிக் கூடங்களை வடமாகாண உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

இதுவரையும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் 10 பேர் மட்டுமே பதிவு செய்துள்ளனர்.

யாழ்.ஆணைப்பந்தியில் இல.175 இல் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழில் துறை மன்ற அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளார். ([illegible])

## தேங்காயின் விலை குடாநாட்டில் உயர்வு

வடமராட்சி, டிசெ.17

யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது.

முன்னர் 25 - 35 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வந்த தேங்காய் தற்போது 35 - 45 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (201-236)

## குடத்தனை பகுதிகளில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

வடமராட்சி, டிசெ.17

வடமராட்சி கிழக்கிலுள்ள குடத்தனை, அம்பன் பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

அம்பன் பொது சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோவின் தலைமையில் பொற்பதி இராணுவ அதிகாரியின் ஒத்துழைப்புடன் பொது இடங்கள், தேவாலயங்கள், கோயில்கள், பாடசாலைகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (201-236)

# திருமறைக்கலா மன்றத்தின் தயாரிப்பில் 'அசோகா' நாடகம் நாளை மேடையேற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

திருமறைக்கலா மன்றத்தின் தயாரிப்பில் பாரத தேசத்தின் பிரமிப்பு மிக்க பெருமன்னனான அசோகச் சக்கரவர்த்தியின் வரலாற்றைக் கூறும் ''அசோகா'' என்னும் வார்த்தைகளற்ற நாடகம் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

இலங்கையில் பல்வேறு பிராந்தியங்களிலும் இயங்கும் திருமறைக் கலாமன்றங்களைச் சேர்ந்த பல்லின இளைஞர்களை இணைத்து இந்த நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டில் இருந்து தலைநகர் கொழும்பை மையப்படுத்தி 'அசோகா' நாடகத்தை திருமறைக் கலாமன்றம் பலதடவைகள் மேடையேற்றி வந்துள்ளது. யுத்தம் நடைபெற்ற காலத்தில் யுத்தத்தின் குரூரத்தை பலருக்கும் வெளிப்படுத்த இந்த நாடகத்தை மேடையேற்றிய மேற்படி மன்றம் இம்முறை அசோகச் சக்கரவத்தியின் யுத்தத்துக்குப் பின்னான ஆக்கச் செயற்பாடுகளையும், அகிம்சை செயற்பாடுகளையும் வலியுறுத்தும் படைப்பாக இதனைத் தயாரித்துள்ளது.

மேற்படி நாடகம் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டதன் பின்னர் தொடர்ந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்திலும் எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலும் மேடையேற்றப்படவுள்ளது.

'அசோகா' நாடகத்திற்கான நெறியாள்கையை திருமறைக் கலா மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் மேற்கொண்டுள்ளார் (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்கின்றோம்

எமது அன்புக்குரிய நண்பன் சதானந்த சர்மா
(IDM பணிப்பாளர், சங்கானை)
அவர்களின் பாசமிகு தந்தை
பிரம்மஸ்ரீ சிவானந்தகிரி
நித்தியானந்தக் குருக்கள்
இறைபதம் அடைந்த செய்தி அறிந்து
மிகுந்த துயரடைவதுடன் அன்னாரின்
மறைவில் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரின்
ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.



தி.மயில்வாகனம்,
யோ.இதயராஜா.
(நண்பர்கள்)



# கண்ணீர் அஞ்சலி



பிரம்மஸ்ரீ சிவானந்தகிரி
**நித்தியானந்தக் குருக்கள்**
*(பிரதம குரு, சங்கானை இலுப்பைத் தாழ்வு வெல்வில் முருகன், சங்கானை சிலம்புப்புளியடி வைரவர் ஆலயம்)*

15.12.2010 அன்று புதன்கிழமை இறைபதமடைந்து விட்டார். அன்னாரின் பிரிவுத் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.* மு.கதிரவேலு குடும்பத்தினர்.



## SALE! SALE! SALE!

நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு — அதிரடி விலைக்கழிவு

எமது அன்பு வாடிக்கையாளரின்
வேண்டுகோளுக்கிணங்க
*01.12.2010 - 31.12.2010 வரை*

ஆடவர், பெண்கள், சிறுவர்களுக்கான அனைத்துப் புடைவைத் தினுசுகளையும் மாணவ மாணவிகளுக்கான சீருடைத் துணிவகைகளையும் மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**லைடன் புடைவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.



# உங்கள் நகரில் JAFFNA

STUDY 18-12-2010
HOTEL LOVUSI
(Hospital Junction Jaffna - Near BOC)
காலை 9.00 மணி முதல் ....
SPOT ADMISSION

UK
2011 மார்ச் மாதம் அமுலாகவுள்ள UK மாணவர் வீசா புதிய சட்ட அமுலாக்கலுக்கு முன்னர் உங்கள் வீசாவினை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.....

அடிப்படைத்தகமை GCE (O/L)
IELTS - தேவையில்லை
சிறந்த சட்டவல்லுனர்களின் ஆலோசனை
நம்பகரமான Sponsorship

முற்பதிவுகளுக்கு.....
0777113777

100% VISA GUARANTEED

INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD
No:538-3/1, Galle Road, Colombo - 03, Sri Lanka. | Branch: Kalmunai
E-mail: info@ibtedu.lk | Web : www.ibtedu.lk

*We raise the limits to your Success.....*


# ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 541
சீட்டிழுப்பு திகதி: 15.12.2010

வெற்றி எழுத்து: Q வெற்றி இலக்கங்கள்: 20 30 40 70

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு.14,232,699.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000/- | 235 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரு. 1,000/- | 462 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 100/- | 11610 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரு. 40/- | 6729 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 167691 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 26734 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரு.7,750,660.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர 2470662, 2470663
தொலைநகல் 4607000, 2433631
இணையத்தளம் www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரு.14,456,538.40

# வைத்திய அதிகாரி இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 17

புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியாகக் கடமைபுரிந்த பதிவுவைத்திய அதிகாரி கே.சண்முகரத்தினம் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (201-300)

# தமிழருவி சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 17

அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மாதாந்தம் வெளிவரவுள்ள 'தமிழருவி' கலை, இலக்கிய, சமூக, விஞ்ஞான சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

பல்துறை சார்ந்த கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் ஆகியவை எழுத்தாளர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. தொடர்ந்து ஆக்கங்களை எழுதும் எழுத்தாளர்களுக்குச் சன்மானம் வழங்கப்படவுள்ளது.

ஆக்கங்களை 'ரி.கணேசமூர்த்தி, சிவகுலவீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (201-55)

# கைதடி முதியோர் இல்லத்திற்கு கழிவகற்ற லாண்ட்மாஸ்ரர்

யாழ்ப்பாணம், டிசெ. 17

கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு லான்மாஸ்ரர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் திணைக்களம் இந்த வாகனத்தை வழங்கியுள்ளதாக இல்லத்தின் அத்தியட்சகர் என்.இராமலிங்கம் தெரிவித்தார். தேங்கும் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கும் விவசாயத் தேவைக்குப் பயன்படுத்தவும் இது வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனைவிட இல்லத்தில் தங்கியிருந்த வயோதிபர்களின் போக்குவரத்து வசதிகருதி பஸ் ஒன்றை வழங்குவதற்கும் சமூக சேவைகள் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்று இல்ல அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ம-26)


## வீடு விற்பனைக்குண்டு

மானிப்பாய் சந்தை, முன் ஒழுங்கையில் 3 பரப்புக் காணியுடன் புது வீடு விற்பனைக்குண்டு.
*தொடர்பு - 0212225583, 0213002727*

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No. 1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள் நியாயமான விலையில் 23.12.2010 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.
(பின்பு 100 வீதம் இறைச்சிக் கோழிகள் திருப்பி வாங்கப்படும்)
**நல்லூர் பாம் சென்ரர்.**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6944

## கோழிக் குஞ்சு விநியோகம்

பிறிமா NO 1 புறொயிலர் குஞ்சு உடன் விற்பனைக்குண்டு
**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர், 0212226944

## பிரத்தியேக வகுப்புக்கள் MATHEMATICS

*English Medium Classes
Grade 06 to 09
*தமிழ்மொழிமூல கணித வகுப்புகள் தரம் 06 தொடக்கம் 11 வரை T.P: 0776253876

## வீடு உடனடியாக விற்பனைக்குண்டு

பருத்தித்துறை கிராமக் கோட்டடியில், பிரதான வீதியில் 1பரப்புக் காணியுடன் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774723419

## வான் விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள இசுசு 350 ELS (இல47-XXXX) வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: [illegible]
யாழ்.வீதி, வவுனியா.0776529300



## காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, புலவர் வீதியில் 3 பரப்பு வளவுக் காணி விற்பனைக்குண்டு.
தொ.பே. 0770236693, 0779829591


# ஜாதிக சம்பத Jathika Sampatha

சீட்டிழுப்பு இலக்கம் - 82
திகதி - 15.12.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து X அதிர்ஷ்ட இலக்கம் 09 வெற்றி இலக்கம் 4 3 1 7 4

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | பொருந்தும் இலக்கங்கள் | பரிசுத்தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X 09 4 3 1 7 4 | ரு. 24,365,426.00 | 01 |
| 1 பரிசு | 09 4 3 1 7 4 | ரு. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 4 3 1 7 4 | ரு. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 3 1 7 4 | ரு. 10,000.00 | 29 |
| 4 பரிசு | 1 7 4 | ரு. 1,000.00 | 287 |
| 5 பரிசு | 7 4 | ரு. 50.00 | 2825 |
| 6 பரிசு | 4 | ரு. 20.00 | 27013 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | பொருந்தும் இலக்கங்கள் | பரிசுத்தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 7 பரிசு | 4 3 1 7 | ரு. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 4 3 1 | ரு. 100.00 | 280 |
| 9 பரிசு | 4 3 | ரு. 50.00 | 2826 |
| 10 பரிசு | X | ரு. 20.00 | 11182 |
| 11 பரிசு | X 09 | ரு. 100.00 | 1229 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரு. 26,365,776.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசை பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரு.5,000,000.00


# உடன் தேவை

## நேரக் கணிப்பாளர்

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற கம்பனிகளின் இணையத்திற்கு கடமையாற்ற நேரக் கணிப்பாளர் தேவை.

★கல்வித் தகைமை 10ஆம் வகுப்புக்கு மேல். ★வயதெல்லை 20 - 40 வரை

தகைமையுடையோர் கீழுள்ள முகவரிக்கு சுயவிவரக் கோவை யுடன் 23.12.2010 இற்கு முன் நேரில் வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்,
யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்
இல.18, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



# துயர் பகிர்கின்றோம்

எமது சக உத்தியோகத்தர்
**வ.சுகிர்தரன்**
அவர்களின் அன்புத் தந்தை
**நாகமணி வன்னியசிங்கம்**



அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

யாழ்.கூட்டுறவுப் பகுதி உத்தியோகத்தர்கள்,
நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.



# மரண அறிவித்தல்

## செல்லத்துரை பஞ்சாட்சரம்

**(ஆசிரியர், ஸ்ரீபார்வதி வித்தியாலயம், அரியாலை)**



தச்சன்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் இல. 05, கச்சேரி லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பஞ்சாட்சரம் நேற்று (16.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகாம்பிகையின் (முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்)அன்புக் கணவரும் பார்த்தீபன் (மலேசியா), கார்த்தீபன் (முதலாம் வருட மருத்துவ பீட மாணவன்,யாழ். பல்கலைக்கழகம்), காயத்திரி (வேம்படி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா (கொழும்பு), இராஜேந்திரம் (நீர்வேலி), மல்லிகா தேவி, இராசலிங்கம் (பிரான்ஸ்), மகா தேவன் (லண்டன்), இரவிச்சந்திரன் (பிரான்ஸ்),அருள்நேசன் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், பழனிநாதன், வரதலட்சுமி மற்றும் தர்மலிங்கம் (நயினாதீவு), நடேசபிள்ளை (நயினாதீவு) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.05, கச்சேரி லேன்,
சுண்டுக்குளி.*

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் உயரதிகாரிகள் குழு வன்னி விஜயம்

## இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் தொடர்பாக ஆராய

கிளிநொச்சி, டிசெ.17

வன்னியில் யுத்த அனர்த்தத்தினால் பாதிப்புக்குள்ளான கட்டடங்கள் மற்றும் சொத்துக்களின் இழப்பு மதிப்பீட்டை மேற்கொண்டு அவற்றுக்கான கொடுப்பனவை காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கு விரைவில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பானநடவடிக்கைகளை எடுப்பதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தலைவர் மற்றும் உயரதிகாரிகள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் செய்யவுள்ளது.

அன்று காலை 9 மணி முதல் 12 மணிவரை கிளிநொச்சியிலும், பி.ப.12.30 மணிமுதல் பி.ப.2 மணிவரை முல்லைத்தீவிலும் காப்புறுதி இழப்பீட்டுக்கு விண்ணப்பித்தவர்களின் இடங்களை இக்குழுவினர் பார்வையிடுவர்.

எனவே இழப்பீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் அந்த நேரத்தில் தத்தமது கட்டடங்களில் தங்கியிருப்பதுடன் இழப்பை ஆதாரப்படுத்தும் ஆவணங்களையும் தயாராக வைத்திருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

20 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அனைத்து இழப்பீட்டுக் கோரிக்கையாளர்களையும் சந்திக்கும் கூட்டம் கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதன் மூலம் இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பில் போதிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெறுவதற்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு வணிக கைத்தொழில் வேளாண்மை ஒன்றியங்களின் தலைவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## பிரதான வீதிகள் மூடப்பட்டுள்ளதால் வயல்களுக்குச் செல்வதில் சிரமங்கள்

கிளிநொச்சி, டிசெ.17

கரடிப்போக்கு நான்காம் வாய்க்கால் பிரதேசத்தில் வயல்களுக்குச் செல்லும் பிரதான வீதிகள் மூடப்பட்டுள்ளதால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பெரும்போகப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அனேக வயல்களில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. ஆனால் இவற்றிற்குச் செல்லும் பிரதான வீதிகள் மூடப்பட்டுள்ளதால் பசளை வகைகள், உரங்கள் போன்றவற்றை வாகனங்களில் எடுத்துச் செல்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. தற்போது சுற்றுப் பாதைகளூடாகவே இவை எடுத்துச் செல்லப்படுகின்றன.

எனவே தை மாதம் அறுவடை வேலைகள் ஆரம்பமாவதற்குமுன்னால் பரவிப்பாஞ்சான் குறுக்கு வீதியையாவது பாவனைக்குப் பெற்றுத்தருமாறு பொது மக்களும், விவசாயிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-313)

## மனிதனின் உரிமைகள்...



பொருத்தமான போர்வை: சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வில் மனித உரிமைக்கான சட்டத்தரணி வி.எஸ்.கணேசலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகின்றார்.

## கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இலவச பாடநூல் விநியோக விழா

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் இலவசப் பாடநூல் விநியோக விழா கடந்த 8ஆம் திகதி மு.ப 9 மணிக்கு கல்லூரியின் இலவசப்பாட நூல் பொறுப்பாசிரியர் ந.நவரஞ்சன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை பிரதம விருந்தினரான கிளிநொச்சி கல்விவலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் செ.செல்வராசா, கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கெங்காதேவி ஜெயராஜ் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு இலவசப் பாடநூல் தொடர்பான கருக்கீதம் மாணவர்களால் இசைக்கப்பட்டது.

தலைமையுரையினைத் தொடர்ந்து உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் இலவசப் பாடநூல்கள் தொடர்பான உரையினை நிகழ்த்தினார். தொடர்ந்து கிளிநொச்சி இராணுவ அதிகாரி கெலும், பிரதி அதிபர் கெங்காதேவி ஜெயராஜ், பிரதம விருந்தினர் செ.செல்வராசா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து இவ்வருடம் இலவசப் பாடநூல்களைச் சிறப்பாகப் பேணிய ஒவ்வொரு வகுப்பிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட தலா 4 மாணவர்களுக்கு கல்லூரி அதிபர், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோரால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இச் சான்றிதழ்கள் பாடநூல்களைச் சிறப்பாக பயன்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் இலவசப் பாடநூல்களை சிறப்பாகப் பயன்படுத்தியதன் மூலம் தேசிய சொத்தைப் பாதுகாப்பதில் பங்களித்தமைக்காக வழங்கப்பட்டதாகும்.

தொடர்ந்து சான்றிதழ் பெற்ற மாணவர்க்ளுக்கு அடுத்த ஆண்டுக்கான இலவசப் பாடநூல்கள் விருந்தினர்களால் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. பின் மாணவரின் நன்றியுரையினைத் தொடர்ந்து ஆசிரியர் திருமதி ஜெயந்தி கலிஸ்ரஸ் நன்றியுரை வழங்கினார். இறுதியாக மாணவர்கள் தமிழ்மொழி வாழ்த்தினை இசைக்க நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது. (க-405)

## கிணற்றில் தவறி விழுந்து 5 வயது சிறுவன் மரணம்

வவுனியா, டிசெ.17

வவுனியா ஈச்சம்குளம் பகுதியில் வீட்டுக்கிணற்றில் தவறி விழுந்த ஐந்து வயதுச் சிறுவன் மரணமான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அண்மையில் பெய்த கனமழை காரணமாக வவுனியாவில் உள்ள அனேகமான கிணறுகள் நிலமட்டத்துடன் நீர் நிரம்பிய நிலையில் உள்ளன. கடந்த புதன்கிழமை மத்தியானம் முன்பள்ளி முடிவடைந்து வீட்டுக்கு வந்த சிறுவன் தற்செயலாகக் கிணற்றில் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் நடந்து ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னரே வீட்டிலுள்ளோர் சிறுவனைப் பல இடங்களில் தேடிப்பார்த்த போது சிறுவன் கிணற்றில் விழுந்தது தெரியவந்தது. உடனடியாக கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட சிறுவன் வவுனியா பொதுமருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதிலும் உயிரைக்காப்பாற்ற முடியவில்லை. (க-501)

## வேலைகளுக்குச் செல்லும் பாடசாலை மாணவர்கள்

முல்லைத்தீவு, டிசெ.17

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலர் கல்வியில் ஆர்வமில்லாது பிறதொழில்களில் ஈடுபட்டு வருவதாகப் பாடசாலை ஆசிரியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவர்களில் சிலர் இரண்டு சில்லு உழவு இயந்திரங்களின் சாரதிகளாகவும், வயல் வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் 12 தொடக்கம் 13 வயது வரை உள்ளவர்கள். ஆனால் இவர்களின் பெற்றோர்கள் இதனைக் கவனத்தில் கொள்வதில்லை.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு முக்கியமானது. ஆனால் இவர்கள் இதனை உணருவதில்லை. இந்தப் பிள்ளைகள் கல்வியில் அக்கறை செலுத்தாது இவ்வாறான தொழில்களில் ஈடுபடுவதால் இவர்களின் எதிர்காலமே கேள்விக்குறியாக மாறும் அபாயம் உள்ளது. அவர்களின் எதிர்கால வாழ்க்கையே சூனியமாகிவிடும். இதனை உணர்ந்து பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நல்ல வழியைக் காட்டவேண்டுமென இந்த ஆசிரியர்கள் தெரிவித்தனர். (க-500)




## சொந்தமாகக் காணிகள் இல்லாததால் பன்னங்கண்டி, மருதநகர் மக்கள் பாதிப்பு

கிளிநொச்சி, டிசெ.17

கிளிநொச்சி, பன்னங் கண்டி, மருதநகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்டபோதும் சொந்தமாகக் காணிகள் இல்லாததால் பாதிப்புக்குள்ளாவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கு யுத்தத்திற்கு முன்னர் விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட காணிகளுக்கு உறுதிப்பத்திரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை.தற்போது அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் இவர்களை காணிகளைவிட்டு எழும்பிச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கின்றனர்.

இதனால் பன்னங்கண்டியில் 150 குடும்பங்களும், மருதநகரில் 75 குடும்பங்களும் நெருக்கடியில் உள்ளன. அத்துடன் சொந்தக் காணிகள் இல்லாததால் நிரந்தர வீடுகளை அமைப்பதிலும் இவர்கள் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-313)

# அருளை அள்ளி வழங்கும் நாகம்பாள் ஆலயம்

*(நேற்றைய தொடர்ச்சி)*

அவர் திடுக்கிட்டு எழுந்து நடந்தவற்றை மனைவியிடம் கூறிக்கவலை கொண்டார். அப்பாம்புகள் சென்ற இடம் 'நாகம் சொரிந்த சோலை' எனப்பெயர் பெற்றதோடு அவைகள் சென்ற பாதையில் எவ்வித புல் பூண்டும் முளையாதிருந்தது. இப்பாதையினை எனது காலத்திலே நான் பார்த்ததுண்டு. தம்பையா இறந்ததும் அவர் வழிவந்த வாசுத்தம்பி பூசைகளை ஏற்று நடத்தி வந்தார். இக்காலப் பகுதியில் களவு நடந்தால் அங்கே காசு நேர்ந்து வாழைக்குலையில் கட்டிவிடுவார்கள். வாழைக்குலை பழுக்க களவு செய்தவர் இறந்து விடுவார். அதனால் களவு, கொள்ளை போன்ற பாதகச் செயல்கள் அங்கு நடைபெறுவதில்லை. அவருக்கும் பிள்ளைகள் இல்லாத காரணத்தால் அவர் வழி வந்த பெறா மக்கள் உறவுள்ள பெண் பிள்ளைகளான கனகம்மா, பாக்கியம் என இருவரினதும் பொறுப்பிலே இக்கோயில் ஒப்படைக்கப்பட்டது. இதில் கனகம்மா கந்தையா என்பவரைத் திருமணம் செய்து அவரது கணவனைப் பூசைக்கு நியமித்து பொங்கல் நிகழ்வுகளை நடத்திவந்தார். நாக பாம்பிற்குரிய பால், பழங்களை அவரே வைத்து காவல் நின்று அவை சாப்பிட்டதும் எடுத்து வருவார். அவரின் வாக்குப் பலத்தோடுதான் அங்கே பூசைகள் நடைபெறும். அவர் காலத்திலே நாகபாம்பொன்று அதன் வாசஸ்தலத்திலே (உரிய புத்திலே) இறந்து கிடக்க அதனைச் சகல மரியாதைகளுடனும் அடக்கம் செய்தார்கள். வருடம் ஒருமுறை பொங்கல் நடைபெறும். சென்ற இரண்டு வருடங்களுக்கு முன் கந்தையா நோய்வாய்ப்பட்ட போது தனது மகன் சிவராசா என்பவரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தார்.

யுத்த சூழ்நிலை உருவாகியது. முன் கட்டடங்கள் அழிக்கப்பட்டன. பொருள்கள் சூறையாடப்பட்டன. இப்படிப்பல அசம்பாவிதங்கள் நடைபெற்றன. அக்கோயிலுக்கான அன்னதான மண்டபத்தினை இராணுவத்தினர் இயந்திரத்தின் மூலம் இடிக்க முற்பட்டபோது அந்த இயந்திரம் பழுதடைந்தது. மீண்டும் மீண்டும் திருத்திப் பார்த்தார்கள் ஒன்றுமே சரிவரவில்லை. அவர்களுக்கு விளங்கிவிட்டது. இது அம்பாளின் புதுமை என்று. உடனே இடிப்பதை நிறுத்தி விட்டுச் சென்றுவிட்டனர். அதனால் அன்றிலிருந்து எவருடைய வீடும் இடிக்கப்படவில்லை. இப்படியான ஆலயம் இன்று அரை குறையாக உள்ளது. பூசகர் சிவராசா தம்மாலியன்றளவு கோயில் வேலைகளைச் செய்து வந்தாலும் மீண்டும் கட்டியெழுப்பி பல லட்சம் ரூபா தேவையாக உள்ளது. தொடர்ந்தும் பூசைகள் நடைபெற்றுவருகின்றன.

**சிலையூர் தனம்**



*(முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஏகாதசி'யை விட சிறந்த விரதமில்லை

மார்கழி பிறந்து விட்டால் கூடவே விரதங்களும் பிறந்து விடுகின்றன. இன்று மகாவிஷ்ணுவுக்குப் பிரியமான சுவர்க்கவாயில் ஏகாதசி என்றும் வைகுண்ட ஏகாதசி என்றும் அழைக்கப் படுகின்ற மிக்க மகிமை பொருந்திய விரத நன்னாளாகும்.

இது மிகவும் பவ்யமான புனிதமான மங்களம் நிறைந்த விரதமாகும். கங்கையைவிடச் சிறந்த தீர்த்தமும் மகா விஷ்ணுவைவிட உயர்ந்த தெய்வமும் காயத்திரியைவிடச் சிறந்த மந்திரமும் ஏகாதசியைவிட உயர்ந்த விரதமும் இல்லை என்று வைஷ்ணவ புராணங் கள் கூறுகின்றன. வைகுண்ட ஏகாதசி எனப் படும் சுவர்க்கவாசல் ஏகாதசி விர தத்தின் மகிமையை பத்ம புராணமும் பவிஷ்யோத்ர புராணமும் விளக்கிக் கூறுகின்றன.

ஒவ்வொரு பட்சத்துக்கும் அமாவாசைக்குப் பின்னர் வருகின்ற பதினோராவதுநாள், பௌர்ணமிக்குப் பிறகு வரும் பதினோராம் நாள் என்று ஒரு வருடத்திலே இருபத்துநாலு ஏகாதசிகளும் மேலதிகமாக ஒன்றும் சேர்ந்து மொத்தம் இருபத்தைந்து ஏகாதசிகள் இருக்கின்றன. அவையாவன:

உற்பத்தி ஏகாதசி- மார்கழித் தேய்பிறை, மோட்ச ஏகாதசி- மார்கழி வளர்பிறை, பைலா ஏகாதசி- தைத்தேய்பிறை, புத்ரதா ஏகாதசி- தை வளர்பிறை, ஷட்திலா ஏகாதசி- மாசித் தேய்பிறை, ஜயா ஏகாதசி- மாசி வளர்பிறை, விஜய ஏகாதசி-பங்குனி வளர்பிறை, ஆமலகீ ஏகாதசி- பங்குனி வளர்பிறை, பாபமோசனிகா ஏகாதசி- சித்திரைத் தேய்பிறை, காமதா ஏகாதசி- சித்திரை வளர்பிறை, வரூதினி ஏகாதசி- வைகாசித் தேய்பிறை, மோகினி ஏகாதசி- வைகாசி வளர்பிறை,

அபரா ஏகாதசி- ஆனித் தேய்பிறை, நிர்ஜலா ஏகாதசி- ஆனி வளர்பிறை, யோகிநீ ஏகாதசி- ஆடித் தேய்பிறை,

## இன்று சுவர்க்க வாயில் ஏகாதசி விரத நன்னாள்

சயிநீ ஏகாதசி- ஆடி வளர்பிறை, காமிகா ஏகாதசி- ஆவணித் தேய்பிறை, புத்ரதா ஏகாதசி- ஆவணி வளர்பிறை, அஜா ஏகாதசி- புரட்டாதித் தேய்பிறை, பத்மநாபா ஏகாதசி - புரட்டாதி வளர்பிறை, இந்திரா ஏகாதசி - ஐப்பசித் தேய்பிறை, பாபாங்குசா ஏகாதசி - ஐப்பசி வளர்பிறை, ரமா ஏகாதசி - கார்த்திகைத் தேய்பிறை, ப்ரபோதினி ஏகாதசி - கார்த்திகை வளர்பிறை, கமலா ஏகாதசி - மேலதிகமாக ஒன்று.

மார்கழி மாதத் தேய்பிறையில்தான் ஏகாதசி தோன்றியது. ஆதலால் இதனை உற்பத்தி ஏகாதசி என்கின்றனர். மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியே மோட்ச ஏகாதசி என்றும் வைகுண்ட ஏகாதசி என்றும் சுவர்க்கவாசல் ஏகாதசி என்றும் அழைக்கப்பெறுகிறது. ஏகாதசி விரத்தை முதன் முதலாக நோற்கத் தொடங்குபவர்கள் இன்றைய வைகுண்ட ஏகாதசியிலிருந்தே தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும். அதுவே பயன் தரும்.

மாதங்களில் சிறந்தது மார்கழியே. இந்த மார்கழி முழுக்க மகாவிஷ்ணுவின் திருநாள்களேயாகும். அதனால் தான் விஷ்ணு ஆலயங்களில் இந்த முப்பது நாளும் விசேஷட பூசைகள் ஆராதனைகள் இடம்பெறுகின்றன.

ஏகாதசி விரத நாளில் தசமியின் தொடர்பு இருக்கவே கூடாது. காலையில் தசமியிருந்தால் துவாதசியில் விரதங் காத்து திரயோதசியில் பாறணை பண்ணலாம். காலையில் ஏகாதசியும் நடுவில் துவாதசியும் இறுதியில் திரயோதசியும் வந்தல் அது மிக மிக விசேடமான நாளாகும். ஏகாதசியிலன்று காலையில் தசமித் திதியிருந்தால் அதனை ''ஸ்மார்த்த ஏகாதசி'' என்றும் மறுநாள் ''வைஷ்ணவ ஏகாதசியே'' என்றும் கொள்ளப்படும். ஏகாதசி விரதத்திற்குள் வைஷ்ணவ ஏகாதசியே உத்தமமானதாகும். ஆனால் பிதிர்க்காரியம் செய்வதாயின் ஸ்மார்தத்த ஏகாதசியிற் செய்யலாம்.

இன்றைய வைகுண்ட ஏகாதசி விரதம் நோற்பவர்களுக்கு முதல்நாள் ஒருநேர உணவும் ஐம்புலனடக்கமும் தேவை. ஏகாதசியான இன்று முழுநாளும் பட்டினி யாக இருந்து நாம ஜெபமும் விஷ்ணு புராண பாராயண்மும் செய்ய வேண்டும். வீட்டில் இருந்து விரதம் அனுட்டிப்பதாயின் பூஜையறையில் தானியத்தைப் பரப்பி அதிலே தாமரைப் பூ வரைந்து சந்தன பிம் பத்தில் மகா விஷ்ணுவை சங்கற்பித்து ஆவாகனம் பண்ணி வணங்க வேண்டும்.

இந்தச் சுவர்க்கவாயில் ஏகாதசி விரதத்தை விளையாட்டாக எண்ணக்கூடாது. மிகவும் பயபக்தியுடன் நாராயணன் மேல் முழுச் சிந்தனையையும் செலுத்திப் பக்குவமாக அனுட்டிக்கவேண்டும்.

இன்று நித்திரையின்றிக் கண் விழித்து மகாவிஷ்ணுவுடைய தோத்திரங்களையும் நாராயண பக்திப்பாடல்களையும் பாராயணம் செய்து மறுநாள் காலை 8 மணிக்கு முன்னதாகப் பாறணை முடித்தலே உத்தம பலனளிக்கும்.

இந்த வைகுண்ட ஏகாதசிப் பாறணையின்போது அகத்திச்கீரையும் நெல்லிக் காயும் கட்டாயம் சேர்க்கவேண்டும் என்று கூறப்படுகிறது. ஆதலால் நாங்கள் இன்றைய வைகுண்ட ஏகாதசி விரதத்தை முறையாக அனுட்டித்து மகா விஷ்ணுவின் திருவருட்கடாட்சத்துக்குப் பாத்திரமாகி இவ்வுலகில் லக்ஷ்மீ சம்பன்னராக வாழ்ந்து இன்புற்றிருப் போமாக.

சிவநெறிக் கலாநிதி
**இராசையா ஸ்ரீதரன்**

## வலி. கிழக்கில் வாய்க்கால் அமைக்க நிதி ஒதுக்கீடு

கோப்பாய்,டிசெ.17

அனர்த்த முகாமைத்துவ அமைச்சால் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அபாயம் உள்ள இடங்களில் வாய்க்கால்கள் அமைக்க ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வெள்ள அபாயம் உள்ள இடங்களாகப் புத்தூர் மேற்கு 9 ஆவது ஒழுங்கை, சொக்க திடல் ஒழுங்கை ஆகியன இனங்காணப்பட்டுள்ளன.

எனவே இதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்மூலம் இந்தப் பகுதிகளில் வெள்ளநீர் விரைவில் வடிந்தோட வழியேற்படவுள்ளது.

(201-72)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த நிகழ்வு

வடமராட்சி,டிசெ.17

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக்கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வாத்திய இசை நிகழ்வு இடம் பெறும்.

இந்நிகழ்வை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட விரிவுரையாளர் திருமதி ஜனனி நடேசமூர்த்தி, திருமதி ஜனனி செந்தூரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

(204-236)

# நெஞ்சம் அகலா முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்:
14.12.1925

இறைவன் அடியில்:
27.12.2009



அமரர்
## முத்து சுப்பையா

அன்பின் திருவுருவாய் பார்போற்ற
எம் குடும்பத்தின் தன்னிகரில்லாத் தலைவனாய்
இன்ப வழி காட்டி நின்ற எம் தந்தையே!
எம்மை அழுது பரிதவிக்கவிட்டு நீர் மறைந்து
ஓராண்டு சென்றாலும் உங்கள் நீங்கா நினைவுகள்!
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அமைதியடையுமா?

இல.03,
ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகளைக் கைதுசெய்ய பொலிஸாருக்கு உதவி வழங்க இராணுவம் எப்போதும் தயார்

## இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய

கொழும்பு, டிச.16

பல்வேறு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு விட்டு மறைந்து வாழும் குற்றவாளிகளைக் கைதுசெய்யும் நடவடிக்கையில், தேவையேற்படும் போது பொலிஸாருக்கு இராணுவமும் உதவி செய்யும் - என இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய நேற்றுமுன் தினம் தெரிவித்துள்ளார்.

பொலிஸார் கோரும்போது அவர்களுக்கு இராணுவத்தின் உச்சபட்ச ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இவ்வாறு பொலிஸாருக்குத் தேவையான உதவிகளை வழங்க இராணுவத்தினருக்கு பாதுகாப்பு அமைச்சு பூரண அனுமதியை வழங்கியுள்ளது எனவும், அதற்கமைய பயங்கரவாதக் குற்றவாளிகளை மடக்குவதற்கு முன்னரை விடவும் சிறப்பாகச் செயற்பட முடியும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

வரக்காப்பொல அடகு நிலையம் கொள்ளையடிக்கப்பட்டு, இரண்டு பொலிஸ்காரர்களும் சுட்டுக் கொல்லப்பட்ட பின், கொள்ளையர்கள் அறுவரையும் சுற்றி வளைத்து அவர்களை சுட்டு வீழ்த்தியதில் இராணுவமும், பொலிஸாரும் இணைந்து செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வர்த்தகக் கப்பல்கள் வருகை விரைவில்.

கொழும்பு, டிசெ.17

ருஹுணு மாகம்புர சர்வதேசத் துறைமுகத்திற்கு எதிர்வரும் சில தினங்களில் இரண்டு சர்வதேசக் கப்பல்கள் வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவிலிருந்து 7,500 மெற்றிக் தொன் உரத்தை ஏற்றிவரும் இக்கப்பல்களில் ஒன்று நாளை சனிக்கிழமை ருஹுணு துறைமுகத்தை வந்தடைவதுடன் மூன்று தினங்கள் அங்கு தரித்து நிற்குமென அரச தகவல் திணைக்களம் கூறுகிறது.

இரண்டாவது கப்பல் எதிர்வரும் 23ஆம் திகதி ருஹுணு மாகம்புர சர்வதேசத் துறைமுகத்திற்கு வருகை தருவதுடன் இக்கப்பல் நான்கு நாள்கள் அங்கு தரித்து நிற்குமெனவும் அறிவிக்கப்படுகிறது.

இவை மட்டுமின்றி நகரும் புத்தகசாலையாகத் தொழிற்படும் கப்பலொன்றும் ஒருவார காலம் ருஹுணு துறைமுகத்தில் தரித்து நிற்கவுள்ளது. (த)

# ஆள்கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## கனடா அரசு அறிவிப்பு

மொன்றியல், டிசெ.17

ஆள்கடத்தலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக கனேடிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இலங்கையைச் சேர்ந்த 76 சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்களைக் கனடாவிற்குள் அழைத்துச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் ஓசியானின் லேடி என்ற கப்பலின் மூலம் குறித்த இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் கனேடிய கரையோரத்தை அடைந்தனர். சட்டவிரோத ஆள்கடத்தலில் ஈடுபட்டவர்கள் பற்றியோ அல்லது அவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள் குறித்தோ தகவல்களை வெளியிட முடியாது என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (த)

## எல்லோரும் ஒன்றே...



கடவுளுக்கு வணக்கம்: பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர் மேடையில் நிற்கின்றனர். மாணவர்கள் இறைவணக்கம் செலுத்துகின்றனர். (236)

# இலங்கை மீனவர் இருவர் சோமாலியர் கொள்ளையர்களால் கடத்தல்

கொழும்பு, டிசெ.17

சர்வதேசக் கடற்பகுதியில் அண்மையில் காணாமற்போன இரண்டு இலங்கை மீனவர்கள் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இது தொடர்பான தகவல்களை ஆராய்ந்து பார்க்குமாறு அயல் நாடுகளின் தூதரகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக மீன்பிடித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.டபிள்யூ. பத்திரண தெரிவித்தார்.

குறித்த மீனவர்களுடன் கடலுக்குச் சென்ற ஏனைய நான்கு மீனவர்களும் இந்தியாவுக்குச் சொந்தமான மினிகோ தீவுகளில் தங்கியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதெனவும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

கடந்த 20 ஆம் திகதி 6 மீனவர்களுடன் பேருவளையிலிருந்து கடலுக்குச் சென்ற லக்மால் 1 என்ற பெயரையுடைய மீன்பிடிப் படகிலிருந்த இரண்டு மீனவர்களே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். (த)

# விளக்கமறியல் கைதிகள் இருவர் வவுனியாவில் தப்பியோட்டம்

கொழும்பு, டிசெ.17

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தினால் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இரு சந்தேகநபர்கள் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்ற சம்பவமொன்று வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

மன்னாரிலிருந்து வவுனியா விளக்கமறியற்சாலைக்கு பஸ்மூலம் கொண்டு செல்லப்பட்ட இவ்விரு கைதிகளும் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் வவுனியா சிறைச்சாலைக்கு அருகில் வந்ததும் தப்பிச் சென்றுள்ளனர். அவர்களைத் தேடும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் வவுனியா சிறைச்சாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பூந்தோட்டத்தைச் சேர்ந்த அழகையா கௌரிராசா, கற்குளம் சிதம்பரபுரத்தைச் சேர்ந்த இராஜேந்திரன் ரவிக்குமார் என்ற இரண்டு கைதிகளே கைவிலங்கை கழற்றிக்கொண்டு தப்பியோடியுள்ளனர் என்றும் சிறைச்சாலை அதிகாரி தெரிவித்தார்.

இவர்களைக் கண்டுபிடிப்பதற்காக நேற்றிரவு வவுனியா நகரம் முழுவதும் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்டார்கள். தப்பியோடிய கைதிகள் சாதாரண உடையில் இருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

# தமிழக அகதி முகாம்களிலிருந்த அறுபது பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, டிசெ.17

தமிழகத்தில் சுமார் இருபது வருடங்களாக அகதிகளாகத் தங்கியிருந்த சுமார் 60 பேர் நேற்று முன்தினம் இலங்கை திரும்பினர்.

இவர்களுள் இந்தியாவில் பிறந்த 21 குழந்தைகளும் இருந்தனர்.

வவுனியா, திருகோணமலை, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த மக்கள் யுத்த காலத்தில் படகு மூலம் இந்தியா சென்றனர் என விமான நிலையத்தில் வைத்து தெரிவித்தனர்.

நாட்டில் யுத்தம் முடிந்து அமைதி நிலவுவதால், தாங்கள் இலங்கை திரும்பினர் என்றும், தங்கள் சொந்தக் காணிகளில் இருப்பிடங்களை அமைத்துக் கொள்ள அரசிடமிருந்து உதவியை எதிர்பார்க்கின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (சி)

# சிறுநீரகப் பாதிப்பை ஏற்படுத்தும் தாவரம் வடமேல் மாகாணத்தில் கண்டுபிடிப்பு

வடமேல் மாகாணத்தில் அதிகரித்துவரும் சிறுநீரக நோய்க்கு தாவரம் ஒன்றே காரணமாக இருக்கலாம் என ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக வைத்தியத்துறையைச் சேர்ந்த குழுவினர் மேற்கொண்ட புதிய ஆய்வு ஒன்றின்மூலம் வடமத்திய மாகாணத்தில் உள்ளவர்களை அதிகமாகப் பாதித்து வரும் சிறுநீரக வியாதிக்கு காரணம் மேற்படி தாவரமே எனக் கண்டறியப்பட்டுள்ளது.

சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி தம்மிகா மெனிக்கே திசா நாயக்கா தலைமையிலான குழு இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தது. இந்த ஆய்வின் அடிப்படையில் வடமத்திய மாகாணத்திலுள்ள நீர் நிலைகளில் வளர்கின்ற 'அல்கா' எனப்படும் தாவரத்தினால் (புலூகிரீன் அல்கா) வெளிவிடப்படும் ஒருவகை நச்சுப்பதார்த்தமே சிறுநீரகப் பாதிப்பிற்குப் பிரதான காரணம் என அக்குழு தெரிவித்தது.

இந்த நச்சுப்பொருள் தண்ணீரோடு கலப்பதால் சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தக் குழு ஒரு வருட காலத்திற்கு மேலாக மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையிலேயே இத்தகவலை வெளியிட்டுள்ளது. (சி)

## நினைவின் தொகுப்பு....



சாதனைப் பதிவு- மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் 103 ஆவது ஆண்டு நினைவுப் பெருவிழாவும் சதாவதானியின் ஆய்வுநூல் அறிமுகமும் அண்மையில் நடைபெற்றது.நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி முல்லை பரமேஸ்வரன், சிற்பக்கலைஞர் கலாபூஷணம் கோ.வேலுப்பிள்ளைக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். ஆய்வுநூலின் முதற்பிரதியை கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத் தலைவர் கி.குகநாதன், ஆசிரியர் நவரட்ணராஜாவிடம் வழங்குகிறார். 'தமிழும் சதாவதானியும்' எனும் தலைப்பில் ... உரை நிகழ்த்துகிறார். (... 276)

# ஒட்டாவா உடன்படிக்கையில் இலங்கையும் கையெழுத்திடும்

கொழும்பு, டிசெ.17

போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் கண்ணிவெடிகளுக்கு எதிரான ஒட்டாவா உடன்பாட்டில் இலங்கையும் கையெழுத்திடும் முயற்சிகளில் இறங்கியுள்ளது. கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகளைத் தடைசெய்யும் அனைத்துலக உடன்பாடு ஒட்டாவாவில் 1997 இல் கையெழுத்திடப்பட்டது.

இந்த உடன்பாட்டில் இலங்கை, அமெரிக்கா, இஸ்ரேல், சீனா உள்ளிட்ட சுமார் 40 நாடுகள் கையெழுத்திடவில்லை.

கண்ணிவெடிகளைப் பயன்படுத்துதல், களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல், தயாரித்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றை இந்த உடன்பாடு தடைசெய்கிறது.

புலிகளுக்கு எதிரான போர் நடைபெறுவதைக் காரணம் காட்டி இலங்கை அரசாங்கம் இந்த உடன்பாட்டில் ஒப்பமிட இதுவரை மறுப்பு வெளியிட்டு வந்தது. ஆனால் தற்போது போர் முடிவுக்கு வந்துள்ளதால்,இந்த உடன்பாட்டில் இணைந்து கொள்வது குறித்து இலங்கை அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாகத் தெரியவருகிறது.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட இலங்கை இராணுவ மூத்த அதிகாரி ஒருவர்,

போர் நடந்து கொண்டிருந்த போது ஒட்டாவா உடன்பாட்டில் கையெழுத்திட்டிருந்தால் நாம் முட்டாள்களாகியிருந்திருப்போம். புலிகள் அப்போது வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகளை அதிகளவில் பயன்படுத்திக் கொண்டிருந்தனர்.

போர் நடைபெற்ற காலங்களில் இலங்கை பல்வேறு வகையான கண்ணிவெடிகளை உற்பத்தி செய்தது. ஆனால் தற்போது அதற்கு அவசியமில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கணவனை இழந்த பெண்களின் கண்ணீர் துடைப்பவர் யாரோ...?



கடந்த 30 வருடங்களாக இடம்பெற்று வந்த போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டதுதான் இதில் மாற்றுக் கருத்துகள் எவையும் காணப்படவில்லை .

போர் முடிந்து விட்டது இனியென்ன என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கின்றன எத்தனையோ ஜீவன்கள். இதற்கு நடுவில் மூச்சு விடவே முடியாத கனத்த இதயத்துடன் யாரிடமும் சொல்லியழ முடியாத சோகத்துடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் இளம்விதவைகள்.

அடுத்த நொடி என்ன செய்வது? யாரிடம் சொல்வது எங்கள் வேதனைகளை, பிள்ளைகளை எவ்வாறு ஆளாக்குவது அடுத்தவேளை உணவுக்கு எங்கே போவது இவ்வாறு பல்வேறு கேள்விகளுக்கு நடுவில் மௌனித்துப் போய் நடமாடும் மரமாக வாழும் இளம் விதவைகளின் எதிர்காலம் எங்கு போய் முடியும் என்பது இன்றைய காலகட்டத்தில் கேள்விக் குறியாகவே உள்ளது.

நடந்து முடிந்த போரால் எத்தனையோ ஆயிரம் இளம் பெண்கள் விதவைகளாக்கப்பட்டு நடமாடும் பிணங்களாகவே இன்று வாழ்கின்றனர். தந்தையை இழந்து தன்னை நம்பி வாழும் குழந்தைகளை எண்ணி உயிர் வாழ வேண்டிய இக்கட்டான நெருக்கடிக்குள் இவர்களது காலம் உள்ளது.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடி என்பது இவர்களை விட்டு விலகிடாத ஒரு நோயாக வாட்டுகின்ற நிலையில் அதிலிருந்து மீள முடியாது தவித்துக் கொண்டிருக்கும் இவர்கள் உளவியல் ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இதுதான் உலகம் கணவர்தான் ஒரு வரையறைக்குள் எல்லாம் என்ற நினைத்து கணவனில் தங்கி வாழ்ந்த பெண்கள் இன்று தனித்து விடப்பட்டுள்ள நிலையில் செய்வதறியாது திண்டாடுகின்றனர். தங்கள் பிள்ளைகளைச் சிறந்த முறையில் வழி நடத்தக்கூடிய தலைமைத்துவம் என்பது பெரும்பாலானோருக்கு இல்லை என்றுதான் கூற முடிகிறது.

இவ்வாறான மனநிலையுடன் மிகவும் குழம்பிப் போயுள்ள இவர்களின் துன்பகரமான வாழ்க்கை நிலை குறித்துக் கவனம் எடுக்கப்பட வேண்டியது உரிய அதிகாரிகளின் கைகளில் தான் தங்கியுள்ளது.

கணவனை இழந்தால் பொருளாதார ரீதியாகவும் சரி ஏனைய வளர்ச்சிப் படிகள் எதுவானாலும் சரி என்னால் முடியும் இன்று எத்தனை பெண்கள் உள்ளார்கள் என்பது கேள்விக்குறிதான்.

கணவனை இழந்து பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தேவையான உதவிகள் உரிய வகையில் வழங்கப்பட வேண்டியது அவசியம் என்பது இங்கு மிகவும் அவதானிக்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

அதாவது பெண் தலைமை தாங்கும் குடும்பம் எவ்வாறு வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழற்ற முடியும். இவ்விடயம் குறித்து இதுவரை சிந்தித்து பார்த்தவர்கள் யாரும் இல்லை என்று கூற முடியாது. நிச்சயம் அவர்களின் சிந்தனைகள் செயல் வடிவமும் பெற்று கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால் இவர்களின் செயல் வடிவம் எந்தளவுக்கு வெற்றிகரமாக அமையும் அமைகிறது என்பது பற்றி ஆராய்ந்து பார்த்தார்களா? என்று பார்த்தால் இல்லை. ஒரு நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலும் சரி . உதவி செய்யும் தனி நபரை எடுத்துக் கொண்டாலும் சரி ஏன் அரசாங்கத்தை எடுத்துக்கொண்டாலும் சரி தமது திட்டம் நிறைவேற வேண் டும். தாம் உதவி செய்தோம் என்று வெளியில் இருப்பவர்கள் பார்த்தால் சரி என்ற நோக்குடனேயே தமது திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இது சரிதானா? இதனால் ஒரு குடும்பம் முன்னேற்றமடைய முடியும்? என்பதை முதலில் நோக்க வேண்டும் இத் திட்டத்தை அவர்கள் முழுமைப்படுத்திப் பயனடைய வழங்கப்பட்ட உதவிகள் போதுமானதா விடயம் போன்ற தொடர்பாகவும் சிந்திப்பவர்கள் எவரும் இல்லை என்ற நிலைப்பாடுதான் காணப்படுகின்றது. இது இவ்வாறு இருக்கையில் விதவைகளுக்கு என்ன உதவிகள் வழங்குகின்றோம் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வழங்கப்படும் உதவிகள் முற்றுமுழுதாகப் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள விதவைகளின் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்பவையாகத்தான் இருக்கின்றன. ஆனால் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உள்ளவையாக முடியுமா, என்பது கேள் விக்குறியாகத் தான் உள்ளது இதுமட்டுமன்றி இளம் விதவைகள் உளவியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களின் நிலைமைகள் குறித்துக் கவனம் எடுக்கப்பட வேண்டியது அவசியம். இவ்விடயம் குறித்து இதுவரை எவருமே எவ்விதமான அக்கறைகளும் கொள்ளாதிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயமே.

கணவனை இழந்து தனித்து விடப்பட்டுள்ள பெண்களுக்கு அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய முன் நகர்வுகள் குறித்தும் அவர்களை நோக்கி வரும் பிரச்சினைகளை எதிர்கொள்வது குறித்தும் விளக்கமளிக்கப்பட வேண்டிய முக்கிய இரு விடயமாகும்.

**வீணா**

போர்க்காலச் சூழல் நீங்கி சமாதானச் சூழல் தோன்றியுள்ள நிலையில் எத்தனையோ அரச சார்பற்ற நிறுவனங்கள் முளைத்துள்ளன. இவற்றில் ஒன்று கூட இந்நிலை தொடர்பாக ஆராய்ந்து உரிய வகையில் தமது திட்டங்களை முன்னெடுக்காமல் இருப்பது வேடிக்கையாக இருப்பதுடன் மிகவும் வேதனையாகவும் இருக்கின்றது. முற்று முழுதாக உள ரீதியில் உடைந்து போயுள்ள இந்த மக்களை குறிப்பாக இளம் விதவைகளை ஒன்றுகூட்டி வைத்து பல்வேறு செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்த முடியும். அவர்கள் வருமானத்தை ஈட்டும் வகையில் கைத்தொழில் பயிற்சிகளை வழங்க முடியும்.

இதன் மூலம் அவர்கள் உளவியல் ரீதியில் ஏற்பட்டுள்ள பெரும் தாக்கத்தில் இருந்து முற்றாக விடுபடுவதுடன் தனித்து நின்று சுயதொழிலை மேற்கொண்டு வருவாயை ஈட்டக்கூடிய தகுதி பெற்றவர்களாகவும் நிச்சயம் மாற்றமடைவார்கள் என்பதில் எந்த விதமான சந்தேகத்துக்கும் இடம் இல்லை.

இதனைவிடுத்து பணரீதியான உதவிகள் வழங்கப்படுகின்றபோது அந்த சிறு தொகையை வைத்து உரிய முறையில் பயன்படுத்தத் தெரியாதோர் வீண் விரையம் செய்து விடுவர். இதை நாம் அன்றாடம் காணக் கூடியதாக உள்ளது என்பது மறுப்பதற்கில்லை.

எனவே, இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் உரிய வகையில் கவனம் எடுக்க வேண்டும். எடுப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## தீர்மானம் எடுக்க முடியாதவளாய்...

என் வாழ்நாளில் - நான்
கண்டுகொண்டது
வெறுமை... தனிமை....
இவற்றுடனேயே
நான்....
வாழ்ந்த நாள்கள்...
சுவாசத்துடன்
ஒன்றித்து விட்டவைதான்
என் உணர்வுகளும்
ஒவ்வொரு அசைவிலும்
உணர்கின்றேன்
என் தேவைகளை....
அதன் புனிதத்தை
தீர்மானம் எடுக்க
முடியாதவளாய்...
இனங்காண முடியாத
ஏக்கத்துடன்...



குட்டி

## துன்பங்கள் பெண்களுக்கு மட்டுமா?



அன்றைய காலத்தில், பெண்கள் வீட்டு வேலைகளுக்குத்தான் சரி; அவர்களால் வேறேதுவும் முடியாது எனப் பெண்களை அடக்கி ஒடுக்கிறார்கள். ஆனால் தற்போது அந்நிலை மறைந்து போய்க் கொண்டிருக்கிறது.

தற்போது பெண்கள் சகல துறைகளிலும் உள்வாங்கப்பட்டு தமது திறமைகளை வெளிப்படுத்த பல நிறுவனங்கள் களம் அமைத்துக்கொடுக்க ஆரம்பித்துள்ளன.

ஆண்களைப் போல் பெண்களும் வேலைக்குச் சென்றாலும் வீட்டுக் கடமைகளை அவள் மட்டும்தான் செய்ய வேண்டும் என்பது இன்னும் ஒரு சிலரிடம் இருக்கத்தான் செய்கின்றது.

அவளது வேலைப்பழுவை உணர்ந்து நானும் சேர்ந்து வேலைகளைச் செய்து அவளது வேலைப் பழுவைக் குறைக்க வேண்டும் என்ற மனப்பக்குவம் ஒருசாராரிடம் இல்லாமலேயே போயுள்ளது.

உணவுக் கடைகளில் கூடுதலாக ஆண்களே உணவு தயாரிப்பு வேலைகளில் ஈடுபடுகிறார்கள் ஆனால் அவர்களது குடும்பத்தில் மனைவியுடன் சேர்ந்து உதவிகளைச் செய்து கொடுக்க விரும்புவதில்லை.

இதற்குக் காரணம் கடையில் வேலை செய்யும் போது அவனுக்கு ஊதியம் கிடைக்கிறது. ஆனால் வீட்டில் உதவிகளைச் செய்தால் ஊதியம் இல்லைத் தானே என்பார்கள்.

பெண்கள் மட்டும் காலாகாலமாக இப்படி ஊதியம் இல்லாமல் குடும்பத்துக்காக உழைப்பதா? வாழ்க்கை என்பது ஆணும் பெண்ணும் ஒன்றிணைந்து வாழ்வதுதான் ஆனால் கஷ்ரங்கள் பெண்ணுக்கு மட்டும் தானா ஏற்பட வேண்டும்.

தற்போது நகரப்புறப் பெண்கள் இந்த விடயங்களில் கொடுத்து வைத்தவர்கள். வீட்டு வேலைகளுக்கென ஒரு பணிப்பெண்களை வைத்து விட்டு தொலைக் காட்சிப் பெட்டியே தஞ்சம் என இருப்பார்கள். ஆனால் கிராமப்புறப் பெண்களின் நிலைதான் இன்னும் மாறவில்லை. அவர்கள் நகரத்துப் பெண்களுக்காகவும் சமைக்கவேண்டிய உள்ளது. ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் வசதி வாய்ப்புக்கள் என்பது அவரவர்க்குக் கடவுள் கொடுத்த கொடைதான் என்று மனதை சாந்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம். குடும்பக் கஷ்டங்கள் துன்பங்கள் பணிகள் ஆகியவற்றில் குடும்பத் தலைவன் தலைவி என்ற வேறுபாடின்றி இணைந்து செயற்பட நம்மை நாமே மாற்றிக்கொள்ள வேண்டும். மாறாக தனி ஒருவனிடம் மட்டும் பொறுப்புக்களும், கடமைகளும் [illegible]டால் அந்தக் குடும்பத்தில் சந்தோசம் நிலைத்திருப்பது முடியாத [illegible]வே இன்பமும் துன்பதும் நம்மவர் கைகளில் தான் உள்ளது.

க.நிஸா

## வாழ்வுக்கு சில சிந்தனை...

- வாழ்க்கையில் சந்தோசமாக இருக்க எமக்குள் இருக்கும் ஆசைகளைக் கட்டுப்படுத்தப் பழக வேண்டும். ஆசைகள் குறையும் போது அவஸ்தைகள் நீங்கி இன்பம் பெற முடியும்.
- இன்னொருவர் மீது நாம் தங்கி வாழாமல் எமக்கான தேவைகளை நாமே செய்ய முயற்சித்தல் வேண்டும். அடுத்தவர் மீது எமது தேவைகளைப் பாரப்படுத்த நினைத்தோமானால் வீணான பேச்சுக்களும், மனச்சங்கடங்களும்தான் ஏற்படும் .
- எமது வாழ்வை நாம் பாதுகாக்க எமது புலன் உறுப்புக்களைக் கட்டுப்படுத்த வேண்டும் அவ்வாறின்றி எம்மையறியாமல் எ்மது புலன்களை நடமாட விட்டோமானால் சமூகத்தில் அவப் பெயர்களுக்கும், இம்சைகளுக்கும் ஆளாகவேண்டி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது நிறுவனங்களிடம் மின் கட்டணத்தை குறைத்து அறவிடுவதற்கு ஏற்பாடு செய்க

## சனசமூக நிலையங்களின் சமாசம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,டிசெ.17

வருமானத்தைக் கருத்தில் கொண்டு இயங்கிவரும் வர்த்தக நிலையங்களிடமிருந்து மின் கட்டணம் அறவிடப்படுவது போல் எந்தவித வருமானம் இன்றி சேவை மனப்பாங்குடன் இயங்கிவரும் சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் சங்கம் போன்ற பொதுத் ஸ்தாபனங்களிடமும் மின்கட்டணம் அறவிடப்படுகின்றது.

இதனால் மேற்படி நிறுவனங்கள் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் மக்களுக்குச் சேவை செய்வதிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

எனவே கிராமத்தின் அபிவிருத்தியையும் மக்களின் வளர்ச்சியையும் நோக்கமாக வைத்து, பொது நிறுவனங்களிடமிருந்து மின் கட்டணத்தைக் குறைத்து அறவிடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வலி. தென்மேற்குப் பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் க.மனோகரன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வலி.தென்மேற்கு ஒருங் கிணைப்புக் குழுத்தலை வருமான முருகேசு சந்திரகுமாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-


சன சமூக நிலையங்கள் போன்ற பொது ஸ்தாபனங்கள் மக்களிடமிருந்து பெறும் சந்தாப் பணத்தைக் கொண்டுதான் இயங்கி வருகின்றன.

இந்த குறைந்த தொகையில் மக்களுக்கு அறிவு சார் உட்பட்ட பல நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக இரவுநேர வகுப்புக்களை நடத்துவதுடன் சமயம், கலை, கலாசாரம் போன்ற பண்பாடுகளை வளர்ப்பதற்கான நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றது.

மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்யக்கூடிய வகையில் மின்கட்டணத்தை ஆலயங்களில் அறவிடுவது போல் சன சமூக நிலையங்களிலும் அறவிடுவதற்கான ஒழுங்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (ம-201-115)

# மீண்டும் செயற்பட ஆரம்பித்தது சேதனப் பசளை தயாரிப்பு நிலையம்



யாழ்ப்பாணம் டிசெ,17

காக்கை தீவிலுள்ள சேதனப் பசளை தயாரிக்கும் நிலையம் தற்போது மீளவும் இயங்கி வருகிறது.

நவீன உபகரணங்களைப் பயன்படுத்தி சேதனப் பசளை தயாரிப்பதற்கான நடவடிக்கையினை யாழ்.மாநகர சபை மேற்கொண்டு வருகிறது.

இதற்கென அடுத்தவருட முற்பகுதியில் நவீன உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சேதனப் பசளை தயாரிக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.எனினும் பின்னர் இந்த வருடம் மார்ச் மாதம் தொடக்கம் அந்த நிலையம் மீள இயங்க ஆரம்பித்துள்ளது.

அதிக மனித வலுவைப் பயன்படுத்தியே தற்போது சேதனப் பசளை தயாரிக்கும் ஏற்பாடு இடம்பெற்று வருகின்றது.(ம-14)

# குடாநாட்டில் போக்குவரத்துச்சபையின் 60 வீத சேவைகளே இடம்பெறுகின்றன

நாவற்குழி.டிசெ,17.

குடாநாட்டில் போக்குவரத்துச் சபையின் 8 பஸ்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் 60. வீதமான சேவைகளே நடைபெறுவதாக யாழ்.தலைமையக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடரும் பெரு மழையால் வீதிகள் குன்றும் குழியுமாக இருப்பதனால் அந்த வீதிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள சபையின் பஸ்களே இவ் வாறு பழுதடைந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதனால் அந்த பஸ்களில் கடமையாற்றிய சாரதிகளும், நடத்துநர்களும் வேலை இல்லாது அலுவலகத்தில் இருக்க வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தென்பகுதியிலிருந்து கனகரக வாகனங்களும், ஏனைய வாகனங்களும் நாளாந்தம் நூற்றுக்கணக்கில் வருவதால் வீதிகளிலுள்ள சிறு உடைவுகள் பெரிய குழிகளாக உருவெடுத்து விட் டன.

சேதமுற்ற வீதிகள் மிக விரைவில் சீர் செய்யப்படாது விட்டால் ஏனைய பஸ்களும் படிப்படியாகச் செயலிழக்கும் நிலை உருவாகலாமென அவர் மேலும் அச்சம் தெரிவித்துள்ளார். (204-121)

## கலைப்பயிற்சி



திறமைக்குப் பரிசு: திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்பட்ட கண்டிய நடனப் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் முன்கிழமை கலாமன்றத்தின் 'கலைத்தூது' கலையகத்தில் இடம்பெற்றது. கண்டிய நடன பயிற்சியை நிறைவு செய்த மாணவி ஒருவருக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அவுஸ்திரேலிய பிரதி உயர் ஆணையாளர் சோபியா மைக்கின் ரையிஸ் சான்றிதழ் வழங்குகின்றார். (201-23)

# அனலைதீவு இந்து மயானத்தில் கிரியை செய்யும் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம் டிசெ,17

இறுதிக் கிரியைகளை மேற்கொள்ள முடியாத அவலநிலையில் அனலைதீவு இந்து மயானம் காணப்படுகின்றது.

மழைக் காலத்திலும்சரி வெயில் காலத்திலும் சரி இங்கு சென்று கிரியைகளை மேற்கொள்வதற்குப் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின் றனர்.

மயா னத்தில் உள்ள தங்குமிடத்தின் கூரைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளமையும் இதற்குக் காரணம். மயானத்தில் உள்ள மடத்தைத் திருத்தியமைத்துக் கொடுக்க உரியவர்களால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-7)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# சாவகச்சேரி வைத்தியசாலையில் ஆய்வுகூட உத்தியோகத்தர் இல்லை

## நெருக்கடியை எதிர்கொள்ளும் நோயாளர்

தென்மராட்சி டிசெ,17

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஆய்வு கூட உத்தியோகத்தர் இல்லாததால், தனியார் நிறுவனங்களில் பணம் கொடுத்து பரிசோதனைகளை மேற்கொள்வதாக நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் கடமையாற்றிய ஆய்வுகூட உத்தியோகத்தர் வேலையை விட்டு விலகிச் சென்றுள்ளதால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருவோர் பரிசோதனைகளை தனியார் மருத்துவ நிலையங்களில் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

வைத்தியசாலைக்கு ஆய்வு கூட உத்தியோகத்தர் நியமிக்கப்படாததையடுத்து இடை நிறுத்தப்பட்ட சுகாதார திணைக்களத்தின் நடமாடும் வாகனத்தை வாரத்தில் இரு நாள்களுக்கு மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு மக்கள் கேரியுள்ளனர். (204-207)

# நீர்வேலி மேற்கில் புதிய மின்மாற்றி

யாழ்ப்பாணம், டிசெ.17.

நீர்வேலி மேற்கு மாசியன் சந்திப் பகுதியில் புதிய மின்மாற்றி ஒன்று அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

இதன் மூலம் இந்தப் பிரதேசத்தின் மின் விநியோக நடவடிக்கைகள் சீரடையும் எனக் கூறப்படுகிறது.

மேலும் விவசாய நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி சார்ந்த கைத்தொழில்கள் ஆகியன இடையூறு இன்றி தொடர வாய்ப்பேற்பட்டுள்ளதாக. பொது மக்கள் கூறுகின்றனர். (201-72)

# விளையாட்டு நிகழ்வுக்கு மட்டுமே இனி துரையப்பா விளையாட்டரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.17

யாழ். துரையப்பா விளையாட்டுமைதானத்தில் விளை யாட்டு நிகழ்வுகளை நடத்தவதற்கான அனுமதி மட்டுமே யாழ். மாநகர சபையால் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

களியாட்ட நிகழ்வுகள், இசைக் கச்சேரிகள் உள்ளிட்டவை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடத்துவற்கான அனுமதி யாழ்.மாநகர சபையால் மறுக்கப்பட்டுள்ளது.

களியாட்ட நிகழ்வுகள், கண்காட்சி நிகழ்வுகள் இந்த மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றமை அதன் பராமரிப்பு வேலைகளுக்கு இடையூறாக இருப்பதன் காரணமாகவே யாழ். மாநகர சபை இத்தகைய தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் யாழ்.நகரப் பகுதியில் இடம்பெறும் நிகழ்வுகளின் போது வாகனத் தரிப்பிடமாக மைதானத்தைப் பயன்படுத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் 26ஆம் திகதி தேசிய அனர்த்த பாதுகாப்புத் தினம் யாழ்.நகரில் இடம்பெறவிருப்பதால் அன்றையதினம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம் வாகனத் தரிப்பிடமாகப் பயன்படுத்த அனுமதிக்கப்படவுள்ளது என்றும் இதற்கான தீர்மானத்தை மாநகரசபை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-14)

# புரிந்துணர்வுடன் கூடிய அன்பான சமூகமாக வேறுபாடுகளை மறந்து நாம் வாழவேண்டும்

## யாழ். ஆயர் உரை

கொழும்புத்துறை,டிசெ.17

நாம் எல்லோரும் இறைவனின் பிள்ளைகள் என்பதை மனதில் நிறுத்தி வேறுபாடுகளை மறந்து ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு புரிந்துணர்வுடன் அன்பான சமூகமாக வாழ வேண்டும். இந்தச் செய்தியை தாங்கியவராகவே இயேசு இந்த மண்ணில் அவதரித்தார் என யாழ். ஆயர் தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

யாழ்.சிவில் அலுவலகத்தினரின் ஏற்பாட்டில் யாழ். அடைக்கல அன்னை ஆலய வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிறிஸ்மஸ் கரோல் கீத நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நத்தார் செய்தி வழங்கியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நத்தார் ஒரு மகிழ்வான நிகழ்வு. அதை வெளிப்படுத்த ஒளி யேற்றிக் கொண்டாடுகிறோம். இருளில் வாழ்ந்த மக்கள் மேல் ஒளி உதித்தது என விவிலியம் கூறுகிறது.மனுக்குலத்தின் மீது அன்பு கொண்டு இயேசு மீட்பரானார். அந்த அன்பை எல்லோரும் பகிர்ந்து வாழ முற்படுவோம் என்றார் அவர்.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க , சமயப் பெரியார்கள் பலரும் உரையாற்றினர். அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் தலைமையில் புனித மாட்டீன் குருமட மாணவர்களும் கண்டி, கம்பளை மகிமையின் ஆலய அருட் சகோதரர் யோன் குழுவினரும் கரோல் கீதங்களை இசைத்தனர்.

நிகழ்வில் யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள், நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஜும்மா பள்ளிவாசல் மௌலவி எம்.எச். முபாரக், யாழ். விகாராதிபதி மற்றும் சமூகப் பிரமுகர்கள், அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள், பாதுகாப்பு படையினர் , பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.(201-135)

## புதிய வருகை...



சிறுவர் சேமிப்பு: சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மக்கள் வங்கியின் அச்சுவேலிக்கிளையின் சிறுவர் கணக்கு அலகு திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் புஸ்மகுமார நாடாவெட்டி அலகைத் திறந்து வைக்கிறார்.அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் இ.யோகராசா, பிரதேச முகாமையாளர் எஸ்.பத்மநாதன், பாடசாலையின் அதிபர் என்.மகேந்திரராசா ஆகியோர் நிற்கின்றனர். (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**



உள்ளத்தில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். பல நாள்களாக வராமல் இருந்த பணவரவுகள் வரலாம். நண்பர் ஒருவருக்கு அவசர உதவி செய்யலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். ஓய்வு எடுக்கும் நாள்.

**இடபம்:**



இதோ அதோ என இழுத்துக் கொண்டிருந்த காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். மற்றவர்களுக்காக நீங்கள் அலைந்து திரிந்து சில வேலைகளை முடிக்கலாம். கடன் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவீர்கள். உறவினர்கள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். பழைய சம்பவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். உயர்வு காணும் நாள்.

**மிதுனம்:**



உங்களின் செயற்பாடுகளைப் பற்றி உறவினர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். நண்பர்களுடன் கேளிக்கை, கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நீங்கள் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல், உறவினர்கள் சிலர் கையை விரிக்கலாம். மாமன், மைத்துனர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம்.

**கடகம்:**



சோர்வு, சோம்பலால் வழக்கமான பணிகளில் தடை ஏற்படலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். மற்றவர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்ப, யாருக்கும் வாக்குக் கொடுக்க வேண்டாம். உங்களின் விவகாரங்களில் தலையிடும், சிலரைக கடிந்து கொள்ளலாம். சிலரைச் சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம்.

**சிங்கம்:**



சில நாள்களுக்கு முன்னர் உருவான பிரச்சினை ஒன்று சுமுகமாக முடியலாம். வீட்டுச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். வெளிவட்டார தொடர்புகள் விரிவடையும். சிலருக்கு நல்ல யோசனைகள் சொல்வீர்கள். புதிய நண்பர்களைப் பெறலாம். குடும்பத்தினருடன் சந்தோஷமாகப் பொழுதைக் கழிப்பதில் நாட்டம் செல்லும்.

**கன்னி:**



எந்த விடயத்திலும்உங்களை முன்னிலைப்படுத்தி கொள்ள முற்படுவீர்கள். பல நாள்களாக வராமல் இருந்த கடன் மிகுதியைக் கேட்டு வாங்குவீர்கள். கௌரவம், பார்த்து சில காரியங்களை செய்வீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர், திடீரென தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். ஆரோக்கியக் குறைவு நீங்கும்.

**துலாம்:**



பண விடயங்களில் எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். ஒருவர் உங்களிடம் சொல்லிய வேலைகளை மறந்து விடுவதால், பிரச்சினைகளை சந்திக்கலாம். அயலார் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம். பிள்ளைகள் வழியில் சுபச் செலவு நேரும்.

**விருச்சிகம்:**



வீட்டை சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். உங்களைப் பயன்படுத்தி சிலர் காரியம் சாதிக்க முற்படுவர். மாற்றுமத நண்பர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். தேக ஆரோக்கியத்தில் சிறு தொந்தரவு உண்டாகலாம். சிலர் உங்கள் மீது பொறாமைப்படலாம். மற்றவர்களுக்காகச் செலவிடலாம்

**தனுசு:**



தொட்ட காரியங்கள் தடையின்றித் துரிதமாக நடக்கும். வசதி படைத்த சிலர் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். சொந்த பந்தங்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்களால் அல்லது ஆண்களால் சகாயம், சந்தோஷம் அடையலாம். சாமர்த்தியமான பேச்சுக்களால் சில விடயங்களைச் சாதிப்பீர்கள். அனுகூலமான நாள்.

**மகரம்:**



பிள்ளைகள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். நண்பர்களை நம்பி இறங்கிய காரியங்கள் நல்ல விதமாக முடியலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். குடும்ப பெரியவர்கள் அல்லது உறவினர்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு நடக்கலாம்.

**கும்பம்:**



மங்கையர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கும். நாள் முழுவதும் பரபரப்பாகச் செயற்படலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். நண்பர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். நீங்கள் நினைத்ததே சரியென நினைத்துச் செயற்படுவீர்கள்.

**மீனம்:**



பண விவகாரங்களில் சிலரிடம் கோபமாக நடந்து கொள்ளலாம். வெளியூர்களில் இருக்கும் ஒருவர், உங்களை தொடர்பு கொண்டு உதவி கேட்கலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். மற்றவர்களுக்காக நீங்கள் செலவு செய்யலாம். மனதிற்குப் பிடித்த வகையில் சில விடயங்கள் நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம்.

# பஸ் உரிமையாளர்களின் போராட்டத்தை எதிர்கொள்ளத்தயார் - போக்குவரத்து அமைச்சர்

கொழும்பு, டிச.17

தனியார் பஸ் உரிமையாளர்கள் மேற்கொள்ளும் எந்தவிதமான போராட்டத்தையும் எதிர்கொள்ளத் தயார் என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மேல்மாகாணத்தில் 20 சதவீதத்தால் பஸ் போக்குவரத்து அனுமதி வழங்க மேல் மாகாணப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை எடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் ஜனவரி மாதம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதிக்கப்போவதாகத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாகக் கருத்துக் கூறியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எந்தவொரு பயணியும் அசௌகரியத்துக்கு உள்ளாகாதவாறு என்னிடம் பஸ்கள் உள்ளன. இதனால்தான் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்தன என்மீது கோபிக்கின்றார்.

போக்குவரத்து அமைச்சர் நான்தான் என்றால் பஸ்களைத் திருத்தி அவற்றைப் பயணிகள் பாவனைக்கு விட முடியும். என்னைப்பற்றி இலங்கை மக்களிடம் கேட்டால் என்னைச் சிறந்த போக்குவரத்து அமைச்சர் என்று மக்கள் கூறுவர்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் எந்த விதமான போராட்டங்களை மேற்கொண்டாலும் அவற்றை எதிர்கொள்ள நான் தயார் - என்றார்.

(சி)

# கொள்ளையருடன் போராடிய கடைக்காரர் கத்திக் குத்தில் பலி

## கிரிபத்கொடவில் சம்பவம்

கொழும்பு, டிச.17

களனி, தலுகம பிரதேசத்தில் உலோகப் பொருட்களை விற்பனை செய்யும் கடையொன்றுக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பொருள்கள் கொள்வனவு செய்யும் போர்வையில் நுழைந்த கொள்ளையர்களால் குறித்த கடை உரிமையாளர் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனக் கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

கடைக்குள் நுழைந்த கொள்ளையர்கள் துப்பாக்கி முனையில் கடையிலிருந்த பணத்தைக் கொள்ளையிட முயன்றபோது கடைக்காரர் அவர்களுடன் போராடியுள்ளார். அச்சமயம் கொள்ளையர் ஒருவரின் கத்திக் குத்துக்கு இலக்கான அவர் உயிரிழந்தார்.

பன்னிப்பிட்டிய கொட்டாவ பிரதேசவாசியான செல்லாக்க வடுகே பியசேன (வயது 54) என்பவரே இதில் உயிரிழந்தார். கிரிபத்கொடப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-5)

## இறைவனுக்காக....





சடங்கு: ஆவரங்கால் மேற்கு 'சாந்தா தோட்டம் ஸ்ரீ ஞான வைரவர்' ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தின் போது அந்தணர்கள் கிரியைகளை மேற்கொள்கின்றனர். கும்பங்கள் வீதி வலமாக வருகின்றன.

(11)

## மலர்ப் பூங்காவா? மயான பூமியா?



பாடசாலை நாள்களில் நட்பு என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது தெரியுமா? பிரிக்கவே முடியாதது. மணித்தியாலக் கணக்காகப் பேசிக்கொண்டிருந்தாலும் விடயங்கள் குறைவதே இல்லை. பேசுவதற்கும் சிரிப்பதற்கும் அதிக விடயங்கள் இருக்கின்றன.

நண்பனிடம் போகவேணும் நேரமாகுது என்று பலமுறை சொல்லியபடியே புறப்பட முடியாத மனம் அதற்கும் மீறிப் புறப்பட்டால் ''இரு கொஞ்சம் பொறுத்துப் போகலாம்'' என்று தோளை அழுத்தும் உரிமையான நட்பும் அந்த அழுத்தத்தை எதிர்பார்த்து ஏங்கும் மனம்! மணித்தியாலக் கணக்காகப் பேசியும் வெற்றிடம் ஏறபடாத நிலையில் வீட்டுக்குப் பயந்து புறப்படும் தவிப்பு; வாசலுக்கு வந்து கதவை திறந்த நிலையிலேயே வாசலில் நின்ற படி தொடரும் உரையாடல்கள்.

அந்த வேளையில் உள்ளிருந்து அப்பாவின் அதட்டல். ''மணித்தியாலங்களாக உள்ளே பேசி முடிந்தது... இப்ப வெளியில் வைத்து என்ன பேச வேண்டியுள்ளது?'' அவருக்கென்ன தெரியும்? உள்ளே வைத்துப் பேசக் கூடிய விடயங்களை உள்ளே பேசினார்கள். வீட்டுக்குள்ளே பேச முடியாத விடயங்களை வெளியே வைத்துப்பேசுகிறார்கள். அதுமட்டுமா? மோட்டார் சைக்கிளை புறப்பட வைக்கும் கோணத்தில் சிறிது நேரம்.... பஸ் என்றால் தரிப்பிடம் வரை அரட்டை அடித்துக் கொண்டு செல்லல்- இதற்கு மேலாக அடுத்த பஸ்ஸில் போ என்று கெஞ்சிக் கேட்டல். இவ்வாறான வகைகளில் நட்பு பிரிய முடியாதது; நட்பு பிரிய மறுக்கிறது. பிரிவை வெறுக்கிறது. பிரிய முடியாதது மட்டுமல்ல, அங்கே பேசப்பேச விடயங்கள் தீர்வதே இல்லை!

இதேபோல் இன்னொரு விடயமும் உண்டு. ஐம்பது வயதைக் கடந்த கணவனும் மனைவியும் ஓர் ஊரில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஒரே சோபாவில் உட்கார்ந்து ஒரே ரீ.வி பார்த்தாலும் இருவரது உள்ளங்களும் தனித்தனியான சிந்தனையில்தான் இருக்கும். அதனால் அவர்கள் பேசிக்கொள்வதே இல்லை. மிக முக்கிய பிரச்சினை .... பேசுவதற்கு பொதுவான விடயங்களே இல்லை. அதாவது 'காமன்'என்னும் விடயமே இல்லை... குறிப்பிட்ட காலத்துக்கு முன்பு 'காமன்' தான் முக்கிய விடயம்! ஆனால் இப்போது அதுவும் இல்லை. அதனால் எதுவும் இல்லை! எந்த வீட்டில் கணவன் மனைவிக்குள் நட்பு இருக்கிறதோ....பேச... பரிமாற..விடயங்கள் இருக்கின்றனவோ அந்த வீடு மகிழ்ச்சிப் பூங்கா ஏனைய வீடுகள் மயான பூமி.

சுகி சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1947 முதல் 1972 வரை நடந்த பாடங்களைக் கற்றுக்கொண்டுதான் 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை தந்தை செல்வா முன்வைத்தார். எனவே 1977 தொடக்கம் இன்றைய வரை நடந்தவை களைக் கணக்கிட்டால் தந்தை செல்வா தான் முன் வைத்த காலைப் பின்வைத் திருப்பார் என்று ஒருவரா லேனும் சொல்ல முடியாது.*

# தந்தை செல்வா தெற்கிடம் கற்றுக்கொண்ட பாடங்களும் தமிழ்த் தேசியமும்



நப்பின்னை

இலங்கைத் தீவிலே வாழ்கின்ற தமிழ் மக்கள் ஒரு தேசிய இனத்திற்குரிய தகுதியைக் கொண்டவர்கள். அவர்களுக்கு, ஒரு தேசிய இனத்திற்குரிய அனைத்து உரிமைகளையும் வழங்க வேண்டும் என்று கேட்கக் கூடிய அரசியல் கட்சிகளோ குழுக்களோ இன்று இத்தீவிலே இல்லை.

தமிழ் மக்களுக்கு 2009 மே திங்களில் ஏற்பட்ட பெரும் பின்னடைவு இன்று இந்த நிமைக்கு இட்டுச் சென்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று பெயரில் ''தேசியம்'' வைத்திருக்கும் கட்சி கூட இன்று ''தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகள்'' என்ற சொற்பதத்தைக் கூறத் தயங்கி நிற்கின்றது.

தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என ஜனாதிபதி தனது இரண்டாவது பதவிக் காலத்தில் வலியுறுத்தியுள்ளார். இங்கு அவர் கூறும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு எது என்பதை எப்படித் தீர்மானிப்பது?

### தீர்வு குறித்து மக்கள் தெளிவு

சுயநிர்ணய உரிமை உள்ள தேசிய இனத்தின் உரிமைகளை வரையறைக்குள் ஒடுக்கி இவைதான் தரப்படும் என்று அரசு கூறும் பொழுது அதை மக்கள் ஏற்கிறார்களா இல்லையா என்பதை-எவ்வாறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தெரிந்து கொள்ளப் போகிறார்கள். அதே சமயம் தீர்வு குறித்துத் தமிழ் மக்கள் 1977இலேயே தெளிவான ஆணையை வழங்கி விட்டார்கள். இதன் பின்னர் மீண்டும் மீண்டும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு என்று தெற்கின் அரசியல் தலைவர்கள் எதனைக் கூறுகிறார்கள்? அப்படியே அவர்கள் கேட்டாலும் மக்களிடம் இருந்து எப்போதோ தெளிவான ஆணையைப் பெற்றவர்கள் அது என்ன என்பதையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு என்பது என்ன என்பதையும் அரசுக்குத் தெளிவுபடுத்த வேண்டாமா?

தெளிவான உரிமைக்காகக் குரல் கொடுப்போம் என்று புறப்படுபவர்கள் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தி நிற்க வேண்டுமேயன்றி நழுவல் போக்கைப் பின்பற்றக் கூடாது.

2009 மே திங்களில் பெரும் பின்னடைவையும் மாபெரும் அவலங்களையும் சந்தித்த தமிழ்த் தேசிய இனம் மற்றவர்களின் தயவில்தான் வாழ வேண்டும் என்று பெரும்பான்மை இன ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் எதிர்பார்க்கின்றன. இதற்குத் துணைபோவதற்குத் தமிழர்கள் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். அதற்காக மக்களிடம் ஆணை பெற்றுச் சென்றவர்களும் அப்படி இருக்கக்கூடாது.

அதுவும் தந்தை செல்வா வழியில் நாம் அரசியற் செய்கின்றோம் என்று கூறிக்கொண்டு தமிழ்த் தேசியத்தை மறந்து விட்டு தமிழ் அரசியல் தலைவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது.

### தந்தை செல்வாவின் அரசியல்

தந்தை செல்வா தமிழ்த் தேசியம் என்பதில் உறுதியாக நின்றார். ஆனால் மஹிந்தவோ ஒரே தேசியம் ஒரே நாடு என்று தான் இன்றும் கூறுகின்றார். தமிழ்த் தேசியத்தை அவர் என்றும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் அவர் தரப்போகும் தீர்வு தமிழர் தேசியத்தை மறுக்கும் தீர்வாகவே அமையும். அதைத் தமிழர் தரப்பு ஏற்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றதா? அப்படி இருக்க முடியாது என்றே நம்புகின்றோம்.

தமிழர் தேசியத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வைத் தருமாறு மஹிந்தவிடம் துணிந்து கூறவேண்டிய கடமை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு உண்டு. அதை விடுத்து நழுவல் போக்கை மேற்கொள்வதாலோ இராஜதந்திரம் என்ற பெயரின் கீழ் மேலும் மேலும் வளைந்து கொடுப்பதாலோ எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

தந்தை செல்வா இலங்கைத் தீவில் இருந்த சிறந்த அரசியல் ஞானியாவார். இத்தீவுக்கு ஏற்ற அரசியல் முறைமையை எடுத்துக் கூறி அதை அரசியல் கொள்கையாக மக்கள் முன் வைத்தவர். அவரை இனவாதி எனச் சிங்களத் தலைவர்கள் பலரும் கொழும்பிலிருந்து வெளி வரும் ஏடுகளும் தூற்றின. அவர் எவற்றைக் கண்டும் அஞ்சாமல் தனது காலடியை எடுத்து வைத்தார்.

அவர் இன்றிருந்தால் இவ்வாறுதான் செயற்பட்டிருப்பார் என்று ஆரூடம் கூறுமளவு சிக்கலான அரசியலை அவர் நடத்தவில்லை. அவர் இன்றிருந்தால் என்று கூறுவோமானால் அவர் இறந்த 1977 முதல் இன்று வரை இருந்திருந்தால் என்றுதான் நாம் பார்க்கவேண்டும். இந்த இடைக்காலத்தில் அவர் இருந்திருந்தால் நிலைமை வேறாகி இருந்திருக்கலாம். இப்போதுள்ள அவலச் சூழ்நிலையில் அவர் இருப்பாரானால் என்று மட்டும் வைத்துக்கொண்டாலும் கூட, அவர் தமிழினத்தின் தேசிய உரிமைகளுக்காகவே குரல் கொடுப்பார் என்று நாம் திடமாக எண்ணலாம். ஏனெனில் அவரது அரசியற் பயணம் திறந்த ஒரு புத்தகமாகும்.

தந்தை செல்வா, இலங்கைத் தீவுக்கு ஏற்றது இணைப்பாட்சி முறைமையே என்று கூறியவர். அதனையே அரசியல் கொள்கையாக வரித்துக் கொண்டவர். அந்த இணைப்பாட்சியில் ''தமிழரசு'' என்று ஒன்றிருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். அதனால்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரில் கட்சியை அவர் தொடங்கினார். இதனைப் பிரிவினை என்று சிங்கள அரசியல்வாதிகள் கூறி, சிங்கள மக்களைத் திசை திருப்பினர். இதன் விளைவுதான் 1956 இலும் 1958 இலும் தமிழ் மக்கள் மீதான பேரினவாத வன்செயல்களாகும். 1958 வன்செயல் தமிழர் தாயகத்தை உறுதிப்படுத்தியது வரலாறு.

**தமிழர் தேசியத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வைத் தருமாறு மஹிந்தவிடம் துணிந்து கூறவேண்டிய கடமை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு.**

### பண்டா-செல்வா ஒப்பந்தம்

1956இல் திருமலையில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சி மாநில மாநாட்டில், தமிழ் மக்களின் உரிமைகளை ஓராண்டுக்குள் வழங்காவிட்டால் அறப்போர் தொடங்கும் எனத் தந்தை செல்வா அறிவித்தார். தொண்டர்களைத் திரட்டிப் பயிற்சி அளித்தார். இதனால் அன்றைய பிரதமர் பண்டாரநாயக்கா செல்வாவுடன் பேசினார். ஒப்பந்தம் உருவானது அதுதான் 'பண்டார-செல்வா ஒப்பந்தம் என்று வரலாற்றில் பதியப்பட்டது. இந்த ஒப்பந்தம்' இணைப்பாட்சியை வலியுறுத்தவில்லை. ஆனால் பிரதேச சபைகள் அமைப்பதை ஏற்றுக் கொண்டது. இதன் மூலம் தந்தை செல்வா தனது அடிப்படைக் கொள்கையான "இணைப்பாட்சியை" விட்டுவிட்டார் என்று கூற முடியாது. இவ்வொப்பந்தம் தமிழர் தாயகத்தை உறுதிப்படுத்தியது, காணி உரிமையை காப்பாற்றியது. ஆனால் தந்தை செல்வா கூறினார், ''இவ்வொப்பந்தம் இணைப்பாட்சியின் முதல்படி என்று.''

### தோல்வி அடைந்த ஒப்பந்தங்கள்

இணைப்பாட்சிக்கான முயற்சி தொடரும் என்பதுதான் தந்தை செல்வாவின் நிலைப்பாடு ஆகும். 1957இல் உருவான இந்த ஒப்பந்தம் 1958இல் பிரதமர் பண்டாரநாயக்காவினால் கிழித்தெறியப்பட்டது. இதனைத் தொடர்ந்து தீவு முழுவதும் தமிழ் மக்கள் மீதான கொடுமையான வன்முறைத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. தமிழ் மக்கள் தமது தாயகத்தை நோக்கி அனுப்பப்பட்டார்கள்.

1960இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா தந்தை செல்வாவுடன் சமரசத்திற்கு வந்தார். பண்டா -செல்வா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தத் தான் உடன்படுகிறார் என்றார் சிறிமா. 1960 ஜூலையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமராகியதும் செல்வாவுக்குத் தான் கொடுத்த வாக்குறுதியை மீறி சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக்கினார்.

இதனைத் தொடர்ந்து தந்தை செல்வா 1961 பெப்ரவரியில் தமிழர் பகுதிகளில் சத்தியாக்கிரகப் போரை தொடங்கினார். இந்த அறப்போர் 1961 ஏப்ரலில் இராணுவத்தை ஏவி அவசரகாலச் சட்டத்தையும், ஊரடங்குச் சட்டத்தையும் பயன்படுத்தி சிறிமாவோவால் முறியடிக்கப்பட்டது.

1965இல் டட்லி சேனநாயக்காவுடன் செல்வா ஒப்பந்தம் செய்தார். இது 'டட்லி-செல்வா ஒப்பந்தம்' எனப்பட்டது. ஆனால் பிரதமரான டட்லி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த எதுவுமே செய்யவில்லை. ஒப்பந்தத்தை மீறிப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டார்.

1970 இல் மீண்டும் சிறிமாவோ பிரதமராகினார். 1972 இல் புதிய குடியரசு அரசியலமைப்பு மூலம் இலங்கைத் தீவை பௌத்த சிங்களக் குடியரசாக்கினார்.

### வட்டுக்கோட்டைத் தீர்மானம்


செல்வா இதன் பின்னர் தமிழ் அரசியற் கட்சிகளை ஒன்று சேர்த்து தமிழர் கூட்டணியை ஆரம்பித்தார். இத்தமிழர் கூட்டணிதான் 1976இல் தமிழர் விடுதலைக் கூட்டணி என்று மாற்றம் பெற்று வட்டுக்கோட்டைத் தீர்மானத்தைப் பிரகடனப் படுத்தியது.(22ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்த் தேசியத்தைத் துணிவுடன் கூற வேண்டும்

*தந்தை செல்வாவைப் பின்பற்றி இன்றைய தமிழ்க் கட்சிகள் அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியம்தான் எமது நிலைப்பாடு என்று துணிந்து கூறவேண்டும். மஹிந்தவின் நிலைப்பாடோ, ஐ.தே.கட்சியின் நிலைப்பாடோ வேறு எந்தச் சிங்களத் தலைவருடைய நிலைப்பாடோ என்றும் எப்பொழுதும் ஒரு நாடு ஒரு தேசியம் என்பதேயாகும். அதை நிலைநிறுத்தக் கூடிய மாற்றங்கள் மூலம், நில அபகரிப்பு தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தமிழ்த் தலைமைகள் என்ன செய்யப்போகின்றன எனத் தெரியவில்லை. தமிழத் தேசியத்தை நிலை நாட்ட எந்தவொரு முயற்சியும் அவற்றால் எடுக்கப்படவில்லை என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது. மாறாக மக்களை ஏமாற்றும் விதமாகவே அனைவரும் செயற்படுகிறார்கள். காலம் தாழ்த்தாது தமிழ்க் கட்சிகள் செயலில் இறங்க வேண்டும் என்பதே தமிழ் நெஞ்சங்களின் இன்றைய ஏக்கம். காலம் தாழ்த்தினால் ஒரு நாடு ஒரு தேசியம் என்பதற்கமைய இது முழுமையாக சிங்கள பௌத்த நாடாகவே மாறிவிடும். 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் [illegible] விடுங்கள் என்று கூறுவோர், தமிழர் தரப்பு சம்மதமின்றி 1987 இல் ஏற்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமும் காலம் கடந்தது தான் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதையும் தூக்கிப்பிடிக்காமல் 2002 இல் தமிழர் தரப்புக்கும் சிங்கள அரசுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் தமிழ்த் தரப்பால் முன்வைக்கப்பட்டவைகளை அடித்தளமாகக் கொண்டு பேச்சு நடத்த முயற்சிக்க வேண்டும். அதுதான் சரியான வழியாகவும், தீர்வாகவும் அமையமுடியும். அப்பொழுது தான் தமிழ் தேசியம் இங்கு தலை நிமிர முடியும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறக்கும் ஹோட்டல்...





இது உலகத்தின் முதல் பறக்கும் ஐந்து நட்சத்திர விடுதி . சோவியத் நாட்டில் தாயாரிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய உலங்குவானூர்தியை மாற்றி உருவாக்கப்பட்டது.

உலகிலேயே மிகப் பெரிய ஹெலிகப்டரான சோவியத் தாயாரிப்பான -12 என்ற உலங்குவானூர்தி ஐந்து ஆண்டு கடின உழைப்பால் மாற்றி அமைக்கப்பட்ட விடுதி இது ஆகும்.

இது பார்ப்பதற்கு இரட்டை அடுக்கு பஸ் போலத் தோற்றமளிக்கும். இதனுடைய நீளம் 135 அடி, 45 அடி உயரம் உடையது. 105 ஆயிரம் கிலோ நிறையை இந்த உலங்குவானூர் தியால் தூக்க முடியும். இது மணித்தியாலத்துக்கு 158 மைல் வேகத்தில் பறக்கக் கூடியது. இதில் 18 வசதியான அறைகள் உள்ளன.

## குருதிப்பரிசோதனை மூலம் இதய நோயை அறிய முடியும்



மனித உயிரைக் குடிக்கும் நோய்களில் இதய நோயும் ஒன்று. குருதியில் ஏற்படும் அதிகமான கொழுப்புச் சத்து, இரத்த அழுத்தம் அதிகரிப்பு போன்ற காரணங்களால் மாரடைப்பு மற்றும் இதய நோய்கள் உண்டாகின்றன.

இந்த நோய்கள் ஏற்படுவதற்கு 6 ஆண்டுகளுக்கு முன்பே குருதிப் பரிசோதனையின் மூலம் கண்டறிய முடியும். இந்தத் தகவலை டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழுவினர் தெரிவித்துள்ளனர். பொதுவாக, இரத்தத்தில் புரோட்டீன் அளவு குறைவதாலும், கார்டியாக் டிரபோனின்-டி என்ற மூலக்கூறு இருப்பதாலும் தான் கடுமையான மாரடைப்பு ஏற்படுகிறது என ஏற்கனவே நடத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் நடத்திய புதிய ஆய்வில் மாரடைப்பை உண்டாக்கும் இவை இரத்தத்தில் உருவாகி இருப்பதை 6 ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிய முடியும் எனத் தெரியவந்துள்ளது.

இதே கருத்தைதான் டெக்சாஸ் பல்கலைக்கழக மற்றொரு விஞ்ஞானி பேராசிரியர் ஜேம்ஸ் டி லெமாஸ் நடத்திய ஆய்வும் தெரிவிக்கின்றது. எனவே, இரத்த பரிசோதனை மூலம் மாரடைப்பு உள்ளிட்ட கொடூர இதய நோய்களைக் கண்டறிய முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

கொழுப்புச் சத்து, இரத்த அழுத்தம் போன்றவற்றை குறைக்க மருந்து, மாத்திரைகள் பயன்படுத்துவதை விட இரத்தப் பரிசோதனை செய்து, உணவு கட்டுப்பாட்டின் மூலம் சரி செய்யலாம் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.




## செல்பேசியும் வைரஸும்

(செவ்வாய்க்கிழமைத் தொடர்ச்சி)




இது போன்ற பரவும் வழிகளில், போன் பயன்படுத்துபவர் தானாக ஒன்று அல்லது இரண்டு முறை தகவல் இயக்கியை அழுத்த வேண்டியதிருக்கும். பொதுவாக போன் அழைப்புகளை ஏற்படுத்தவும் பெறவும் மட்டுமே பயன்படும் செபேசிகளில் அவ்வளவாக வைரஸ்கள் பரவுவதில்லை.

2004 ஆம் ஆண்டில் Cabir A என்ற வைரஸ் முதல் முதலாகத் தலை காட்டியது. புளூடூத் வழி பரவிய இந்த வைரஸ் பெரும்பாலும் எந்தவித பாதிப்பையும் தான் பரவிய செல்பேசிகளில் காட்டவில்லை. மால்வேர் புரோகிராம்களைத் தயாரிக்கும் ஒரு சிலர் இது போல் செல்பேசிகளுக்கும் வைரஸ்களை அனுப்ப முடியும் என்று காட்டுவதற்காகவே இதனைத் தயாரித்தனர்.

ஜனவரி 2005ல், Commwarrior வைரஸ் மிகப் பெரிய அளவில் பரவியது. புளூடூத் மூலமாக ஸ்கேண்டிநேவியாவில் உள்ள ஒரு நிறுவனத்தின் அனைத்து செல்பேசிகளுக்கும் பரவியது. ஏதேனும் ஒரு மொபைல் போனில் இந்த வைரஸ் அமர்ந்தவுடன் அருகில் உள்ள புளூடூத் இயக்கப்பட்ட அனைத்துப் போன்களையும் இது தேடி ஒட்டிக் கொள் கிறது. மேலும் உங்கள் அட்ரஸ் லிஸ்ட்டில் உள்ள அனைத்து எண்களுக்கும் தகவல் அனுப்ப அதன் மூலமும் பரவுகிறது. இதுவரை வந்த செல்பேசி வைரஸ்களில் இதுதான் இரு வழிகளில் பரவி அதிக சேதம் விளைவிக்கும் வைரஸாக உருவெடுத்துள்ளது.

பாதுகாத்துக் கொள்வது எப்படி?

எப்படி கணினிகளை அவற்றின் வைரஸ்களில் இருந்து பாதுகாத்துக் கொள்கிறோமோ, அதே போல செல்பேசிகளையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

எப்போதும் ஒரு செய்தியைத் தாங்கி வரும் பைலையோ, புளூடூத் மூலம் வரும் பைலையோ, அதனை அனுப்பயவர், அல்லது புறப்பட்ட எண் எமக்குத் தெரியாத எண்ணாக, பழக்கம் இல்லா எண்ணாக இருந்தால், அந்த பைலைத் திறக்கக் கூடாது. நம் அவசரத்திலும் இதனை எப்போதும் கவனமாகக் கொள்ள வேண்டும். அதிக முன்னெச்சரிக்கையாக உள்ளவர்கள் கூட இந்த விடயத்தில் கோட்டைவிட்டு விட்டு, வைரஸ் பைல்களைத் திறந்துவிடும் நிகழ்ச்சிகள் நிறைய நடக்கின்றன.

புளூடூத் செயல்பாட்டினை மறைத்தே வைக்கவும். இயக்க வேண்டாம். அதனை ''hidden'' என்ற வகையிலேயே வைக்கவும். இதனால் மற்ற செல்பேசிகளின் புளூடூத் வலையில் இது சிக்காது. இந்த செட்டிங்ஸை புளூடூத் ஆப்ஷன் திரையில் நீங்கள் காணலாம்.

செக்யூரிட்டி அப்டேட் பைல்களை, உங்கள் சிஸ்டம் பைல்களுக் கேற்ப, நிறுவனங்கள் அனுப்புகின்றன. இந்த பேட்ச் பைல்கள், வைரஸ் கொண்ட பைல்கள் எப்படிப்பட்ட பைல் பெயர்களில் வருகின்றன என்று பட்டியல் தருகின்றன. இவற்றைத் தெரிந்து வைத்து, அத்தகைய பைல்களைத் தவிர்க்கவும். FSecure, McAfee, Symantec ஆகியவற்றின் இணையதளங்களுக்குச் சென்றால் இந்த பைல்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ளலாம். இவற் றில் சில தளங்களில் உங்கள் மின்னஞ்சல் முகவ ரிகளைப் பதிந்து வைத்தால், இவை மொபைல் வைரஸ் மற்றும் பிற தகவல்களைத் தொடர்ந்து அனுப்புகின்றன.

பல நிறுவனங்கள் செல்பேசி பாதுகாப்பிற்கென பாதுகாப்பான மென்பொருள்களைத் தயாரித்து வழங்குகின்றன. பெரும்பாலானவை இலவசங்களே. சில கூடுதல் வசதிகளுக்குக் கட்டணம் செலுத்தச் சொல்கின்றன. இவை வைரஸ்களை நீக்குகின்றன. வைரஸ் நுழைந்துவிடாமல் செல்பேசிகளைப் பாதுகாக்கின்றன. சிம்பயன் சிஸ்டம் தயாரித்து வழங்கும் நிறுவனம், தன் சிஸ்டத்தில் புளூடூத் மூலம் வரும் வைரஸ் பைல்களைத் தடுக்கும் புரோகிராம் ஒன்றைத் தயாரித்து வழங்குகிறது.

மேலே தரப்பட்ட தகவல்களிலிருந்து, எப்படி முதலில் வந்த வைரஸ் புரோகிராமிற்குப் பின் வந்த வைரஸ்கள், தங்கள் வடிவமைப்பிலும், மேற்கொள்ளும் சேத வழிகள் மற்றும் சேதங்களிலும் முன்னேறியுள்ளன என்று பார்க்க முடிகிறது. இப்போதைக்கு பெருமளவில் மொபைல் போன்களை இந்த வைரஸ் புரோகிராம்கள் செல்பேசிகளைக் கெடுக்கவில்லை என்றாலும் வரும் நாள்களில் இவற்றின் தீவிரம் அதிகமாகும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. செல்பேசி மூலம் வங்கிப் பணப் பரிமாற்றம் எல்லாம் மேற் கொள்ளப் போகும் சூழ்நிலையில் நாம் கவனமாக இருக்க வேண்டும். (முற்றும்)

## கூகுள் ஏர்த் (Google Earth) முப்பரிமான வசதியுடன்



'கூகுள்' நிறுவனத்தின் அற்புதத்தில் ஒன்றான கூகுள் ஏர்த் புதிய பதிப்பான 6 வெளியாகியுள்ளது. இந்தப் புதிய பதிப்பின் மூலம் உலகத்தை இன்னும் உண்மையாகக் காணக்கூடியதாக உள்ளது.

இந்தப் புதிய பதிப்பில் முப்பரிமாண மரங்கள், உடன் இணைக்கப்பட்ட ஸ்ட்ரீட் வியூ () மற்றும் மெருகூட்டப்பட்ட வரலாற்று ரீதியான படங்கள் எனப் பல்வேறு வசதிகளும் இணைக்கப்பட்டுள்ளதாக கூகுள் கூறுகிறது.

**முப்பரிமாண மரங்கள்**

இந்தப் புதிய கூகுள் ஏர்த் பதிப்பன் மூலம் மிகத் துல்லியமான முப்பரிமாணப் படங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது. குறிப்பாகப் பூமியில் காணப்படும் மரங்கள் கூட முப்பரிமாணத்தில் காட்சியளிக்கிறது. இதன் மூலம் நிஜமான சுற்றுலா அனுபவத்தை கூகுள் ஏர்த் மூலம் பெறலாம் என கூகுள் உறுதியளிக்கிறது.

உடன் இணைக்கப்பட்ட கூகுள் வழங்கிக்கொண்டிருக்கும் இந்தச் சேவையானது இப்போது கூகுள் ஏர்த்துடன் ஒன்றிணைக்கப்பட்டு வெளி வந்துள்ளது. இனி கூகுள் ஏர்த்தில் இருந்தவாறே பல நகரங்களின் தெருக்களுக்குச் சென்றுவரலாம்.

**வரலாற்றுப் புகைப்படங்கள்**

கூகுள் ஏர்த்தின் முன்னைய பதிப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த வரலாற்று ரீதியான படங்களின் தொகுப்பினை இன்னும் இலகுவாக இந்த புதிய பதிப்பில் காணக்கூடியதாக இருக்கும். நீங்கள் ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க இடத்தினை அடையும் போது அந்த இடம் தொடர்பான வரலாற்று ரீதியான படங்களினை தோற்றுவிக்கும் வசதியே இது.இவ்வாறு பல [illegible]

## புதிய தொலைபேசியும் இயங்கு தளமும்




கூகுள் நிறுவனம் தனது மொபைல் இயங்குதளமான அன்றொயிடின் (Android) புதிய பதிப்பான ஜிஞ்ய பிறட் (Gingerbread) இனை உலகிற்கு அறிமுகம் செய்து வைத்துள்ளது.

இந்தப் புதிய பதிப்பானது கூகுளின் (நிறுவனத்தின் தயாரிப்பு) ஸ்மார்ட் தொலைபேசியுடன் வெளி வந்துள்ளது.

இந்த புதிய இயங்கு தளமானது பல புதிய வசதிகளை உள்ளடக்கியுள்ளதாகவும் பாவனையாளர்கள் அதி சிறந்த கூகுள் அனுபவத்தை இதில் பெறலாம் எனவும் கூகுளின் மென்பொருள் வடிவமைப்பாளர்கள் கூறுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

தென்மராட்சியில் 'சரசாலை' என்னும் கிராமத்தில், கனகம்புளியடிச் சந்திக்கு அருகில் 1884 ஆம் ஆண்டு ஆங்கிலேய மிஷனரியினரால் உருவாக்கப்பட்டு 125 ஆண்டுகள் கடந்தும் கம்பீரத்துடன் செயற்பட்டு வருவதே இன்றைய சரசாலை சரஸ்வதி வித்தியாலயம். சிறப்புற இயங்கி வந்த பாடசாலை 1939 ஆம் ஆண்டு துரதிஷ்டவசமாக தீக்கிரையானது. அதே வருடம் தற்போது இயங்கும் கட்டடத்தினை சரவணமுத்து கணபதிப்பிள்ளை, அதிபர் பொன்னையா கனகசபை ஆகியோர் ஊர்மக்களிடம் நிதி திரட்டி அமைத்தனர். அதன் பின்னர் இந்த வித்தியாலயம் கல்வி வளர்ச்சியில் பெரும் முன்னேற்றம் கண்டது. எட்டாம் வகுப்பு வரை இருந்த பாடசாலைக் கல்வி, 1940 ஆம் ஆண்டு சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் பரீட்சைக்கு தோற்றும் பத்தாம் வகுப்பு வரை வளர்ச்சி கண்டது. இக்காலப்பகுதியில் பல்வேறு கல்விச் செயற்பாடுகளிலும் வளர்ச்சி கண்டு தென்மராட்சி பிரதேசத்தில் புகழ்பூத்த வித்தியாலயமாகத் திகழ்ந்தது. கல்விச் செயற்பாட்டின் வளர்ச்சிக்கு வித்தியாலய தலைமை ஆசிரியர் பொன்னையா கனகசபையுடன் இணைந்த ஆசிரிய குழாமும் அடங்கும்.


1962 ஆம் ஆண்டு அரசு பொறுப்பேற்றது. அக்காலப் பகுதியில் அதிபராக இருந்த இராசையா இளைப்பாறிச் செல்ல சி.விஸ்வநாதன் அதிபரானார். வித்தியாலய வளர்ச்சிக்கு வித்திட்ட பொன்னையா கனகசபை 10.06.1968இல் மீண்டும் அதிபராகி 31.12.1970 வரை கடமையாற்றி இளைப்பாறினார். அதன் பின்னர் கல்வயலைச் சேர்ந்த க.சங்கரப்பிள்ளை அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்றார். இவரைத் தொடர்ந்து சு.குமாரவேலு அதிபராகி சிறிது காலத்தில் இளைப்பாறிச் செல்லவே வித்தியாலய ஸ்தாபகர்களில் ஒருவரான கணபதிப்பிள்ளையின் மருமகனான சி.வைரவிப்பிள்ளை அதிபரானார். இவரின் காலத்தில் வித்தியாலயம் கல்வி வளர்ச்சியில் பெரும் வளர்ச்சி கண்டது. வட்டாரப் போட்டிகள், தமிழ் மொழித்தினம், ஆங்கில மொழித்தினம் போன்றவற்றிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன்னணி வகித்தது. இவரின் காலத்தில் அப்போதைய சாவகச்சேரித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வ.ந.நவரத்தினம் அவர்களின் நிதி உதவியுடன் முதலாம் வகுப்பு மாணவர்களுக்கென தனியான வகுப்பறை கட்டப்பெற்றது.

பின்னர் மாணவர்களின் தொகை குறைவடைந்ததால் ஐந்தாம் வகுப்பு வரை நடத்தப்பட்டு வந்தது. 1985 இல் அதிபர் சி.வைரவிப்பிள்ளை இளைப்பாறிச் செல்ல அவரின் இடத்திற்கு அங்கு பத்து வருடங்கள் உதவி ஆசிரியராக கடமையாற்றிய சாம்பசிவம் அதிபராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் வகுப்புகள் படிப்படியாக அதிகரித்து எட்டாம் வகுப்பு வரை நடத்தப்பட்டது. 1989 இல் இவர் இடமாற்றம் பெற்றுச் செல்ல நுணாவிலைச் சேர்ந்த ச.நடேச பிள்ளை அதிபராகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் வித்தியாலயத்தில் 160 மாணவர்கள் கல்வியை மேற்கொண்டிருந்தனர். பாடசாலை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் முன்னணியில் திகழ்ந்தது. பாடசாலை வளங்களும் அதிகரித்தன. பாடசாலையும் சமூகமும் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்பட்டது.

இந்த அதிபர் பாடசாலைச் சமூகத்தினரிடையே நல்ல அதிபர் என்ற பெயர் பெற்று சிறப்பாக நடத்தி வந்தார். 1997 இல் இவர் ஓய்வு பெற்றுச் செல்ல த.திருநாவுக்கரசு அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரும் 1999 இல் இடமாற்றம் பெற்றுச் செல்ல ச.அரியதாஸ் அதிபரானார். பின்னர் 1999.10.19 ஆம் திகதி மட்டுவிலைச்சேர்ந்த சு.சேய்சோதிநாதன் அதிபராகப் பொறுப் பேற்று நடத்திய காலத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடப்பெயர்வு ஏற்பட்டது. இடப்பெயர்வு வேளையில் வடமராட்சியில் இயங்கிய தென்மராட்சி வலயப்பாடசாலையொன்றுடன் இணைந்து இயங்கியது.

2002 ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்வின் போது வித்தியாலய அதிபர் சு.சேய்சோதிநாதன் வன்னிப் பாடசாலையொன்றுக்கு இடமாற்றலாகிச் செல்ல வித்தியாலயத்தின் சிரேஷ்ட ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி ஜெயமணி தேவேஸ்வரன் அதிபராகப் பொறுப்பேற்றார்.

2002 ஆம் ஆண்டு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணைக்காக திறக்கப்பட்டபோது, அவ்வேளையில் வித்தியாலய வளாகத்தில் படையினரின் முகாம் அமைந்திருந்ததால் அயற்பாடசாலை யான சரசாலை ஸ்ரீகணேசா வித்தியால யத்துடன் இணைந்து இயங்கி யது. 2002 ஆம் ஆண்டு மூன்றாம் தவணையின் போது வித்தியாலயம் மீண்டும் இயங்க ஆரம்பித்தபோது அந்தப் பாட சாலை கல்வியை இடைநிறுத்தி இப்பாடசாலையில் இணைய மாண வர்கள் தயங்கினர்.



(தொடரும்)

# பரம்பரைத் தொழிலாகத் தொடரும் முறிவு, நெரிவு வைத்தியம்

தொகுப்பு: ஜயந்தன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இயற்கை மருத்துவ மூலிகைகளைக் கொண்டு உருவாக்கப்படும் மருந்து களை மக்கள் பாவித்து கடந்த காலங்களில் நோய்களைக் குணமாக்கி வந்துள் ளனர். இந்த நாட்டு வைத்தியமுறை ஆயுர்வேத மருத்துவமாக வளர்ச்சிய டைந்துள்ளது. இந்த நாட்டு வைத்தியத்தில் ஒன்றாக விளங்குவதுதான் முறிவு, நெரிவு வைத்தியமாகும்.

தனது தொழில் பரம்பரைத் தொழிலாக இருக்கக்கூடாது என நினைத்து ஆர்வமுள்ளவர்களைத் தன்னகத்தே வைத்திருந்து பயிற்சியினைக் கொடுத்து வந்தார். வருமானம் கருதி பயிற்சி பெற்ற பலர் தமது நோக்கத்தினை முழுமையாக பெறமுடியாமல் சென்றனர்.இவர் தனது மருமகன் உறவான ஒருவரை சிறுவயதில் அழைத்து வந்து கல்வி புகட்டியதுடன் தனது தொழிலையும் இதய சுத்தியுடன் பயிற்றுவித்தார். பயிற்சியினை சிறுவயது முதல் மேற்கொண்ட சின்னத்தம்பி பவனேந்திரன் என்பவரே இந்தத் தொழிலைத் தனது மாமனின் மறைவுக்குப் பின்னர் மேற்கொண்டு வருகிறார்.

ஆயுள்வேத வைத்தியர் சி.கிருஷ்ணன் நாட்டு நிலைமை காரணமாகப் போக்கு வரத்துப் பாதை (ஏ-9) தடைப்பட்ட பின்னர் மீசாலை புத்தூர்ச் சந்தியில் உள்ள தனது வீட்டில் முழுநேர வைத்தியத்தைச் செய்து வந்தார். மட்டக்களப்பில் உள்ள தனது மகளைப் பார்க்கச் சென்ற வேளையில் நாட்டு நிலைமைகளால் அங்கிருந்து தொழிலை மேற்கொண்டதுடன் அங்கிருந்த போது தொழிலின் மேன்மை யையும் மூலிகைச் செடிகளின் பெயர்களையும் அவைகளின் பயன்பாடு, மருந்து தயாரிக்கும் முறையையும் எழுதி வைத்துள்ளார்.

வைத்தியர் கிருஷ்ணன் சிறுவயது முதல் தம்முடன் நின்று பயிற்சி பெற்ற மருமகன் உறவான சி.பவனேந்திரனைப் பட்டதாரியாக்கி மகிழ்ந்ததுடன் தனது மூத்த மகளை இவருக்கு திருமணம் செய்து வைத்தார்.இவரது மூன்று மகன்மாரும் வெளி நாடு சென்றதால் மூத்த மகளுக்கும் தனது தொழிலைப் பழக்கியிருந்தார்.

2002 ஆம் ஆண்டு ஏ 9 வீதி போக்குவரத்துக்குத் திறக்கப்பட்ட போது மட்டக்களப்பிலிருந்து திரும்பிய வைத்தியர் கிருஷ்ணன் 2003.11.19 ஆம் திகதி இறக்கும் வரை தனது வீட்டிலிருந்து தொழிலினை மேற்கொண்டு வந்தார். இவர் மட்டக்களப்பில் இருந்த போது ஏற்பட்ட இடப்பெயர்வுக் காலத்தில் அளவெட்டி மாகியப்பிட்டியில் தங்கியிருந்து கணவனும் மனைவியும் இணைந்து இத்தொழிலை மேற்கொண்டனர். 2003 .11.19 ஆம் திகதி வைத்தியர் கிருஷ்ணன் இறந்த பின்னர் இவர்கள் இருவரும் இணைந்து வைத்தியத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

சி.பவனேந்திரன் பட்டதாரியான பின்னர் ஆசிரியராகவும் பின் அதிபராகவும்.கடமையாற்றி வருவதால் வேலை நேரம் தவிர்த்து ஏனைய நேரங்களில் புக்கை கட்டும் தொழிலினை மேற் கொண்டு வருகிறார் .



பரம்பரை வைத்தியர் சி.பவனேந்திரன்

சி.பவனேந்திரன் சிறு வயது முதல் மூலிகைகளைப் பிடுங்கி வந்து கொடுப்பது முதல் புக்கை கட்டுவது வரை பயிற்சி பெற்ற போதிலும் ஆயுள்வேத வைத்தியராகச் சான்றிதழ் பெற நாட்டு நிலைமைகள் தடையாக இருந்தன. நாட்டு நிலைமை சீராகி அனைத்து அரச கூட்டுத்தாபனச் செயற்பாடு களும் முழுமையாகச் செயற்படத் தொடங்கிய போது கடந்த 2003 இல் இலங்கை ஆயுள்வேத வைத்தியர் சபையினால் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் நடமாடும் சேவை யொன்று நடத்தப்பட்டது. அவ்வேளையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பதிவு செய்யப்படாத பரம்பரை வைத் தியர்களை சபையுடன் இணைப்பது தொடர் பான பரீட்சை யினை நடத்தியபோது சி.பவனேந்திரன் அப்பரீட்சையில் சித்தி பெற்று ஆயுள்வேத முறிவு நெரிவு சிறப்பு வைத்தியராகப் பட்டம் பெற்றார். பட்டச் சான்றிதழ் ஆயுள்வேத சித்த மருத்துவத்துறை அமைச்சரால் இவருக்கு வழங்கப்பட்டது.

ஆயுள்வேத வைத்தியராகச் சான்றிதழ் பெற்ற போதிலும் தனது அதிபர் தொழிலைக் கைவிடாது பணியாற்றுவதுடன் பரம்பரை வைத்தியத் துறையினையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்.

(முற்றும்)

தென்மராட்சி வலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு இரசனையோடு இணையும்போது நாட்டில் பூரண மனிதம் நிச்சயம் மலரும்

**யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் உரை**

கொழும்புத்துறை,டிசெ.17

எமது வாழ்வு, கலை, அறிவு, இரசனையோடு பின்னிப்பிணைந்து அமையும்போது சமுதாயத்திலும் நாட்டிலும் பூரண மனிதம் மலரும். யாழ்ப்பாணத் தமிழ் உலகெங்கும் அடையாளப்படுத்தப்பட்ட மொழியாகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம்.

யாழ். பிரதேச கலாசாரவிழா நேற்று முன்தினம் யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது:

கலையும், விஞ்ஞானமும் மனிதனின் இரு கண்கள். இருளகற்றி அறிவொளி யேற்ற விஞ்ஞானம் உதவுகிறது. பண்பாட்டை நிலை நிறுத்தக் கலை உதவுகிறது. கலை என்பது கலாசாரம், நடை, உடை உணவுப் பாவனைகளில் பாரம்பரியங்களைப் பேணுவதிலும் தங்கியுள்ளது.

எல்லா மொழிகளையும் கற்க வேண்டும். ஆனால் எமது இனிய தமிழ் மொழியில் கலப்படம் தவிர்க்க வேண்டும். எமக்கென்று உள்ள உடை, உணவு முறைகளைக் கைக்கொண்டு உடல், உளப் பாதிப்பின்றி வாழ முயல வேண்டும். எமது தனித்துவத்தைப் பாதுகாக்கக் கலாசாரம் காத்திட எழுவோம்- என்றார்.



யாழ்.பிரதேச கலாசாரவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாணவிகளின் கிராமிய நடனம் இடம் பெறுகின்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி க.விஜயரத்தினம், யாழ்.பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் எஸ்.கந்தவேள் ஆகியோரும் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம், சுதர்சினி கரட்சனின் கிராமிய நடனம், திருமறைக் கலாமன்றத்தின் கும்மி நடனம், கவியரங்கம், பண்டார வன்னியன் நாட்டுக்கூத்து ஆகிய கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (204-135-7)

# யாழ். குடாநாட்டுப் பாடசாலைகளின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.17

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ.சி.ஈ. (உயர்தர) பரீட்சையின் முடிவுகள் அண்மையில் வெளியாகின.

எனவே பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப் பட்ட சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை மாவட்ட நிலை ரீதியாக 'உதயன்' தொடர்ச்சியாக வெளியிட்டு வரு கின்றது. ஒரு தொகுதி மாணவர்களின் விவரம் வருமாறு:-

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

**உயிரியல்**

சி.தாரணி (2பிசி), அ.அன்ரன் தனேஸ் (2பிசி), எஸ்.தாரணி (2பி சி).

**கணிதப் பிரிவு**

கே.லக்சனா (2சி எஸ்).

**கலைப் பிரிவு**

கே.தர்மசுகி (3ஏ), கே.கனிமொழி (2ஏபி), மு.ஜெயப்பிரசாத்(2ஏசி), ஜ.சயந்தா (ஏ2பி), கே.மயூரதி (ஏபிசி), ச.டிலோஜினி (ஏபிசி), த.பாதுஜா (ஏபிசி), ப.சிவச்சந்திரன் (ஏபிசி), ஜி.ரஜிதா (ஏ2சி), த.பவிதா (ஏ2சி), இ.பராசக்தி (ஏ2சி), ச.தர்சன் (ஏ2சி), ச.ஜெனிஸ்ரா (எ2சி), தி.கிருத்திகா (ஏபிஎஸ்).

**வணிகப் பிரிவு**

ந.மேரிசெலஸ்ரினா (2ஏபி), இ.மாலதி (2ஏபி), க.கயல்விழி (ஏபிசி).

**அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலை**

க.சுமணா (2ஏபி), பா.அகலிகா (2ஏசி), ச.சங்கீர்த்தனா (2ஏசி), சி.சயந்தன் (2ஏசி), வே.விஜிதரன் (ஏபிசி), உ.நிருஷா (ஏசிஎஸ்),மைதிலிக்கா (2பிசி), கோ.கௌசல்யா (2பிஎஸ்), க.சுகிர்தன் (பி2சி).

**சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்**

**கலைப் பிரிவு**

ம.கஜநேசன் (2ஏபி), நா.கஜேந்தினி (ஏ2பி), பொ.கிருசாந் (ஏபிசி), ப.மரியநாயகி (ஏபிசி), ம.சிந்துஜா (2ஏஎஸ்), வி.ஜனனி (ஏபிஎஸ்), எ.கஜேந்தினி (3பி).

**வர்த்தகப் பிரிவு**

த.சர்மிலன் (2பிசி).

**பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்**

**கலைப் பிரிவு**

மு.சங்கீதா (2ஏபி), ப.கோபிகா (ஏ, பிசி), ச.மேனுகா (3பி), செ.டளிசினி (ஏ2சி), நா.நிசா (2பிசி), ந.யசோதா (3சி). (201-236)


**சைவச்சிறார் இல்லத்திற்கு சமையல் பகுதிக்கு ஆள்தேவை**

கிளிநொச்சி - மாதவ ஆச்சிரம சைவச்சிறார் இல்லத்திற்குச் சமையல் பகுதிக்கு ஆண் - பெண் இருபாலாரும் உடன் தேவை.

25 வயதிற்கும் 55 வயதிற்கும் இடைப்பட்ட விதவைகள், கைவிடப்பட்டவர்கள், அனாதைகளும் விண்ணப்பம் செய்தால் முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்களை எதிர் வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தி. இராசநாயகம், தலைவர், சைவச்சிறார் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:

ROYAL Industries

Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா

நறுமணப்

பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-செட் ஒன்றினை முற்றிலும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.


# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,டிசெ.17

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் நீர்க்குழாய் பொருத்துநர் பயிற்சிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி ஜீ.சீ.ஈ.சாதாரண தரம் வரை கல்வி கற்றிருக்க வேண்டும்.

தகுதியுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்பத்தை முகாமையாளர், கனகபுரம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (204)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகளில்..

பிறப்பு 18 ★ 12 ★ 1955



இறப்பு 17 ★ 12 ★ 2005

அமரர் கதிர்காமு முருகேசு [சிவபாதம்]

ஐந்து ஆண்டுகள் கடந்தே தான் சென்றிட்டாலும்
உந்தன் திருமுகம் தான் அழிந்திடுமா? எம் நெஞ்சில்
உன்னை இழந்திங்கு நாம் ஏங்கியே தவிக்கிறோம்!
வண்ண முகமதை மீண்டும் இனியெங்கே நாம் காண்போம்.

நாகர்கோயில் கிழக்கு,
நாகர்கோயில்.

பிரிவால் துயருறும் :
மனைவி,சகோதரிகள், மருமகன்.

## நெஞ்சை விட்டகலாத இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



சபாரத்தினம் பிரசன்னா

அன்னை மடியில்: 30.10.1984

ஆண்டவன் அடியில்: 08.12.2008

எமது அன்புச் செல்வமே!
இரண்டு ஆண்டுகள் ஓடி
மறைந்ததையா-தம்பியே
கண்ணுக்குக் கண்ணாக
பண்புடனும் பாசத்துடன்
உனைப் பாரினிலே வளர்த்தோமே!
எம்மோடு நீ வாழ்ந்த
பசுமை நினைவுகள் அத்தனையும்
என்றென்றும் எம் மனதில்
நிறைந்திருக்கும் நிலைகொள்ளும்
உமது ஆத்மா சாந்திக்காக நித்தம்
இறைவனை வேண்டுகின்றோம்.

உன் நினைவுடன் வாழும்:
அப்பா, அம்மா,
அன்புத் தங்கை.

மன்னகுண்டான்,
சோரன்பற்று,
பளை.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25.12.1935

மறைவு: 07.01.2009



அமரர் ஆண்டி முருகையா

திதி—ஏகாதசி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மையெல்லாம் உருவாக்கி
வாழ்வதற்கு வழிவகுத்த தந்தையே உங்களைப் பிரிந்து
ஆண்டு இரண்டு ஆனாலும் என்றென்றும் உங்களது
ஆசியுடன் வாழ்ந்திடுவோம் வையகத்தில்!

தியேட்டர் லேன்,
இணுவில் கிழக்கு.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிடிவதைக்கு இணங்கிச் செயற்படும் மாணவர்களுக்கும் இனி வகுப்புத்தடை

## தென் கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவிப்பு

அம்பாறை,டிசெ.17

தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் பகிடிவதைக்கு சிறிதும் இடமளிக்கப்படமாட்டாது. சிரேஷ்ட மாணவர்களின் அறிவுறுத்தலையேற்று அவர்கள் கூறுவதுபோல் வருகை தரும் புதிய மாணவர்களுக்கும் வகுப்புத்தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தென்கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி எஸ்.எம்.முஹம்மட் இஸ்மாயில் கூறினார்.

தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 2009/2010ஆம் கல்வி ஆண்டுக்கான புதிய மாணவர்களின் அனுமதி கடந்த திங்கட்கிழமை ஒலுவில் வளாகத்தில் இடம்பெற்றது.

இதனையொட்டி புதிய மாணவர்களின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பல்கலைக்கழகப் பதிவாளர் எச். அப்துல் சத்தார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

துணைவேந்தர் கலாநிதி இஸ்மாயில் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இலவசக் கல்வியின் தந்தை சீ.டபிள்யூ டபிள்யூ கன்னங்கராவினால் நம் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட இலவசக் கல்வி மாறி மாறி வந்த அரசுகளாலும் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இன்றைய அரசாங்கம் கல்விக்காக, குறிப்பாக உயர் கல்விக்காகக் கூடிய நிதியை ஒதுக்கியுள்ளது.

எதிர்காலத்திற்கான இந்த சிறந்த முதலீடு தொடர்பில் பெற்றோர்களாகிய நாமும் பெரும் அக்கறையுடன் செயற்பட்டு எதிர்காலத் தலைவர்கள், சிந்தனையாளர்கள், அபிவிருத்தித் திட்டங்களை வகுக்கக் கூடியவர்கள் போன்ற நற்பிரஜைகளை உருவாக்கவேண்டும்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை முற்றாக ஒழிப்பதற்கு உயர்கல்வி அமைச்சும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், அரசும் திட்டங்களை வகுத்து செயற்பட்டு வருகின்றன.

பகிடிவதை தொடர்பான சிறிய சம்பவமானாலும்கூட மாணவர் உறுப்புரிமையை நீக்குவதற்கு எமக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பகிடிவதையோடு புதிய மாணவர்கள் இனங்கிச் செயற்படாமல் கல்வியுடன் மட்டும் இணைந்து செயல்பட பெற்றோர் தம்பிள்ளைகளை அறிவுறுத்த வேண்டும்.

ஒரு சாதாரண பல்கலைக் கழக மாணவன்போலவே புதிய மாணவர்களும் வரவேண் டும். கல்வி நடவடிக்கைகளைச் சிறப்பாக முன்னெடுத்துச்செல்ல ஒத்துழைக்க வேண்டும் - என்றார். (ம- 30)




# புனர்வாழ்வுச் செயலகங்களுக்கு கிழக்கு மாகாணத்தில் மூடுவிழா

மட்டக்களப்பு, டிசெ.17

கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து புனர்வாழ்வு செயலகங்களும் கடந்த முதலாம் திகதி முதல் மூடப்பட்டுள்ளன.

அரசின் தீர்மானத்திற்கு இனங்க கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்ட செயலகங்களில் செயற்பட்டு வந்த புனர்வாழ்வு செயலகங்கள் கடந்த முதலாம் திகதியிலிருந்து மூடப்பட்டு மாவட்ட திட்டமிடல் செயலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இதனால் புனர்வாழ்வு நடவடிக்கைகள் அனைத்தையும் எதிர்காலத்தில் திட்டமிடல் செயலகத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (204)

# டெங்குநோய் விழிப்புணர்வு வீதி நாடகம்

கல்முனை, டிசெ.17

டெங்கு நோய் தொடர்பில் பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் கல்முனை பசுமைச் சூழல் அமைப்பும், சி.சி.டி.என். நிறுவனமும் இணைந்து டெங்கு ஒழிப்பு வீதி நாடகமொன்றினை நடத்தியுள்ளனர்.

இவ் வீதி நாடகம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் முன்பாக இடம்பெற்றது.

இதன்போது அங்கு உரையாற்றிய பிரதேச செயலாளர் கே. லவநாதன் டெங்கு போன்ற ஆட்கொல்லி நோய்கள் பற்றிய விழிப்புணர்வினை பொதுமக்கள் மத்தியில் இவ்வாரான செயற்பாடுகளின் மூலம் ஏற்படுத்துவது போற்றத்தக்கது. அதேவேளை, அர்ப்பணிப்புடன் இந்த சேவையினை செய்யும் அமைப்புக்களும் பாராட்டுக்குரியன என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் மாநகரசபை உறுப்பினர் அமிர்தலிங்கம், பசுமைச் சூழல் அமைப்பின் ஸ்தாபகரும் தலைவருமான எஸ். சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். (201)

# 60 துப்பாக்கி ரவைகளுடன் நபர் கைது

திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்றுமணியளவில் 60 துப்பாக்கி ரவைகள், தண்ணீர் தாங்கிகள் ஆகியவற்றுடன் ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் மூதூர் சாபி நகரைச் சேர்ந்தவர் என்றும் அவர் 40 வயது டையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட தண்ணீர் தாங்கிகள் 20ஆயிரம் ரூபா மதிப்புடையவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன் என்றும் நபர் குறித்து மேலதிக விசாரணை இடம் பெற்று வருகிறது என்றும் மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ)

# பிரேத பரிசோதனைக்காக பெண்ணின் சடலம் தோண்டியெடுப்பு

சாய்ந்தமருது, பொலிவேரியன் சுனாமி வீட்டுத்திட்டத்தில் 2010 ஒக்டோபர் 3ஆம் திகதி தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் எனக் கூறப்பட்ட பெண்ணின் சடலம் சந்தேகத்தின்பேரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரேதப் பரிசோதனைக்காகத் தோண்டி எடுக்கப்பட்டது. 21 வயதுடைய அப்துல் மனாப் நிஜாமியா என்பவரது சடலமே நேற்றுமுன்தினம் தோண்டி எடுக்கப்பட்டது. இச்சடலம் மேலதிக பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பெண்ணின் மரணம் சம்பந்தமாக அவரின் கணவனின் குடும்பத்தினர் கொலை என்று சந்தேகப்பட்டதாலேயே மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது.

கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.றிஸ்வி தலைமையில் சட்ட வைத்திய அதிகாரிகள் எம்.எம்.ஏ.றஹ்மான், டிக்கிரி பண்டார குணத்துங்க மற்றும் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.மென்டிஸ், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரான் பெரேரா ஆகியோர் முன்னிலையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. (எ)

# மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தால் பாதிக்கப்பட்ட 141 குடும்பங்களுக்கு 20 பேர்ச் காணி, நிதியுதவி

## அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா இராதா எம்.பியிடம் உறுதி

கொழும்பு, டிச.17

மேல் கொத்மலை நீர்மின் திட்டம் காரணமாக வீடுகளை இழந்த 141 தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு தலா 20 பேர்ச் காணியும், வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள உதவியும் வழங்கப்படும் என நீர்ப்பாசன அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா மலையக மக்கள் முன்னணி அரசியல் பிரிவுத் தலைவர் வி.இராதாகிருஷ்ணன் எம்.பியிடம் உறுதியளித்துள்ளார்.

இதன்படி கொத்மலை மொச்சைக் கொட்டை தோட்டத்தைச் சேர்ந்த 141 தொழிலாளர் குடும்பங்களையும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் சந்தித்து அவர்களது விவரங்களைத் திரட்டியுள்ளனர் என்று வி.இராதாகிருஷ்ணன் எம்.பி தெரிவித்துள்ளார்.

மேல் கொத்மலை நீர் மின் திட்டம் ஆரம்பமாகி பல வருடங்களாகியும் அதனால் பாதிப்புக்குள்ளான மொச்சைக் கொட்டைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாற்றுக் காணி எதுவும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் வி.இராதா கிருஷ்ணன் எம்.பி நீர்ப்பாசன அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வாவைச் சந்தித்து இது தொடர்பாக பேச்சு நடத்தினர்.

இதையடுத்தே இக் குடும்பங்களுக்குக் காணியும், வீடுகளை நிர்மாணிக்க உதவிகளும் வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# டீசல் கொள்கலன் சரிந்ததில் போக்குவரத்து ஸ்தம்பித்தது

ஹற்றன் - தலவாக்கலை பிரதான பாதையில் குடாஓயா கிராமத்துக்கு அருகில் 40 அடி நீளமான டீசல் கொள்கலன் ஒன்று பாதையின் ஒருபுறம் சரிந்த இந்த வீதி ஊடான வாகனப் போக்குவரத்துக்கள் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் இடம்பெறவில்லை.

இதன் காரணமாக பயணிகளும் வாகனச் சாரதிகளும் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கின்றனர். (எ)

# சுவரில் பஸ் மோதியதில் பயணிகள் எழுவர் காயம்

ஊவா பரணகம பன்லை வெலயிலிருந்து வெலிமடை நகரை நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஒன்று நேற்று முன்தினம் காலை 8.30 மணியவில் வெலிமடை நகருக்குச் சமீபமான வெள்வைத்த எனும் இடத்தில் சுவரொன்றுடன் பக்க வாட்டில் மோதியதில் அதில் பயணித்த ஏழுபேர் காயமுற்றனர்.

மழை காரணமாக பாதை நனைந்திருந்ததால் பஸ் கட்டுப்பாட்டை இழந்து சுவரில் மோதியுள்ளது. காயமடைந்தவர்கள் வெலி மடை வைத்தியசாலைசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (எ)

# தொழிற்சங்க சக்தியை ஒன்றுபடுத்துவதன் மூலமே தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்

## தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.17

தொழிலாளர்களின் சக்தியும், தொழிற்சங்க சக்தியையும், கட்டியெழுப்பப்படுவதன் மூலமே தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும். இதனை கவனத்திற்கொண்டு நாம் உண்மையோடும், நேர்மையோடும், தொழிலாளர்களுக்கு சேவை செய்ய வேண்டும். இதன்மூலமே தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி தொழிற்சங்கசக்தியின் மூலமாக எமது உரிமைகளுக்கு குரல் கொடுக்க முடியும். அத்துடன் தொழிலாளர்கள் மத்தி யில் நம்பிக்கையையும் ஏற்படுத்த முடியும்.

- இவ்வாறு தொழிலாளர் விடுதலை முன்னணியின் தலைவர் டி. அய்யாத்துரை தெரிவித்தார்.

முன்னணியின் ஹற்றன் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.




மேற்படி நிர்வாகக்குழுக் கூட்டம் தொழிலாளர் விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகரும், ஜனாதிபதியின் இணைப்பு இயக்குனருமான எஸ். அருள் சாமி தலைமையில் நடைபெற்றது.

அய்யாத்துரை மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல்வாதிகளையும், அவர்களது பிரசாரங்களையும் நம்பிய தொழிலாளர்கள் இன்று யாரிடம் தங்கள் பிரச்சினைகளைச் சொல்லுவதென்று தெரியாமல் திக்குமுக்காடி 'திரிசங்கு நிலையில் இருக்கின்றனர்.

தொழிற்சங்கத்தின்மூலமாகவே தொழிலாளர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடி[illegible] அவர்களை ஒன்றுதிரட்டும் பணியில் ஈடுபட வேண்டும்.

தொழிலார்களுக்கு உண்மையான, சேவை செய்யக்கூடியது தொழிற்சங்கம் மாத்திரமே தொழிலாளர்கள் தொழிற்சங்கத்திடம் உரிமையுடன்தமது பிரச்சினையைக் கூறவும், வாதாடவும் முடியும். இந்த உண்மையை தொழிலாளர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் நம்முடைய தொழிற்சங்க சேவைகளை முன்னெடுக்க வேண்டும்.

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பளிக்கக் கூடியது தொழிற்சங்கமாகும். தொழிற்சங்கத்தின் மூலமாக தொழிலாளர்களின் அன்றாடப் பிரச்சினைகள் முதல் அடிப்படைப் பிரச்சினைகளான சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளையும் நமது கலாசார நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியும்.

இந்த உண்மையை தொழிற்சங்க வாதிகளான நாம் உணர்ந்து செயற்பட்டோமானால் தொழிலாளர்களை ஒன்று திரட்டவும், சமூக பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் முடியும். இதை உணர்ந்து தொழிற்சங்கப் பணியை முன்னெடுக்க வேண்டும். - இவ்வாறு அய்யாத்துரை தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிக் கூடம் போகலாமே



பள்ளிக் கூடம் போகலாமே
சின்ன பாப்பா -நிறைய
பள்ளைக ளோட பழகலாமே
சின்ன பாப்பா!

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
சின்ன பாப்பா -கல்வித்
தோட்டம் அந்த பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா!

பள்ளிக் கூடம் திறந்தாச்சு
சின்ன பாப்பா -உனக்கு
நல்ல நேரம் பறந்தாச்சு
சின்ன பாப்பா!

வீட்டுச் செய்தி கதைகள் பேசி
பொழுது போக்கலாம் -அட
ஏட்டுக் கல்வி பாடம் கூட
எழுதிப் பார்க்கலாம்!

உடலும் மனமும் வளர்வதற்கு
சின்ன பாப்பா -ஏற்ற
இடமே இந்தப் பள்ளிக் கூடம்
சின்ன பாப்பா

டிலானி

## சிந்தனைத் துளிகள்...

* தூக்கத்தை ஒழித்தால் ஆயுள் விருத்தியாகும்.
* அவசரமாகத் தவறு செய்வதை விடத் தாமதமாகச் சரியாகச் செய்வதே மேல்.
* உண்மையான நட்பு ஆரோக்கியம் போன்றது. அதை இழக்கும் வரை அதன் மதிப்புத் தெரிவதில்லை.
* மற்றவர்களின் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி அடையாதவனால் நற்செயல்களைச் செய்ய இயலாது.
* நம்முடன் வாழ்வோரைப் புரிந்து கொள்வதற்கு நம்மை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
* மகிழ்ச்சி என்ற உணர்ச்சி மட்டும் இல்லா விட்டால் வாழ்க்கை என்பது சுமக்க முடியாத பெரிய சுமையாகியிருக்கும்.
* மின்மினிப் பூச்சி எவ்வளவு ஒளியுடன் திகழ்ந்தாலும் அது தீ ஆகாது.
* நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான்.
* எளியாரை வலியார் அடித்தால், வலியாரைத் தெய்வம் அடிக்கும்.

பானுஜா

### எமது பண்டைய கால வரலாற்று நினைவுச் சின்னங்களும் அவற்றின் பெயர்களும்

★ மாவீரன் பண்டாரவன்னியன். தோற்கடிக்கப்பட்டதாக ஆங்கிலேயர் கப்டன் வொன் றிபேக் என்பவரால் 1803 ஆம் ஆண்டு கட்டப்பட்ட நினைவுக்கல் கற்சிலை மடுவிலே அமைந்துள்ளது.

★ பண்டார வன்னியன் காலத்திலே யானை பிடிப்பவர்களாகிய பணிக்கர்கள் வாழ்ந்த இடம் ஒட்டுசுட்டானுக்கு மேற்கே காக்கைப் பணிக்கன் குளம் எனப் பெயர் பெற்ற கிராமமாக உள்ளது. இது மாங்குளம் பகுதியிலும் உண்டு.

★ குரக்கன் செய்கையினை மேற்கொண்டு அறுவடையின் பின் அதன் ஒட்டுக்களை தீயிட்டுக் கொழுத்தியபோது தான் தோன்றி ஈசுபரர் இருந்த இடம் எரியாமல் இருந்தமையால் - ஒட்டுசுட்டான் எனப் பெயர் பெற்றுள்ளது.

★ மலைகளிலே அரண்களை அமைத்து அங்கே தமது இல்லத்தரசிகளோடு வாழ்ந்த இடம் - தட்டையர் மலை.

★ வன்னிப் பகுதியை ஊடறுத்துச் செல்லும் பெரிய ஆறு பேராறு எனப் பெயர் பெற்றது.

★ பண்டார வன்னியனின் காதலி வாழ்ந்த இடம் காதலியார் சமளங்குளம்.

சிலையூர் குணம்

## வெள்ளை யானை பறக்கிறது

(தொடர்ச்சி)

ஒருநாளைக்கு மட்டும் உங்கள் யானையை வாடகைக்குக் கொடுங்கள். தேவையான பணம் தருகிறோம். நீங்களும் கூடவே வரவேண்டும், என்று வேண்டினான் மட்டி.

பணத்துக்கு ஆசைப்பட்ட பாகனும் சரி என்று சம்மதித்தான்.

நன்றாக இருட்டிய பிறகு, பானை பானையாகச் சுண்ணாம்பு கொண்டு வந்தான், மடையன்.

அதை எடுத்து அபிஷேகம் செய்வது போல, பானையின் மேல் ஊற்றினான், முட்டாள்.

கொஞ்சம் சுண்ணாம்பை வாரி எடுத்து, பயந்து கொண்டே யானையின் வாயில் பூசிவிட்டான், மண்டு.

பரமார்த்தரும் தம் கைத் தடியால் வரி வரியாக வெள்ளை அடித்தார்.

குருவே! ''யானை கறுப்பாக இருக்கும்போது தந்தம் வெள்ளையாக இருக்கிறது, அதுபோல யானை வெள்ளையாக இருந்தால், தந்தம் கறுப்பாக அல்லவா இருக்க வேண்டும்?'' எனக் கேட்டான், பாகன்.







ஆமாம்! நீ சொல்வதும் சரிதான்! என்றபடி அடுப்புக் கரியைத் தேய்த்து, தந்தங்களில் பூசி விட்டான், முட்டாள்.

இது தேவலோகத்தில் இருந்து பிடித்து வந்தது என்பதை அரசன் நம்ப வேண்டும். அதனால் இரண்டு இறக்கைகள் கட்ட வேண்டும், என்றார் பரமார்த்தர்.


குருவின் யோசனையை உடனே செயற்படுத்தினான், மூடன்.

எல்லா வேலையையும் முடிந்தது. யானையைச் சுற்றி வந்து பார்வையிட்ட குரு, ''அற்புதம்! இது இந்திரலோகத்து யானையேதான்!'' என்றபடி அதன் தும்பிக்கையைத் தொட்டுக் கும்பிட்டார்.

மறுநாள், அரண்மனைக்கு முன்னால் மக்கள் கூட்டம் ஜே ஜே என்று இருந்தது. வெள்ளை யானையைப் பார்ப்பதற்காக மந்திரிகள் புடைசூழ மன்னனும் வந்தான்.

திறந்த வெளியில் கட்டி இருந்த யானையைப் பார்த்த அரசன், ''அதிசயமாக இருக்கிறதே! இந்த யானையை எங்கிருந்து பிடித்து வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

## வில்லுப்பாட்டு



போர் மனிதனை விலங்காக்குகிறது. கலை மனிதனின் மனதை லேசாக்கி, கருணையையும், கனிவையும் புகுத்தி தெய்வமாக்குகிறது. கால் போன போக்கிலும் நடந்து, மனம் போன போக்கில் இயங்கிய ஆதிகால மனிதன், வேட்டைக்கருவியாக வில்லை இனங்கண்ட காலத்திலேயே இசைக்கருவியாகவும் அது பரிணமித்து விட்டது. பசியாறிய களைப்பு நீங்க, வில்லைத் திருப்பி வைத்து நாணால் தட்டி கானகத்தைக் கலங்க வைத்த ஆதி மனிதனே முதல் வில்லிசைக்காரன்.

அதன் பின் போர்க்கருவியாக வில் பரிமாணம் பெற்றபோது, வில்லடியும் களம் மாறியது. வில்லிசை, வெற்றியாளனின் குதூகலமாக அவதரித்தது. தொடர்ச்சியாக, நாகரிகம் மனித இனத்தின் பாதையை மாற்றி, இயந்திரவியல், மின்னணுவியல் சகாப்தங்களில் நிறுத்தி விட்ட தருணத்திலும் பல்வேறு ஏற்ற இறக்கங்களைக் கடந்து, உருவ, உள்ளடக்க மாற்றங்களுடன் மிஞ்சி காலத்தோடு இன்றும் கலந்திருக்கிறது வில்லிசை. வில்லிசை உக்கிரமான மகிழ்ச்சி. எந்த இலக்கணத்துக்கும் உட்படாமல் குரலும், மனமும் போன போக்கில் உதித்த இந்தக் கலை போர்க்களத்தில் தொய்ந்து நிற்கும் போர்வீரர்களின் களைப்பை நீக்கவும், தங்கள் மூதாதைகளின் வீர வரலாற்றை போதித்து உரமேற்றவும் பயன்படுத்தப்பட்டதுதான் ஜனரஞ்சகமான வரலாற்றின் தொடக்கம். இந்தக் கலையை முறைப்படுத்தி, இலக்கணமிட்டு அறங்கேற்றியவர் 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெயர் தெரியாத ஒரு அரசவைப்புலவர் என்று ஒரு கருத்து நிலவுகிறது. இன்னொரு தரப்பு, அருதக்குட்டிப் புலவர் தான் வில்லிசையை இலக்கணச் சுத்தமாக முழுமைப்படுத்தினார் என்கிறார்கள். எனினும் இக்கலை கி.ப.1550ம் ஆண்டுக்கு முற்பட்டது என்கிறார்கள். (வளரும்)

பாரம்பரிய கலைகளில் ஒன்று...

## ஒயிலாட்டம்

(தொடர்ச்சி)

மரபுசார்ந்து இயங்கிய பலர் கிறிஸ்தவ மதத்துக்கு மாறியதன் விளைவாக, கிறிஸ்தவ ஆலயங்களிலும் அண்மைக்காலமாக இக்கலை நிகழ்த்தப்படுகிறது. கிறிஸ்தவ ஆலயங்களில் பைபிள் கதைகளைப் பாடி ஆடுகின்றனர். ஒயிலாட்டத்திற்கென்று தனித்த ஒப்பனை முறைகள் உண்டு. ஒழுங்காகத் தலை வாரியிருப்பார்கள். கால்களில் சலங்கை கட்டிக்கொண்டு, வலது கையில் ஒரே வண்ணத்திலான கைக்குட்டை படித்திருப்பதும், தலையில் ஒரே வண்ணத்தில் துணிகளை கட்டியிருப்பதும் அவசியம். பெரும்பாலும் கையில் பிடித்திருக்கும் துணி சிவப்பு நிறத்தில் இருக்கும். தலைமையாளர் மட்டும் பச்சை நிறத்தில் படித்திருப்பார். வெள்ளை வேட்டியை தார் பாய்ச்சிக்கொள்வதும் மரபாகும். தொடக்கத்தில் கை கூப்ப, ஒரு காலை மட்டும் தட்டி கடவுள் வணக்கம் செய்து, அடுத்து தரையைத் தொட்டு அவை வணக்கம் செய்து விட்டு அடவுகளைத் தொடங்குவர்.



மெதுவாக தொடங்கும் அடவுகள் மெல்ல, மெல்ல உச்சம் பெறும். இடையிடையே களைப்பைப் போக்கிக் கொள்ள பாடல் பாடும் அண்ணாவி விசிலடித்து ஆட்டத்தை நிறுத்திக் கொள்வார். பெரும்பாலும் ஒயிலாட்டக்குழுவின் தலைவரோ அல்லது வாத்தியாரோ தான் அண்ணாவியாக செயற்படுவார்கள். கடைசிப்பாடலுக்கு முன்னர் வாத்தியார் பார்வையாளர்களுக்கு நன்றி சொல்வார். கடைசி அடவு முடிந்ததும் அனைத்துக் கலைஞர்களும் பூமியைத் தொட்டு வணங்கிவிட்டு நிகழ்ச்சியை நிறைவு செய்வார்கள். (வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் வடகொரியா இணக்கம் தெரிவிப்பு

பீஜிங், டிசெ. 17

வடகொரியா அணு ஆயுத உற்பத்தியை கைவிடுவது தொடர்பான 6 நாடுகள் பேச்சுக்களை எவ்வித நிபந்தனையுமின்றி மீண்டும் ஆரம்பிக்க சம்மதம் தெரிவித்துள்ளது.

இதை சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் ஜியாங் யூ ஜியாங், செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வடகொரியாவுக்கும், தென்கொரியாவுக்கும் இடையே போர் பதற்றம் நிலவும் சூழலில் வடகொரியா இவ்வாறு அறிவித்துள்ளதால் இரு நாடுகளுக்கிடையேயான பதற்றம் தணியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்கொரியாவின் தீவுப் பகுதியில் சமீபத்தில் வடகொரியா பீரங்கித் தாக்குதல் நடத்தியது. இதில் தென்கொரிய இராணுவச் சிப்பாய் உட்பட இருவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து இரு நாடுகளுக்கிடையே போர் பதற்றம் உருவானது.

இத்தாக்குதல் நிகழ்ந்த அடுத்த சில தினங்களில் வடகொரியாவை ஒட்டிய கடல்பகுதியில் தென்கொரியாவும், அமெரிக்காவும் கூட்டு கடற்படைப் பயிற்சியில் ஈடுபட்டன. இது எரியும் தீயில் எண்ணெயை ஊற்றுவதாய் அமைந்தது.

இரு நாடுகளுக்கிடையேயான பதற்றம் மேலும் அதிகரித்தது. இதை கவனித்துக் கொண்டிருந்த உலக நாடுகள், தமது கூட்டாளியான வடகொரியாவிடம் அமைதிகாக்குமாறு சீனா வலியுறுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டன.

இதையடுத்து இந்த விவகாரத்தில் சீனா தலையிட்டது. தமது நாட்டுப் பிரதிநிதியை வடகொரியாவுக்கு அனுப்பி பிரச்சினையை வளரவிடாமல் தடுத்தது.

வடகொரியாவின் தலைவர் இரண்டாவது கிம் ஜோங்கிடம் சீனப் பிரதிநிதி சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது, தடைப்பட்டிருக்கும் 6 நாடுகள் பேச்சுக்களை உடனே தொடங்குவதே சிறந்தது என்பதை கிம் ஜோங்கிடம் சீனப் பிரதிநிதி வலியுறுத்தினார்.

இதை ஏற்றுக்கொண்ட கிம் ஜோங், எவ்வித நிபந்தனையுமின்றி பேச்சுக்கள் மீண்டும் தொடங்க சம்மதம் தெரிவித்தார். கிம் ஜோங்கின் விருப்பம் குறித்து சீனா தெரிவித்த போதும் பேச்சுக்களில் பங்கேற்கவுள்ள அமெரிக்கா, ரஷ்யா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து இதுவரை எவ்வித பதிலும் இல்லை.

## நேபாளத்தில் விமானம் விழுந்து 22 பேர் பலி

காத்மண்டு, டிசெ. 17

நேபாளத்தில் லேமிதண்டா விமான நிலையத்தில் இருந்து தலைநகர் காத்மண்டு நோக்கி பயணிகள் விமானம் ஒன்று புதன்கிழமை புறப்பட்டு வந்தது.

அதில் ஓர் அமெரிக்கர் உட்பட 19 பயணிகளும், 3 சிப்பந்திகளும் இருந்தனர். விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் தரைக்கட்டுப்பாட்டு மையத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து விமானம் மாயமானது.

நேற்று வியாழக்கிழமை காலையில் அந்த விமானம் கிழக்கு நேபாளத்தின் மலைப்பகுதியில் விழுந்து நொறுங்கிக் கிடந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

20 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. மேலும் 2 பேரின் சடலங்களை தேடும் பணி நடக்கிறது.

## சிலியில் காட்டுத் தீ 14 ஏக்கர் பயிர் அழிவு!

சான்டியாகோ, டிசெ.17

சிலி நாட்டில் ஏற்பட்ட காட்டுத்தீயில் 14 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த காய்கனிகள் முற்றிலும் கருகி நாசமாகின. சிலி நாட்டில் வால்பராஸியோ, சான்டியாகோ, மெகாலனேஸ் ஆகிய மூன்று முக்கிய மாகாணங்கள் அடர்ந்த வனப்பகுதியைக் கொண்டவை.

இங்கு திடீரெனக் காட்டுத்தீ ஏற்பட்டது. தீ மளமளவென பரவியதால் இப்பகுதியில் 14 ஆயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் விவசாய நிலங்கள் கருகின. மேலும் இங்கு பயிரிடப்பட்டிருந்த பல்வேறு வகையான காய்கனிகள், தீயின் கோரத் தாண்டவத்தால் நாசமானது என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பக்கத்து மாகாணமான கவுணாகியூரியோவிலும் தீ பரவி வருகின்றமையால் தீயை அணைக்க பாதுகாப்புப் படையினர் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றனர்.




ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் (இடது), அமெரிக்க இணை ஜனாதிபதி ஜோ பிட்டன், ஐக்கிய நாட்டு பாதுகாப்புக் குழுவின் கலந்தாய்வில் கலந்துகொள்வதற்கு முன் உரையாடுகின்றனர்.

## 'விக்கி லீக்ஸ்' இணையத்துக்கு அமெ.விமானப் படை தடை

வாஷிங்டன், டிசெ. 17

இராணுவ இரகசியங்களை அனுமதியின்றி வெளியிட்டது எனக் கூறி, 'விக்கிலீக்ஸ்' இணையத்தளத்திற்கு அமெரிக்க விமானப் படையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க விமானப் படை செய்தித்தொடர்பாளர் மாஜ் டோனி கூறியவை வருமாறு:-

ஒரு குறிப்பிட்ட சார்பான செயல்களை அனுமதிக்க முடியாது. எங்களுக்குள்ள தொடர்புகள் மூலம், இந்தத் தடையை விரைவாக செயல்படுத்தி வருகிறோம்.

'விக்கிலீக்ஸ்' போன்ற குறிப்பிட்ட இணையத்தளங்களைப் பார்வையிடும் போது, விமானப்படையிலுள்ள சேவையாளர்களுக்கு தேவையற்ற பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கவே இந்த ஏற்பாடு.

அமெரிக்க விமானப் படையில் மட்டுமே இந்தத் தடை செயல்படுத்தப்படுகிறது. இராணுவத் தலைமையகமான 'பென்டகன்' உள்ளிட்ட பிற பிரிவுகளுக்கு இல்லை.

இவ்வாறு மாஜ் டோனி கூறினார்.

## ஹோல்புரூக்கிற்குப் பதிலாக பிராங் ராக்கிரியோ நியமனம்

வாஷிங்டன், டிசெ. 17

மறைந்த ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தானுக்கான அமெரிக்க சிறப்புத் தூதர் ரிச்சர்ட் ஹோல்புரூக்கிற்குப் பதிலாக புதிய சிறப்புத் தூதராக பிராங் ராக்கிரியோ நிய மனம் செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு உதவியாக அமெரிக்க வாழ் இந்தியர் உட்பட இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆப்கான்-பாகிஸ்தான் சிறப்பு அமெரிக்கத் தூதர் ரிச்சர்ட் ஹோல்புரூக் (வயது - 69) செவ்வாய்க்கிழமை உடல்நலக்குறைவால் காலமானார்.

இதையடுத்து அவரது உதவியாளரும் துணைத் தூதருமான பிராங் ராக்கிரியோ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## ஈ·ரானில் குண்டுவெடிப்பு 38 ஷியா பிரிவினர் பலி

### சுனி அமைப்பு பொறுப்பேற்பு

தெஹ்ரான், டிசெ. 17

ஈ·ரானின் தென் கிழக்கு நகரமான ஷாபகரில் 100இற்கும் மேற்பட்ட ஷியா பிரிவு முஸ்லிம் மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் நடந்த பயங்கர குண்டு வெடிப்பில் 38 பேர் பலியானார்கள். 60 இற்கும் மேற்பட்ட மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்த அனைவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஈ·ரான் நேரப்படி சரியாக காலை 10 மணி முதல் 10 நிமிடங்களுக்குள் இந்தக் கொடூர சம்பவம் நடந்துள்ளது.

இத்தாக்குதலுக்கு சுனி முஸ்லீம் ஜன்தல்லா அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்தக் கொடூரத் தாக்குதல் குறித் து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஈ·ரானின் ஜகிடன் நகரில் கடந்த ஆண்டு மே மாதம் நடந்த குண்டு வெடிப்பில் 21 பேர் பலியானார்கள். இந்த ஆண்டு அதே நகரில் ஜூலையில் நடந்த குண்டு வெடிப்பில் 27 பேர் பலியானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில்

## ஆப்கான், பாகிஸ்தான் நிலைமைகுறித்து இறுதிநேரத்திலும் ஹோல்புரூக் கவலை

வாஷிங்டன், டிசெ. 17

அமெரிக்க அரசியல் பிரமுகரான மறைந்த சிறப்புத் தூதர் ஹோல்புரூக், தனது இறுதி நேரத்திலும், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகியவற்றின் நிலைமை குறித்து கவலைப்பட்டார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க வெளியுறவுத் துறையின் மிக முக்கிய அரசியல் பிரமுகரும் ஆப்கான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான சிறப்புத் தூதருமான ரிச்சர்ட் ஹோல்புரூக்(வயது -69) செவ்வாய்க்கிழமை காலமானார்.

கடந்த வாரம் அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது, ஜனாதிபதி ஒபாமாவின் வெள்ளை மாளிகையில், ஆண்டுதோறும் நடக்கும் ஆப்கான், பாகிஸ்தான் பற்றிய அமெரிக்க கொள்கை விளக்கக் கூட்டம் நடக்கவிருந்தது.

இந்த நிலையில் இதுகுறித்து அவர் தனது மருத்துவர்களிடம் சில கருத்துக்கள் சொன்னார் என்று அமெரிக்க வெளியுறவு செய்தித்தொடர்பாளர் பி.ஜே. குரேவ்லி கூறியுள்ளார்.

இதுகுறித்து குரேவ்லி கூறியவை வருமாறு:-

மருத்துவர்கள் அவரிடம், ''நீங்கள் ஓய்வாக இருங்கள்'' என்று தெரிவித்த போது, பதிலுக்கு அவர், ''நான் ஆப்கான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளைப் பற்றி தான் கவலைப்படுகிறேன்'' என்றார்.

''இன்னும் சிறிது நேரத்தில் உங்களுக்கு அறுவை சிகிச்சை நடக்கவிருப்பதால், மற்ற விடயங்களைப் பற்றி கவலை கொள்ள வேண்டாம்; அதை எல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்'' என்று மருத்துவர்கள் கூற, ''அங்கு நடக்கும் போர் உட்பட அனைத்தையும் உங்களால் கவனித்துக் கொள்ள முடியுமா?'' என்று அவர் கேட்டுள்ளார். - என்றார்.

## ஆஸ்திரேலிய படகு விபத்தில் 30 பேர் மரணம்; 41 பேர் மீட்பு

கான்பெர்ரா, டிசெ. 17

ஆஸ்திரேலியாவுக்கு அருகிலுள்ள கிறிஸ்மஸ்தீவு கடற்பரப்பில் வந்த மரப்படகு ஒன்று உடைந்து விபத்துக்குள்ளானது. இதில், 30 பேர் உயிரிழந்தனர்; 41 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

ஆஸ்திரேலியா அருகே கடற்பரப்பில் அமைந்துள்ள கிறிஸ்மஸ் தீவுக்கு புதன்கிழமை மரப்படகு ஒன்றில் புகலிடம் தேடி அகதிகள் வந்துள்ளனர். மரப்படகு, தீவுக்கருகிலுள்ள கடற்பரப்பில் வந்தபோது, கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு காரணமாக, பாறையில் மோதி விபத்துக்குள்ளானது.

புதன்கிழமை அதிகாலை 6 மணியளவில் ஏற்பட்ட இந்த விபத்தில், படகிலிருந்த 30 பேர் உயிரிழந்தனர்; 41 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்.

கிறிஸ்மஸ்" தீவு, இந்தோனேசியாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய, இந்த கடல் மார்க்கம் தான் உகந்தது. புகலிடம் தேடி ஆஸ்திரேலியா வரும் அகதிகள், இதன் வழியாகத் தான் வருவர். பாதிக்கப்பட்ட மக்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவில்லை.

ஆஸ்திரேலிய சுங்கத்துறைக்குச் சொந்தமான கப்பல் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகாவின் தூதுவனாக கிளிநொச்சி சென்றேன் என்கிறார் மனோ கணேசன்

## பிரபாவுடன் நீச்சலடித்ததாக விமல் வதந்தி பரப்பினார்

கொழும்பு, டிச. 17

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்குத் தெரிவிக்க விரும்பிய தகவல் ஒன்றை கொண்டு சென்றமையால் தான் நான் நெருக்கடியில் சிக்கிக்கொள்ள நேர்ந்தது என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபேயின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் எழுதிய 'மன்னர்களை உருவாக்கும் கலை - அரசியல் தகவல் பரிமாற்றம்' நூல் வெளியீட்டு விழா செவ்வாயன்று கொழும்பில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மனோ கணேசன் கூறியவை வருமாறு:-

தகவல் பரிமாற்றம் குறித்துப் பேசும்போது தவறான தகவல் பரிமாற்றம் குறித்தும் பேசவேண்டியுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து நாம் வாய் திறக்கும் முன்பே அது திரிபுபடுத்தப்பட்டு பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வெளியான சந்தர்ப்பங்கள் இருந்தன. தமிழ் அரசியல்வாதிகள் எதிர்நோக்கிய பிரச்சினை இது.

நாம் கூறுவதை மக்களுக்கு எடுத்துச் செல்வதுதான் தகவல் பரிமாற்றம். ஆனால் அதன் மூலமாகவே அரசியலில் போட்டியாளர்களின் புகழை அழிக்கும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. அரசுக்காக தகவல் பரிமாற்றம் செய்யப்போய் நெருக்கடியில் சிக்கிக்கொண்ட அனுபவமும் எனக்குள்ளது.



2001ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐ.தே.கட்சி அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அளவுக்கதிகமாக நெருங்கி பேச்சு நடத்துவதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால், 2004 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியின் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் அவர் என்னை அழைத்து புலிகளின் தலைமைக்கு தகவலொன்றை கொண்டுச் செல்லுமாறு கூறினார். எனக்கு புலிகளின் தலைமையுடன் நெருக்கமில்லாத போதிலும் நீங்கள் நாட்டின் ஜனாதிபதி என்பதால் அத்தகவலை கொண்டுச் செல்கிறேன் என நான் கூறினேன்.

அத்தகவல் மிகப்பெரிய விடயம் எதுவுமல்ல. முன்னைய அரசு முன்னெடுத்துச் சென்ற சமாதான முயற்சிகளை எமது அரசும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல விரும்புகிறது என்பதே அத்தகவல்.

அத்தகவலை புலிகளின் தலைவரிடம் தெரிவிப்பதற்காக நான் கிளிநொச்சிக்குச் சென்றேன். ஆனால், நான் கிளிநொச்சிக்குச் சென்று பிரபாகரனுடன் நீச்சலடித்ததாக அக்காலத்தில் ஜே.வி.பியிலிருந்த விமல் வீரவன்ஸ தேர்தல் காலங்களில் கூறித் திரிந்தார். அதற்கு ஆதாரமான விடியோ தன்னிடமிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

நான் அப்படி அங்கு நீச்சலடிக்கவில்லை. எனவே அந்த விடியோ இருந்தால் எனக்கும் காட்டுங்கள். பிரபாகரனுடன் நான் நீச்சல் தடாகத்தில் எப்படியிருக்கிறேன் என்று பார்க்க விரும்புகிறேன் என விமல் வீரவன்ஸவிடம் பின்னர் கேட்டேன்.

அதற்கு அவர் எல்லோரும் இறந்துவிட்டார்கள்தானே என்று சமாளித்துவிட்டார். ஆனால், நான் சாகவில்லைதானே எனக்கு அதைக் காட்டுங்கள் என்று அவரிடம் சொன்னேன். இதுவரை அவர் தன்னிடமிருக்கின்றது எனக் கூறிய விடியோவை வெளிப்படுத்தவில்லை. (சி)

# கொலைக் குற்றச்சாட்டின் பேரில் இலங்கைத் தமிழர் கனடாவில் கைது

கொழும்பு, டிச.17

கனடாவில் பல்கலைக்கழக மாணவர் ஒருவரைப் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர் ஒருவரை அந்நாட்டுப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நவீன் அரசரத்தினம் (வயது - 27) எனும் இலங்கையரே செவ்வாய்க்கிழமை மாலை டொரன்டோவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் இலங்கைக்கு வர முயற்சித்தபோது டொரன்டோ விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா யோர்க் பல்கலைக்கழக மாணவர் வின்சன்ட் டேங் என்பவரை கடந்த மாதம் 27ஆம் திகதி வாகனம் ஒன்றால் இடித்துக் கொலை செய்தார் என்பதே இவருக்கு எதிரான குற்றச்சாட்டாகும்.

சந்தேக நபரான இலங்கையர் நேற்று கனடா நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். அந்நாட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# ஜனநாயக இடதுசாரி முன்னணியின் நான்காவது மாநாடு டிசெ. 19 இல்

கொழும்பு, டிசெ. 17

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் நான்காவது மாநாடு கட்சியின் பொதுச் செயலாளரும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சருமான வாசுதேவ நாணயக்காரவின் தலைமையில் நாளை மறுதினம் 19ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பிரதான மண்டபத்தில் இரண்டு நாள்கள் நடைபெறும். இந்த மாநாட்டில் இன்றைய அரசுடன் ஒன்றிணைந்து மக்கள் மறுமலர்ச்சி கொள்கையை வெற்றிகரமாக செயற்படுத்தத் தேவையான முக்கிய தீர்மானங்களை எடுக்க உள்ளது முக்கியமான அம்சமாகும்.

இலங்கையின் சகல இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வார்கள். அத்துடன் இந்த மாநாட்டில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வெளிநாட்டுத் தூதுவர்கள் கலந்துகொள்வர்.

இந்த மாநாடு 19,20ஆகிய இரண்டு நாள்களும் நடைபெறும். (சி)

# யாழ். பிரதேச செயலக சமுர்த்தி வங்கியின் கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ, 17

யாழ்.பிரதேச செயலகத்தின் சமுர்த்தி வங்கிக்கான கட்டடம் பண்ணையில் அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடம் கடந்த வாரம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் யாழ்.ரெலிக்கொம் நிறுவனத்திற்கு அருகில் அமைந்துள்ளது. (ம-26)

# தந்தை செல்வா கற்றுக்கொண்ட பாடங்களும் தமிழ்த் தேசியமும்

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*


இலங்கைத் தீவினுக்குள் இணைப்பாட்சியில் தமிழரசு காண விளைந்த செல்வா 1956 முதல் 1972 வரை தனது சமாதான முயற்சிகள் பயனின்றிப் போனதால் 1976 இல் விடுதலை பெற வேண்டும் என்ற போக்குடன் தமிழர் விடுதலைக் கூட்டணியை நிறுவினார். அவர் சரியான நோக்கங்களுக்காகவே சரியான பெயர்களைத் தேர்ந்தெடுத்தார்.

ஆனால் இன்று யாரோ ஒருவருக்குக் கூட்டணி தாரைவார்க்கப்பட்டு விட்டது. ஏன் இப்படிச் செய்தார்கள்? இதற்கு என்ன காரணம்? ஒருவர் மட்டும் அதனைத் தனது சொத்தாக்கிக் என்ன செய்கிறார்? என்று இதுவரை தமிழ் மக்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை.

1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின் 1977இல் தந்தை செல்வா மறைந்து விட்டார். தன்னைத் தொடர்ந்து தன் வழி வந்தவர்கள் அதை நிறைவேற்ற முழுமையாக உழைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் அவர் மறைந்தார். அவர் மறைந்த பின் 1977இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் தமிழ் மக்களின் ஆணையாக வைக்கப்பட்டது.

வட்டுக் கோட்டைத் தீர்மானம் தந்தை செல்வாவின் உயில் என்று கூறப்பட்டது. தமிழ் மக்கள் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை ஏற்று அங்கீகாரம் கொடுத்தார்கள். ஆனால் அதை முன்னெடுத்துச் செல்ல ஆணை கேட்டவர்கள், அதனை நடைமுறைப்படுத்தச் சிறு முயற்சி கூட எடுக்கவில்லை.

ஆனால் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இளைஞர்கள் அதற்காக அளப்பரிய ஈகங்களைச் செய்தார்கள். இப்பொழுதோ, "வட்டுக்கோட்டைத் தீர்மானம் காலம் கடந்தது. அது 1976 இல் நிறைவேற்றப்பட்டது. அதைப் பற்றி இப்பொழுது பேசுவதால் பலனில்லை" என்கிறார்கள் சிலர்.



### இனக் கலவரம்

1977 இல் மக்கள் ஆணை பெறப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நசுக்குவதற்காக 1977 பொதுத்தேர்தல் முடிந்த கையோடு தமிழ் மக்கள் மீது மீண்டும் பேரினவாத வன்முறை ஏவிவிடப்பட்டது. அதனையும் மீறி 1978 இல் வட்டுக் கோட்டைத் தீர்மானம் ஆவரங்கால் மாநாட்டில் உறுதிப்படுத்தப்பட்டது.

1983 இல் தமிழ் மக்கள் மீது வரலாறு காணாத பேரினவாத இன வன்முறை திட்டமிட்டு அரங்கேறியது. உலகமே அதிர்ச்சி அடைந்தது. தமிழ் அரசியல் தலைவர்கள் எல்லோரும் இந்தியாவிற்குச் சென்றனர். அங்கே சென்றவர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை வலியுறுத்தவில்லை. "நோயாளி மருத்துவரிடம் சென்றால் நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை தேவையா சாதாரண மருந்து போதுமா என்று மருத்துவர்தான் தீர்மானிப்பார். அது போல் எமக்கும் இந்தியா மருத்துவராக உள்ளது" என்று கூறிய தமிழினத் தலைவர்கள் தங்கள் இயலாமையைக் காட்டிக்கொண்டார்கள். இதனால்தான் மருத்துவர் சி.யமுனானந்த "தமிழ்ப் போராளிகளுடன் திம்புப் பேச்சுவார்த்தையில் இணங்கியதற்கு கீழாக 'இலங்கை - இந்திய ஒப்பந்தம்' செய்யப்பட்டது. இது திருமணம் செய்து வைக்க வந்த புரோகிதரே மணப்பெண்ணுக்குத் தாலி கட்டிய நிலைமை போன்றது" என்று மிக அழகாக 2010-11-04 உதயன் இதழில் சுட்டிக்காட்டி இருந்தனர்.

1947 முதல் 1972 வரை நடந்த பாடங்களைக் கற்றுக்கொண்டதை வைத்துத்தான் 1976 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்மொழிந்தார் தந்தை செல்வா. எனவே 1977 தொடக்கம் இற்றை வரை நடந்தவைகளைக் கணக்கிட்டு வந்தால் தந்தை செல்வா, தான் முன் வைத்த காலை பின்வைத்திருப்பார் என்று ஒருவராலேனும் சொல்ல முடியாது. தந்தை செல்வாவுடன் நெருக்கமாகப் பழகியவர்கள் இதை சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவரது அரசியல் தூரதிருஷ்டியைத் திசை திருப்பக்கூடாது.

### காலந்தாழ்த்தாதீர்கள்

எனவே தந்தை செல்வாவைப் பின்பற்றி இன்றைய தமிழ்க் கட்சிகள் அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 'தமிழ்த் தேசியம்தான் எமது நிலைப்பாடு' என்று துணிந்து கூறவேண்டும். மஹிந்தவின் நிலைப்பாடோ, ஐ.தே.கட்சியின் நிலைப்பாடோ வேறு எந்தச் சிங்களத் தலைவருடைய நிலைப்பாடோ என்றும் எப்பொழுதும் ஒரு நாடு ஒரு தேசியம் என்பதேயாகும். அதை நிலைநிறுத்தக் குடியேற்றங்கள் மூலம், நில அபகரிப்புக்கள் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறன. தமிழ்த் தலைமைகள் என்ன செய்யப்போகின்றன எனத் தெரியவில்லை. தமிழத் தேசியத்தை நிலை நாட்ட எந்தவொரு முயற்சியும் அவற்றால் எடுக்கப்படவில்லை என்பது மட்டும் நன்றாகத் தெரிகிறது. மாறாக மக்களை ஏமாற்றும் விதமாகவே அனைவரும் செயற்படுகிறார்கள். காலம் தாழ்த்தாது தமிழ்க் கட்சிகள் செயலில் இறங்க வேண்டும் என்பதே தமிழ் நெஞ்சங்களின் இன்றைய ஏக்கம். காலம் தாழ்த்தினால் ஒரு நாடு ஒரு தேசியம் என்பதற்கமைய இது முழுமையாகச் சிங்கள பௌத்த நாடாகி விடும்.

1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம் கடந்த கால நிகழ்வு; அதை தூக்கிப்பிடிக்காமல் விட்டு விடுங்கள் என்று கூறுவோர், தமிழர் தரப்பு சம்மதமின்றி 1987 இல் ஏற்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமும் காலம் கடந்தது தான் என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதையும் தூக்கிப்பிடிக்காமல் 2002 இல் தமிழர் தரப்புக்கும் சிங்கள அரசுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்களில் தமிழ்த் தரப்பால் முன்வைக்கப்பட்டவைகளை அடித்தளமாகக் கொண்டு பேச்சு நடத்த முயற்சிக்க வேண்டும். அதுதான் சரியான வழியாகவும், தீர்வாகவும் அமைய முடியும். அப்பொழுது தான் தமிழ் தேசியம் இங்கு தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர்களான ஜெகாநந்த சர்மா, மதிவதனி ஆகியோரின் பாசமிகு தந்தையார்

கலாநிதி

சிவானந்தகிரி நித்தியானந்த குருக்கள்

அவர்கள் 15.12.2010 இறைபதமடைந்த செய்தி கேட்டு அன்னாரின் பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல் : பாடசாலைச் சமூகம்,
கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம், கிளிநொச்சி.

(107462)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திதி: 17.12.2010
சுவர்க்கவாயில் ஏகாதசி

**அமரர் மார்க்கண்டு ஆனந்தராஜா**

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் நிறைவிடமாய்
ஆளுமையின் புகலிடமாய்
எம்மை வழிநடத்திய
எம் குடும்பத்தலைவனே
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
உன் நினைவுகள் என்றும்
எம்மை விட்டு அகலாது

தோற்றம்:
16.11.1950
மறைவு:
13.01.2003

உன் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்
இராஜ வீதி, தோப்பு, அச்சுவேலி.

(107447)

## மந்துவில் மேற்கில் வயோதிபர் கோடாரி வெட்டுக்கு மரணம்

தென்மராட்சி, டிசெ.17

காணித்தகராறு தொடர்பாக இடம் பெற்ற வாக்குவாதம் கைகலப்பாக மாறியதில் கோடாலி வெட்டுக்கு இலக்காகி வயோதிர் ஒருவர் மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் மந்துவில் மேற்கில் இடம் பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த வேலு சின்னத்தம்பி (வயது-60) என்பவரே இச்சம்பவத்தில் மரணமடைந்தவராவார்.

சடலம் பொலிஸாரால் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை மந்துவில் பகுதியில் ஏற்கனவே இந்த முதியவருக்கும் அதே இடத்தைச் சேர்ந்த் இளைஞர் ஒருவருக்கும், இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக கைகலப்பு ஏற்றபட்டதாகவும், இதன் காரணமாக பொலீஸ் விசாரணைகளையடுத்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம் பெற்று எதிராளி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று அந்த இளைஞர் பிணையில் விடுதலையானதை அடுத்து நேற்றைய தினம் இந்த வயோதிபர் தாக்கப்பட்டு அந்த இடத்திலேயே மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த வயோதிபர் மந்துவில் மேற்குப் பகுதியில் வரணி வேம்பிராய் வீதியில் வர்த்தக நிலையமொன்றை நடத்தி வருபவர் எனவும் சமூக சேவையில் ஈடுபாடுள்ளவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-207-131)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

**சிவப்பிரம்மஸ்ரீ சிவநித்தியானந்த குருக்கள்**

(சங்கானை, இலுப்பைத்தாழ்வு முருக மூர்த்தி தேவஸ்தான பிரதம குரு)

சங்கானை, இலுப்பைத்தாழ்வு வெல்வில் முருகன் தேவஸ்தானப் பிரதமகுரு சிவப்பிரம்ம ஸ்ரீ சிவ நித்தியானந்த குருக்கள் 15.12.2010இல் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் பிரிவுத்துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்துவோர்கள்:

| | |
|---|---|
| லீலா பேக் ஹவுஸ் பிரதான வீதி, சங்கானை. | காசிப்பிள்ளை அன் சன்ஸ் சந்தை சதுக்கம், சங்கானை. |
| நகுலன் ஸ்ரோர்ஸ் ஓடக்கரை வீதி, சங்கானை. | றஞ்சன் ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, சங்கானை. |
| கா.வைத்திலிங்கம் அன் சன்ஸ் பிரதான வீதி, சங்கானை. | லக்சுமி ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, சங்கானை. |
| ஆசைப்பிள்ளை அன் சன்ஸ் நகைமாடம் இல.10, பஸ் நிலையம் முன்பாக, சங்கானை. | கிருபா மோட்டார் சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர் பிரான்பற்று வீதி, சங்கானை. |
| கருணா மெடிக் கிளினிக் பிரதான வீதி, சங்கானை. | எம். சந்திரகுமார் செய்தியாளர், அராலி வீதி சங்கானை |
| சக்தி எலக்ரிக்கல் ஓடக்கரை வீதி, சங்கானை. | அம்பாள் மரக்காலை (பாபு) பிரதான வீதி, சங்கானை. |
| விமலன் பற்பொடி தேவாலய வீதி, சங்கானை. | கிருஸ்ணா ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, சங்கானை. |
| உதயன் கட்டடப் பொருள் விற்பனை நிலையம் பிரதான வீதி, சங்கானை. | உதயா பேக்கரி பிரதான வீதி, சங்கானை. |
| | இந்து இளைஞர் மன்றம் ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. |

சி/573576

## முதியோர் சங்கக் கூட்டம்

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களினதும், மாற்று வலுவுடையோரினதும் கூட்டம் நாளை சனிக்கிழமை பிரதேச செயலக மா நாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதியோர் சங்கங்களின் கூட்டம் காலை 9 மணிக்கும், மாற்று வலுவுடையோரின் கூட்டம் முற்பகல் 10 மணிக்கும் நடைபெறும்.

அனைத்து சங்க உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார்.(204-100)

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம் டிசெ.17

வட்டுக்கோட்டை வீதி உடலுள விருத்திச் சங்கமும், மகளிர் இலக்கிய வட்டமும் இணைந்து நடத்தும் க.கயிலாய நாதனின் 17 ஆவது ஞாபகார்த்த கூட்டம் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீகணேச வாசிகசாலை கேட்போர் கூடத்தில் தலைவர் செல்வி [illegible] தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஐ-15)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
06.12.1938
மறைவு:
17.11.2010

**இராசன் நவரத்தினம்**

எங்கள் அன்பு அப்பாவே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அகலா

இராஜவீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (107453)

என்றும் நினைவில்:
பிள்ளைகள்

## நீங்காத நினைவில் ஓராண்டு



திருமதி

**சாரதாமணிதேவி அருளானந்தம்**

மலர்வு 09 ★ 07 ★ 1938
உதிர்வு 28★12 ★2009

திதி : 17.12.2010

எங்களுக்காய் வாழ்ந்த
எங்கள் குல விளக்கு
எம் உயிர் உள்ளவரை
உம் நினைவு நீங்காது

இளவாலை வடக்கு,
இளவாலை. (107458)

நீங்காத நினைவுடன்,
சகோதரி, பெறாமகள்,
மருமகன், பேரன்.

## லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி - சுன்னாகம்
## 2011 ஆம் ஆண்டு புதிய மாணவர்களுக்கான அனுமதி கோருதல்

- ★ கற்கை நெறி:- D.A.M. (Diploma in Ayurvedic medicine) (அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.)
- ★ கல்விக் காலம்:- 05 வருடம்
- ★ வயதெல்லை:- 18 வயதுக்குக் குறையாமலும், 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

கல்வித் தகைமை

- ★ க.பொ.த.(உ/த) பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

வைத்திய பரம்பரையாயின் முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்பப் படிவங்களை காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணிவரை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 30.01.2011

நிர்வாகத்தினர்.
வட இலங்கை சுதேச மருத்துவ சபை,
சுன்னாகம்.

(107455)

## மரண அறிவித்தல்

**முருகேசு செல்லையா**

(முன்னாள் அதிபர், இளையதம்பி இ.வித்தியாலயம்)



மட்டுவில் தெற்கு, சிவன்கோயிலடியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு செல்லையா நேற்று (16.12.2010) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் மீனலோஜினியின் (முன்னாள் பிரதி அதிபர், இந்து மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் யதர்சினி (பல் வைத்தியர், இறுதிவருடம், பேராதனைப் பல்கலைக்கழகம்), நிருஷாந்தி(Physiotheraphy, 3ஆம் வருடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விமலலோஜினி, கயிலைநாதன் (முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர், விவசாயம்), நடேசன் (கைதடி, ஆயுள்வேத வைத்தியசாலை), கதிர்காமச்சந்திரன், தாமோதரகுமார் (NDB) ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஸ்வலிங்கம், காலஞ்சென்ற நடராசா, மற்றும் செல்வராசா, பராசக்தி, பவளம்மா, பத்மாவதி(ஆசிரியை, யா/இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2010) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பலாலி வீதி, திருநெல்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (107404)

தகவல் :
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 ஆவது சதம் பற்றிக் கவலையில்லை



50 ஆவது சதத்தைப் பற்றி கவலைப்படவில்லை என்று இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் 49 சதங்களை விளாசியுள்ள சச்சின் டெண்டுல்கர், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 50 ஆவது சதத்தை எட்டுவாரா என்ற எதிர்பார்ப்பு இந்திய ரசிகர்களிடையே அதிகரித்துள்ள நிலையில், சச்சின் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

50ஆவது சதத்தைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. அது எப்போது நடக்குமோ, அப்போது நடக்கட்டும். என்னை போட்டிக்குத் தயார் செய்வதிலேயே எனது முழுக்கவனமும் உள்ளது. தனிப்பட்ட சாதனைகளைவிட அணியின் நலனுக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகிறேன். மேலும் இங்குள்ள காலநிலைக்கு ஏற்றவாறு உடலை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறிய டெண்டுல்கர், ஜொகன்னஸ்பர்க் மைதானம் மிக உயரத்தில் இருப்பதால் ஒட்சிசன் குறைபாடு காரணமாக உடல்நலக்குறைபாடு ஏற்படும் என்பதால் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (த)

# ஆனந்த் முன்நிலை



லண்டனில் நடைபெற்று வரும் லண்டன் கிளாசிக் செஸ் போட்டியில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த் 10 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளார்.

நோர்வே வீரர் மேக்னஸ் கார்ல்ஸன், இங்கிலாந்து வீரர் லூக் மெக்ஷேன் ஆகியோரும் 10 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளனர்.

புதன்கிழமை நடைபெற்ற இறுதிச்சுற்றுக்கு முந்தைய சுற்று (6-வது சுற்று) ஆட்டத்தில் இந்திய வீரர் விஸ்வநாதன் ஆனந்த், இங்கிலாந்து வீரர் மைக்கேல் ஆடம்ஸை எதிர்கொண்டார். இருவரும் சிறப்பாக விளையாடியபோதும் 54ஆவது நகர்வில் இந்த ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இறுதிச்சுற்றில் விஸ்வநாதன் ஆனந்த் ரஷியாவின் கிராம்னிக்கை எதிர்கொள்கிறார். (த)

# 'ரன் அவுட்' மூலமே முரளிதரன் 800 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்



இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 800 விக்கெட்டுகளை வீழ்த்தியது வெறும் ரண் அவுட் மூலமே என இந்திய அணியின் முன்னாள் அணி தலைவர் பஷன் சிங் தெரிவித்தார்.

டில்லியில் அவர் அளித்துள்ள பேட்டி ஒன்றியே மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், முத்தையா முரளிதரன் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனைப் படைத்திருக்கலாம். ஆனால் அவர் கைப்பற்றிய விக்கெட்டுகள் எல்லாம் ரண் அவுட் மூலமே பெறப்பட்டது. என்னை பொறுத்த வரையில் அவர் ஒரு சதாரண பந்து வீச்சாளர் என்றுதான் குறிப்பட முடியும். இவருடைய வரிசையிலேயேதான் ஹர்பஜன்சிங்கும் உள்ளார் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் முரளிதரன் ஹர்பஜன்சிங் ஆகியோர் குறித்து பஷன் சிங்பேடி தெரிவித்துள்ள கருத்து கிரிக்கெட்ரசிகர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியா 142 ஆவது இடம்

''பிபா' உதைபந்தாட்ட தரவரி சைப் பட்டியலில் இந்திய அணி 142ஆவது இடத்தில் நீடிக்கிறது.

உதைபந்தாட்ட அரங்கில் சிறந்து விளங்கும் அணிகளுக்கான தரவரிசை பட்டியலை, சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (''பிபா') வெளியிட்டது.

இதில் இந்திய அணி 142ஆவது இடத்தில் நீடிக்கிறது. ஆசிய அளவில் 23ஆவது இடம் பிடித்தது. முதல் இரண்டு இடங்களில் ஸ்பெயின் (1887 புள்ளி), நெதர்லாந்து (1723 புள்ளி) அணிகள் தொடர்கின்றன. பிரேஸில் அணி 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது. இதன்மூலம் ஜேர்மனி, 3ஆவது இடத்துக்கு முன்னேறியது.

அடுத்த நான்கு இடங்களில் (5-8) அர் ஜென்டினா, இங்கிலாந்து, உருகுவே, போர்த்துக்கல் அணிகள் உள்ளன.

எகிப்து அணி 9ஆவது இடத் துக்கு முன்னேறியது. குரோஷியா 10வது இடத்துக்கு தள்ளப்பட்டது.

தெற்காசிய உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு, இந்திய அணி முன்னேறியது. பெண்களுக்கான முதலாவது தெற்காசிய உதைபந்தாட்டச் சாம்பியன் ஷிப் தொடர் பங்களாதேஷில் நடக்கிறது. இதில் இந்தியா உள்ளிட்ட 8 அணிகள் இரண்டு பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன. ''ஏ' பிரிவில் நடந்த லீக் போட்டியில் இந்தியா, இலங்கை அணிகள் மோதின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தியா சார்பில் சஸ்மிதா மாலிக் ''ஹட்ரிக்', பிங்கி 2, பாலா தேவி, தபாபிதேவி தலா ஒரு கோல் அடித்தனர். இதன்மூலம் பூடான், இலங்கை அணிகளை அடுத்தடுத்து வீழ்த்திய இந்தியா, ''ஏ' பிரிவில் முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது.



உலக கோப்பை கால்பந்து தொடரில் சாதித்தவர்களுக்கான விருது வழங்கும் விழா ஜெர்மனியில் நடந்தது. இதில் விருது வென்ற (இடமிருந்து)ஜெர்மனியின் தாமஸ் முல்லர்('கோல்டன் பால்'), உருகுவேயின் போர்லான்('கோல்டன் பூட்'), ஸ்பெயின் கோல்கீப்பர் கேசிலாஸ்('கோல்டன் கிளவ்').

# பஞ்சாப் அணி நீக்கப்பட்டமை; மேல் நீதிமன்றம் கடும் கண்டனம்

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் நீக்கம் தொடர்பான விவகாரத்தில். இந்திய கிரிக்கெட் சபைக்கு மும்பை மேல் நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.,) சார்பில் கடந்த 2008ஆம் ஆண்டு முதல் ''ருவென்ரி-20' போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தொடரில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி கடந்த 3 ஆண்டுகளாக விளையாடி வந்தது. இதன் உரிமையாளர்களில் ஒருவராக பாலிவுட் நடிகை பிரீத்தி ஜிந்தா உள்ளார்.

இந்நிலையில், உரிமையாளர்கள் குறித்து சரியான தகவல்களை தெரிவிக்க மறுத்ததாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி மீது, இந்திய கிரிக்கெட் சபை குற்றம் சாட்டியது. இதனையடுத்து கடந்த ஒக்ரோபர் 10ஆம் திகதி அணியின் உரிமையை, பி.சி.சி.ஐ., அதிரடியாக ரத்து செய்தது. இது தொடர்பாக மும்பை மேல் நீதிமன்றத்தில், பஞ்சாப் அணி நிர்வாகம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. இதன் முடிவில், கிரிக்கெட் சபையின் நீக்கத்துக்கு இடைக்கால தடை விதித்தது மும்பை மேல்நீதிமன்றம்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த கிரிக்கெட் சபை கடந்த திங்கட்கிழமை மேல்முறையீடு செய்தது. இதன் மீதான விசாரணை நேற்று, மும்பை மேல் நீதிமன்றம் நடந்தது. இதில், கிரிக்கெட் சபையின் மேல் முறையீட்டு மனுவை மேல் நீதிமன்றம் ரத்து செய்தது. பஞ்சாப் அணி, உரிமையாளர்கள் குறித்த தகவலை முறையாக தெரிவித்துள்ளது என்ற கூறிய மும்பை மேல் நீதிமன்றம் கிரிக்கெட் சபையின் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தது.

இதனையடுத்து அடுத்த ஆண்டு நடக்க உள்ள 4 ஆவது ஐ.பி.எல்., தொடரில், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி பங்கேற்க அதிக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தவிர, வரும் ஜன. 8ஆம், 9ஆம் திகதிகளில் நடக்கும் ஐ.பி.எல்., வீரர்களுக்கான ஏலத்திலும் பங்கேற்கலாம்.

# ஆஸி. அணியில் வோர்னுக்கு இடமில்லை



ஆஸ்திரேலிய அணியில் வோர்ன் மீண்டும் இடம்பெறும் பேச்சிற்கே இடமில்லை,'' என, ஆஸ்திரேலியா கிரிக்கெட்டின் தலைமை அதிகாரி ஜேம்ஸ் சுதர்லாண்ட் தெரிவித்துள்ளார்.




ஆஸ்திரேலியாவில் தற்போது நடந்து வரும் இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரில், இந்த அணி 0-1 என பின் தங்கியுள்ளது. இதனால் அணியை காப்பாற்ற ஓய்வு பெற்ற சுழல் ஜாம்பவான் ஷேன் வோர்ன் மீண்டும் திரும்ப வேண்டும் என பல்வேறு தரப்பில் இருந்து கோரிக்கை வைக்கப்பட்டது.

இதுகுறித்து ஜேம்ஸ் சுதர்லாண்ட் கூறியது:

எந்த காலத்திலும் ஆஸ்திரேலியாவின் சிறப்பான பந்து வீச்சாளர் வோர்ன் தான். நான்கு ஆண்டுகளுக்கு முன் வோர்ன், சொந்த விருப்பத்தின் பேரில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றார். இது ஈடுசெய்ய முடியாதது. தவிர, இந்த ஆண்டு நடந்த ஐ.பி.எல்., தொடருக்குப் பின் துடுப்பை அல்லது பந்தை அவர் தொட்டது கூட இல்லை. மீண்டும் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பது தொடர்பாக அவரிடம் நாம் பேசவில்லை. கிரிக்கெட் நிர்வாகத்தில் இருந்து சுதந்திரமாக செயல்படும் தேர்வுக்குழுவினரும் அவருடன் எதுவும் பேசியது போல் தெரியவில்லை.திரும்புவது என்பது இயலாத காரியம். இவ்வாறு ஜேம்ஸ் சுதர்லாண்டு கூறினார். (த)

# நியூஸிலாந்து கிரிக்கெட் விரும்பினால் பதவியில் இருந்து விலகத் தயார்

''நியூஸிலாந்து கிரிக்கெட் விரும்பினால், பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகத் தயார்,'' என, கிரேக் பாட்ச் தெரிவித்துள்ளார்.

இந்தியா வந்த நியூஸிலாந்து அணி டெஸ்ட் (0-1) மற்றும் ஒரு நாள் தொடரில் (0-5) மோசமான தோல்வியுடன் திரும்பியது. தவிர, ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து 11ஆவது முறையாக தோல்வியடைந்தது. இதையடுத்து அணியில் பல மாற்றங்கள் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து அணியின் பயிற்சியாளர் கிரேக் பாட்ச் கூறியது:

இந்தியாவுக்கு எதிரான தொடர், எங்களுக்கு சாதகமாக நல்ல முறையில் தான் தொடங்கியது. எங்களால் முடிந்தவரை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம்.

ஆனால் கடைசியில் ஏமாற்றமாக முடிந்தது. வரும் உலக கிண்ணம் (2011)கிரிக்கெட் தொடர் வரை பயிற்சியாளர் பதவியில் நீடிக்கலாம் என்று தான் இப்பதவிக்கு வந்தேன்.



ஒருவேளை தற்போதைய தோல்வி காரணமாக, நியூஸிலாந்து கிரிக்கெட் எதாவது மாற்றம் செய்ய விரும்பினால், எனது பயிற்சியாளர் பதவி யில் இருந்து விலகத் தயாராக உள்ளேன். இவ்வாறு கிரேக் பாட்ச் கூறினார்.

இதேவேளை - நியூஸிலாந்து அணியில் ''ரொப்-20' பட்டியலில் முதலிடத்தில் உள்ள வீரருக்கு 80 லட்ச ரூபாய் தரப்படும். கடைசி இடத்திலுள்ள வீரர் 32 லட்சம் கிடைக்கும். ஒவ்வொரு தரத்துக்கும் இடையில் 3 லட்சம் ரூபா வித்தியாசம் இருக்கும். இந்தியாவுக்கு எதிரான மோசமான தோல்வியை அடுத்து, சிறப்பாக விளையாடவில்லை என்றால் அதற்கேற்ப வீரர்களுக்கு சம்பளம் குறைவாக வழங்கப்படும் என்று, வீரர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய விக்கெட்டுகள் மளமளவெனச் சாய்ந்தன!

செஞ்சூரியன், டிசெ.17

இந்திய அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியில் தனது முதல் இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் இந்திய அணி 136 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனடிப்படையில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய சேவாக் ஓட்டம் எதுவும் பெறாமல் ஸ்ரேய்னின் பந்துவீச்சில் அம்லாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்திய அணி 24 ஓட்டங்களைப் பெற்றபோது மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கம்பீர் 5 ஓட்டங்களுடன் மோர்க்கலின் பந்துவீச்சில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து டிராவிட் 14 ஓட்டங்களைப் பெற்றபோது மோர்க்கலின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

இக்கட்டான நேரத்தில் சச்சினுடன் இணைந்து லக்ஸ்மன் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். இந்திய அணி 66 ஓட்டங்களைப் பெற்றபோது லக்ஸ்மன் 7 ஓட்டங்களுடன் ஸ்ரெயினின் பந்துவீச்சில் 'போல்ட்' ஆனார்.

அதனைத் தொடர்ந்து களமிறங்கிய ரெய்னா வந்த வேகத்திலேயே ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்த சச்சின் 36 ஓட்டங்களுடன் ஸ்ரெயினின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த அணித்தலைவர் டோனியுடன் இணைந்த ஹர்பஜன்சிங் அணியின்ஓட்ட எண்ணிக்கையை தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் உயர்த்தினார்.

ஹர்பஜன்சிங் 25 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாகப் 27 ஓட்டங்களைப் பெற்றபோது 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய இஷாத் சர்மா, சிறிசாந் இருவரும் மோர்க்கலின் பந்து வீச்சில் 'டக் அவுட்'டாகி வெளியேறினர்.

இந்திய அணி ஆட்டநேர முடிவில் 38.1 ஓவர்கள் நிறைவில் 136 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்த நிலையில் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

அணித்தலைவர் டோனி 33 ஓட்டங்களுடனும், உனாட்கட் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்க்கல் 4 விக்கெட்டுகளையும், ஸ்ரெய்ன் 3 விக்கெட்டுகளையும், கலிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தியுள்ளனர்.

மழை காரணமாக ஆட்டம் தாமதித்தே ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (ஐ-15)

## இரணைமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்க மீள்குடியமர்த்தப்பட்ட சாந்தபுரம் மக்களுக்கு இதுவரை இராணுவம் அனுமதி வழங்கவில்லை என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்திருந்தார். இது தொடர்பாகக் கேட்டபோதே இராணு வப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனை இது தொடர்பாகத் தொடர்பு கொண்டு கேட்டபோது இரணைமடுக்குளத்தில் மீன் பிடிக்க அனுமதி வழங்குமாறு இராணுவ அதிகாரிக்கு உத்தியோகபூர்வமாகக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.இதேவேளை, இராணுவப் பேச்சாளர் இரணைமடுக் குளத்தில் மீன் பிடிக்க அனுமதிக்காதது குறித்து அங்குள்ள அதிகாரிகளிடம் பேசித் தீர்த்துக் கொள்ளலா மெனவும் தெரிவித்தார். (ஐ-சி)

## சங்கானை குருக்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது இந்து மதக்குருக்கள், ஆலயக் குருக்கள், சமூக மட்டத் தலைவர்கள், கிராம மக்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் என ஐந்நூறுக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். மானிப்பாய் பகுதி பொலிஸ், இராணுவ அதிகாரிகளும் இந் தக் கிரியை நிகழ்வின்போது கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் உள்ளம் உருக தமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்தினர். கிரியை இடம்பெற்ற குருக்களின் இல்லம் தொடக்கம் கரைச்சி மயானம் உள்ளிட்ட பகுதிகளில் அதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு முகமூடி அணிந்த ஆயுததாரிகள் குருவின் வீட்டில் நுழைந்து அவரையும் அவரது இரு மகன்மாரையும் சுட்டும் வெட்டியும் காயப்படுத்தினார்கள். காயமடைந்த மூவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு குருக்கள் உயிரிழந்தார். (ஐ-14)

# வடக்கில் ஆயுதக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''வடக்கில் இயங்கும் ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் முற்றுமுழுதாகக் களையப்படவில்லை. ஆயுதங்களுடன் இயங்கிய ஒரு சிலர் அரசுடன் இணைந்துள்ளனர். ஆகவே, வடக்கில் ஆயுதக் குழுக்கள், ஆயுதங்கள் என்பனவற்றுக்கு அடியோடு முடிவு கட்டப்படவேண்டும்'' - என்று வலியுறுத்தினார் ஜனாதிபதியின் இந்துமத இணைப்பாளரும், அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவ தேவஸ்தான பிரதம குருக்களுமான சிவஸ்ரீ பால. ரவிசங்கர சிவாச்சாரியார்.

சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை கொழும்பு கொச்சிக்கடை சித்தி விநாயகர் ஆலயத்தில் செய்தியாளர் மாநாடு இடம்பெற்றது. சங்கானைக் குருக்களின் படுகொலைக்கு இங்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. மாநாட்டில் கருத்துத் தெரிவித்த ரவிசங்கர சிவாச்சாரியார் கூறியதாவது:-

சிவஸ்ரீ நித்தியானந்தா குருக்களின் படுகொலைத் தொடர்பாக யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி வெளியிட்டுள்ள அறிக்கையில், இக்கொலையில் கோப்ரல் ஒருவரும் சிப்பாய் ஒருவரும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாக சர்வதேச ரீதியில் செய்திகள் வெளியாகும் நிலையில், இக்கொலை யுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இராணுவத்தின் யாழ். கட்டளைத் தளபதி கூறியுள்ளமை தமிழ் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது.

அதேவேளை, படைகளை விட்டுத் தப்பியோடியவர்கள் என்று கூறப்படும் ஐம்பதாயிரம் இராணுவத்தினரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. தப்பியோடியவர்கள் ஆயுதங்களுடன்தான் வெளியேறியிருப்பர். இதனால் நாம் இன்று அச்சத்துடன் வாழவேண்டியிருக்கிறது.

### குற்றவாளிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை தேவை

கடந்த சனிக்கிழமை இரவு குருக்கள் படுகொலை செய்யப்பட்டிருப்பது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தி சந்தேகநபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் நாம் வலியுறுத்துகின்றோம்.

தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டியது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெரும் கடப்பாடாகும்.

வடக்கில் இயங்கிய ஆயுதக் குழுக்கள் முழுமையாகக் களையப்படவில்லை. அவற்றின் ஆயுதங்கள் முற்றாகக் களையப்படவேண்டும். அத்துடன், வடக்கில் உள்ள அரச படையினரையும் படிப்படியாகக் குறைத்து அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவேண்டும்.

படையினரின் கட்டுப்பாட்டில் மக்கள் இருப்பதனால் ஒரு சில படையினர் செய்யும் தீய செயல்களானது முழு இராணுவத்துக்கும் சேறு பூசும் வகையில் அமைந்து விடுகிறது.

தமிழர்களாகிய நாம் முப்பது வருடங்களாகப் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கினோம். யுத்தம் நிறைவடைந்து தற்போது சுமுகமான நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளது. ஆகவே, எதிர்காலத்தை வெற்றிகொள்ள வேண்டுமானால், அரசுடன் இணைந்து செயற்படவேண்டும்.

குருக்களின் படுகொலையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அதேவேளை, புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகள் முடியும் வரை எந்தவொரு தரப்பினரையும் குற்றம் சுமத்த முடியாது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

### பிக்கு சுடப்பட்டிருந்தால் இன்று நிலைமையே வேறு

அதேசமயம், சர்வதேச இந்துமத குருபீடத்தின் தலைவர் ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சரவணபவன் சிவாச்சாரியார் யாழ்ப்பாணத்திலிருந்து தொலைபேசி மூலம் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

''தீவிரவாதம் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை அரசு சர்வதேசத்துக்கு கூறிக்கொண்டிருக்கின்றது. இந்நிலையில், இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளமை அரசுக்கு தான் அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது.

பௌத்த மதகுரு ஒருவர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருந்தால் கொழும்பு மாநகரமே ஒன்றாகத் திரண்டு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருக்கும். கொல்லப்பட்டவர் இந்து மதக் குரு என்பதால் எதுவுமே இடம்பெறவில்லை.

குருக்களின் படுகொலை தொடர்பில் அரச தரப்பில் எவரும் இதுவரை கண்டனம்கூட வெளியிடவில்லை. இது கண்டனத்துக்குரியது'' - என்றார். (ஊ-சி)

## குருக்களுக்கு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் மிகச் சிறந்த சிவாச்சாரிய மரபை ஏற்படுத்திக் கொடுத்த நாயன்மார்களின் பிரதம குருவாகவும், இந்தப் பகுதிக்கே எடுத்துக் காட்டாகச் சிவாச்சாரிய திலகமாக விளங்கும் பெருமை யும் கொண்டவர் நித்தியானந்தக் குருக் கள்.

இவரது மறைவு இவருடைய குடும்பத்துக்கு மட்டுமல்ல ஆலய நிர்வாகத்தினருக்கும் உள்ளது. அது மட்டுமல்ல பல நூல்களைத் தொகுத்து அதனைப் பலருக்குப் பயிற்றுவித்து அந்த நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் எனப் பணியாற்றியவர். அவரது வாழ்வு ஏனையோருக்குப் பாடமாகக் கொள்ளப் பட்டது. அவரது இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது - என்றார்.

(அ-14-28)

## பயங்கரவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் உட்பட பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள நாடுகளை அச்சுறுத்தலில் இருந்து மீட்டெடுக்க இலங்கை எப்போதும் தயாராகவுள்ளது.

இந்தியாவும் தற்போது புலி களின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளது. அண்டை நாடு என்ற ரீதியிலும் எமக்கு உதவி புரியும் நாடு என்பதாலும் அவர் களுக்கு உதவ இலங்கை அரசு தயாராகவுள்ளது.- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சங்கானைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் ''குஷி'' சமாதான விருதைப் பெற்றமைக்காக அவரைக் கௌரவிக்கும் வகையில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

பாதுகாவலன் மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அவர் பேசுகையில் கூறி யதாவது :-

சங்கானையில் இடம்பெற்ற சம்பவத்தையிட்டு வருத்தம் அடைந்துள்ளோம். இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருக்க ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எனக்குக் கிடைத்த விருது இந்த நாட்டு மக்களுக்குக் கிடைத்த கௌரவமாகும். இந்த நாட்டில் சகல இன மக்களும் ஒன்றாக வாழ்கிறார்கள் என்ற செய்தியை இந்த விருது சர்வதேசத்துக்கு விடுத்துள்ளது.

30 வருட யுத்தம் முடிந்து நாட்டில் உள்ள சகல மக்களும் ஒன்றுபட்டு வாழும் சூழல் உருவாகியுள்ளது. சகல மக்களும் இந்நாட்டு மக்கள் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலை தொடர சகல மக்களும் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இந்த நாட்டில் வாழும் சகல மக்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்பட வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்திய திருச்சபை பேராயர் அதி.வண. டானியல் தியாகராசா உட்படப் பலர் உரையாற்றினர். (ஐ-15)

## தமிழ்ச்செல்வ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருந்தது.

இது குறித்து பிரான்ஸ் வெளிநாட்டு அமைச்சுடன் எமது அமைச்சு விரிவாகக் கலந்துரையாடியிருந்தது. அந்நேரம் குறிப்பிட்ட சிலை தனியார் உடைமையின் கீழ் வைக்கப்பட்டுள்ளது என பிரான்ஸ் அரசு கூறியிருந்தது.

தற்போது, தமிழ்ச் செல்வனின் சிலை குறித்து நாம் ஆராய்ந்த போது குறிப்பிட்ட சிலை வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டு குறிப்பிட்ட தனியார் உடமையாளரின் அறையொன்றுக்குள் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது - இப்படி வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்தார்.

தமிழ்ச் செல்வனின் சிலை கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி வைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழ்ச் செல்வனின் சிலை முழுமைப்படுத்துவதற்காகவே குறிப்பிட்ட இடத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட்டதாகவும், ஜனவரி மாதம் அச்சிலை மீண்டும் அந்த இடத்திலேயே வைக்கப்படும் எனவும் பிரான்ஸிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வெள்ளத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் வழங்கும் நிகழ்வில் எம்மைப் பங்குபற்ற அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். அதை ஏற்று எமது உறுப்பினர்கள் அந்த நிகழ்வில் பங்குபற்றுவர் என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்க ஏற்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தமிழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியாளர்கள் கேள்விக் கணைகளைத் தொடுக்க ஆரம்பித்தனர்.

**அமைச்சர்:** தேசிய கீதம் ராகத்தின்படி பாடப்பட வேண்டும். சில வைபவங்களில் தேசிய கீதத்தை ராகம் மாற்றி 'பைலா'பாடலைப் போல் பாடி நடனமாடும் சம்பவங்களும் இடம்பெறுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

**செய்தியாளர்:-** தமிழில் தேசிய கீதம் பாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதா?

**அமைச்சர்:-** அரசமைப்பில் தேசிய கீதம் எவ்வாறு பாடப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளதோ அவ்வாறு பாடலாம்.

**செய்தியாளர்:-** நேரடியாகக் கூறுங்கள் தமிழில் தேசிய கீதம் பாட முடியுமா?

**அமைச்சர்:-** தேசிய கீதம் குறித்து அரசமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. நீங்கள் அரசமைப்பை அறிந்திருப்பீர்கள். அதன்படி செயற்பட முடியும்.

**செய்தியாளர்:-** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி., எம்.ஏ. சுமந்திரன் வடக்கில் தமிழில் தேசிய கீதம் பாடப்படுவதை இராணுவ அதிகாரியொருவர் தடுத்ததாக முறைப்பாடு செய்துள்ளார். இது குறித்து என்ன கூறுகின்றீர்கள்?

**அமைச்சர்:-** சுமந்திரன் ஒரு சிறந்த சட்டத்தரணி. அவருக்கு இது குறித்து நன்கு தெரியும். ஆனால் அவர் தமிழ் தேசிய கீதம் குறித்து முறைப்பாடு செய் திருப்பது குறித்து எனக்குத் தெரியாது. (ஐ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி அறிவித்தல்

**மக்கள் வங்கி - பருத்தித்துறை - 285**

பருத்தித்துறை - யாழ். பிரதான வீதி வேலாயுதம் மகா வித்தியாசாலையருகே ச.தோ.ச மற்றும் யூனியன் இன்சூரன்ஸ் கம்பனி, ஒரு கடையுடன் கூடிய இரு மாடிக்கட்டடத் தொகுதி ஆதனத்தின்

**ஏல விற்பனை 18.12.2010**

**அன்று நடைபெறமாட்டாது**

என்பதை அறியத் தருகின்றேன்.

692, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 16.12.2010 (சி/573570)

கா.பொ. பாலகிருஷ்ணன் அதிகாரமளிக்கப்பட்ட ஏலதாரர், நீதிமன்ற ஆணையாளர்.


# கூட்டமைப்புக் குழு இன்று திருமலைக்கு

கொழும்பு, டிசெ.17

திருகோணமலையில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று நாளை அங்கு செல்லவிருக்கின்றது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் செல்லும் இந்தக் குழு மூதூர், திரியாய் ஆகிய பகுதிகளுக்கும் செல்லவிருக்கின்றது.

தென்னைமரவாடி, சம்பூர் ஆகிய பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை வாக்காளராகப் பதிவுசெய்யும் பணிகளுக்கும் இக்குழுவினர் உதவி வழங்குவர்.

இதே வேளை -

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோனாதிராசா உதவித் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

தென்னைமரவாடி, மூதூர் பிரதேச மக்களின் வாக்காளர் பதிவு தொடர்பாகவே இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த பிரதேச மக்களை வாக்காளர்களாகப் பதிவுசெய்வதற்கு உதவித் தேர்தல் ஆணையாளர் ஒருவரை அங்கு அனுப்புவதாக இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வவுனியா நகரசபையின் தலைவர் கட்சியிலிருந்து இடை நிறுத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், டிசெ.17

வவுனியா நகரசபைத் தலைவர் எஸ்.என்.ஜி. நாதனை கட்சியிலிருந்து இடை நிறுத்துவது என்றும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்றும் இலங்கை தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

நகரசபை நிர்வாகத்தில் அவரால் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா அவருக்கு அறிவித்துள்ளார். (ஐ)

## கொக்குவிலில் வெள்ளி விழா

கொக்குவில் சரஸ்வதி முன்பள்ளியின் வெள்ளி விழாவும், கலை விழாவும் இன்று மு.ப. 10 மணியளவில் கொக்குவில் நாமகன் வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் கோமதி ரவிதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலதாசன் கலந்துகொள்வார்.

சிறப்பு நிகழ்வாக வெள்ளி விழா நாயகர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். முன்பள்ளி பிரசுர வெளியீடும் இடம்பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.


## ஆள் தேவை

நெல்லியடியில், வடமராட்சியில் பிரபல்யமான கணினி நிறுவனத்துக்கு (Net Cafe) கணினி அறிவுள்ள (டைப்பிங் :- தமிழ், ஆங்கிலம்) பெண்பிள்ளை உடன் தேவை.

வயதெல்லை : 17-30

தொடர்புகளுக்கு : 0777563239, 0212263105

(சி/573368)


# மோட்ச தீபக்கிரியை

*அமரர் சபாரத்தினம் தெய்வநாயகி (தங்கம்)*



அன்னை மடியில் 15•06•1930

ஆண்டவன் அடியில் 06•12•2010

கைதடி கிழக்கைச் சேர்ந்த சபாரத்தினம் தெய்வநாயகி (தங்கம்) அவர்களின் மோட்ச தீபக்கிரியைகள் மார்கழி 3ஆம் நாள் (18.12.2010) சனிக்கிழமை அன்னாரது அன்னை இல்லத்தில் நடைபெறவுள்ளன. அச்சமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் சமுகமளிப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"அன்னை இல்லம்", கைதடி கிழக்கு, கைதடி. (107457)

தகவல் : குடும்பத்தினர்.

# இதயம் நெகிழ்ந்த கண்ணீர்க் காணிக்கை



## அமரர் பிரம்மஸ்ரீ சிவானந்தகிரி நித்தியானந்த குருக்கள் (சங்கானை)

எமது கம்பிளி வைரவர் ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்த வேளையில், அதனைத் தலைமைதாங்கிச் சிறப்பாக நடத்திச்சென்ற ஐயாவே, எங்கள் குடும்பத்தின் மங்கல காரியங்கள் யாவற்றையும் ஆரம்பம் முதல் இறுதிவரை முன்னின்று நடத்திச் சிறப்புடன் வாழ வைத்த ஐயாவே!

மேலும் தங்கள் சிறப்பான சேவைகளை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ள நினைத்திருந்த வேளையில், அரக்கர்களின் இரக்கமற்ற குண்டுகளினால் காலனிடம் சென்றுவிட்டீர்கள்.

தங்களின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு, வெளிநாட்டில் வதியும் எனது பிள்ளைகள் மற்றும் சகோதரி சார்பில், எமது மனம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

*தகவல் :*
முன்னாள் கிளை முகாமையாளர்,
*ப.நோ.கூ.சங்கம், சங்கானை.*
*பிள்ளைகள் :*
அனுஷா - ரமேஸ் *(ஜேர்மனி)*,
ம.பிரதீபன் - விஜி *(பிரான்ஸ்)*,
அஜந்தா - ஜெயசீலன் *(ஜேர்மனி)*,
அனுப்பிரியா - சபேசன் *(லண்டன்)*,
ம.அனிதா *(சங்கானை)*,
*திருமதி* யோகேஸ்வரி ரத்தினம் *(ஜேர்மனி)*

"தெய்வ மகால்", சங்கானை.
T.P : 0212250089 (சி/573572)



சிவமயம்

காரைநகர், கிழவன்காடு கலாமன்றம் தயாரித்து வழங்கும்

# சிதம்பர தரிசனம்

## இறுவட்டு வெளியீட்டு விழா

### அழைப்பு

**இடம்:** ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபம் காரைநகர்.

**காலம்:** 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி

*தலைவர்:*
திரு. ந.சோதிநாதன்
(தலைவர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.)

*பிரதம விருந்தினர்:*
பேராசிரியர் திரு. பொ.பாலசுந்தரம்பிள்ளை
(வாழ்நாள் பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தரும், யாழ். பல்கலைக்கழகம்

*சிறப்பு விருந்தினர்கள்:*
திரு ப.விக்னேஸ்வரன்
(வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்)
திரு. R.T.ஜெயசீலன்
(உதவி அரசாங்க அதிபர், காரைநகர்)



**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

நிகழ்ச்சி நிரல்

தேவாரம் : கலாமன்ற மாணவிகள்
வரவேற்புரை: திரு. இ.திருப்புகழூர்சிங்கம் (உபதலைவர், கிழவன்காடு கலாமன்றம்)
ஆசியுரை: சிவஸ்ரீ மகாதேவக் குருக்கள் (காயத்திரி பீடம் தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)
சிவஸ்ரீ ஐஸ்வரக் குருக்கள் (பிரதம குரு, ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்)
தலைமையுரை
பிரதம விருந்தினர் உரை
சிறப்பு விருந்தினர் உரைகள்
வெளியீட்டுரை: சங்கீத வித்துவான் திரு. பொன் ஸ்ரீவாமதேவன்
முதல்பிரதி வழங்கல்:
வழங்குபவர் - இசைஞான திலகம், கலாபூஷணம், வயலின் வித்துவான் திரு. உ.இராதாகிருஷ்ணன்
பெறுபவர் - திரு. சண்முகம் சிவஞானம் (கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)
கலைஞர்கள் கௌரவிப்பு
சிறப்புப் பிரதிகள் வழங்கல்
நன்றியுரை: திரு. ச.இராசநாயகம் (நிர்வாக உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)
இசைக்கலைஞர் விபரம்:
கீர்த்தனைகள் : ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார்
பாடியவர் : இசைக்கலைமாமணி, இராகசுரபி காரை. பரமேஸ்வரி கணேசன் (M.A.M.Phil)
(சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)


சிறப்புற வாழ்த்துவோர்:
யாழகம் YARLAKAM
WHOLE SALE / RETAIL DEALERS IN Sports Goods, Exercise Machines, Music Instrument, Sports Wear
58, Hospital Road, Jaffna, Sri Lanka. Tel: 021 222 5563





## உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2182 திகதி 15-12-2010

ஆங்கில எழுத்திற்கும் R

வெற்றி எண்கள் 20 24 29 46

போனஸ் இல: 15

ஜக்பொட் பரிசு ரூ. 26,580,600/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 201037 | 20/- | 4,020,740/- |
| 2 இல | 14415 | 100/- | 1,441,500/- |
| 3 இல | 299 | 1,000/- | 299,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7911 | 40/- | 316,440/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 539 | 1,000/- | 539,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 14 | 10,000/- | 140,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 26,580,600/- | - |
| 1 இல + போனஸ் இல | 9574 | 100/- | 957,400/- |
| 2 இல + போனஸ் இல | 451 | 500/- | 225,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 361 | 200/- | 72,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,437,280/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 234633 | | 10,037,280/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 202607534-0-38 |
| காலி | 202612410-0-48 |
| கம்பஹா | 202608429-0-07 |
| பதுளை | 202609255-8-34 |
| பொலன்னறுவை | 202609413-6-45 |
| கம்பஹா | 202608486-9-12 |
| களுத்துறை | 202608218-7-26 |
| மாத்தறை | 202605374-6-34 |
| கேகாலை | 202608385-7-12 |
| குருநாகல் | 202603310-4-16 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

**ரூ. 27,128,675/-**

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 டிசம்பர் 18 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## ஏலாளசிங்கம் ஜெயகீர்த்தி



திருநெல்வேலி வளாக வீதியைப் பிறப்பிடமாகவும் ஆறுகால்மடம், தாமரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏலாளசிங்கம் ஜெயகீர்த்தி நேற்று (16.12.2010) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏலாளசிங்கம் - மற்றும் நஞ்சிதமலர் தம்பதியரின் அன்பு மகனும் ஜெயப்பிரகாஷ் (மலேசியா), ஜெயதீபன் (பிரான்ஸ்), ஜெயரூபன் (3ஆம் வருட மாணவன், முகாமைத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), ஜெயப்பிரியங்கன் (தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் பவளக்கொடி தம்பதியரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாமரை வீதி,*
*ஆறுகால்மடம்.*
*0213205407*

(107471)

தகவல் :
குடும்பத்தினர்.

## குமாரசாமி செந்தில்வேல்



இலக்கம் 08 (20), BA தம்பி லேன், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி செந்தில்வேல் 15.12.2010 புதன் கிழமையன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் ஆ.குமாரசாமி (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) - காலஞ்சென்ற சௌபாக்கியவதியம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் நீர்வேலியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற தர்மேந்திரம் மற்றும் ஆயிலியம் ஆகியோரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் ஆரணியின் அன்புத் தந்தையும் சிவகௌரி சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), சிவகுமாரன், வயிரவதாசன், ஜெயந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்றவர்களான ஜெகநாதன், பாலேந்திரன் மற்றும் நந்தினி, யோகேஸ்வரி, சறோஜினி, லட்சுமிகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.12.2010 திங்கட்கிழமையன்று ஜேர்மன் நேரப்படி நண்பகல் ஒரு மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*C/O : இ.துரைராஜா,*
*கைதடி மானிப்பாய் வீதி,*
*கம்பாவத்தை ஒழுங்கை,*
*கோப்பாய் வடக்கு, கோப்பாய்.*
*தொ.பே : 0212230060*

(107470)

தகவல் :
K.V. தாசன் (தம்பி)

# தவறிவிட்டது

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பஸ்ஸில் 13.12.2010 அன்று பொன்னையா விக்கினேஸ்வரன் மன்மதராசா ராகினி என்பவரது கடவுச்சீட்டு அடங்கிய கான்பாக் யாழ்ப்பாணத்துக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

*0750422465*

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

# தவறிவிட்டது

வசாவிளான் தெற்கு, வசாவிளான் என்னும் முகவரியைச் சேர்ந்த மயில்வாகனம் பத்மநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (373311464V), விசேட அ. அட்டை, தொழில் அ. அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் 15.12.2010 அன்று யாழ். பல்கலைக்கழகத்துக்கும் யாழ்ப்பாணம் D.F.C.C.வங்கிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுகூர்ந்து யாழ். பல்கலைக்கழக பாதுகாப்புக் கிளையில் அல்லது ம.பத்மநாதன், 179/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.


# CALL SERVICE
**T.P : 021-222 4459, 0774192275**

Computer,(Laptop, Desktop) Mobile Phone, TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்கள் உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.

# கணனி வகுப்புகள்
**T.P : 021-222 4459, 0774192275**

*MS Office, DTP, Hardware Technology, Internet & E-Mail, Visual Basic,* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும், *(Personal & Group Classes)* பரீட்சை முடிவின் பின்னர் பெறுமதியான சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளலாம். தொழில் புரிபவர்கள், பாடசாலை மாணவர்களுக்கு விஷேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன. *(DURATION 01,MONTH)*

**STR COMPUTER SYSTEM**
384, NAVALAR ROAD, NALLUR, JAFFNA.


# வீடு, கடை விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதான வீதியில் மெத்தக் கடை சந்திக்கு அருகிலுள்ள மூன்று கடைகளும் அரைவாசிக் கிணறும், நிலமும், அம்புலி ஒடை ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்னும் முகவரியிலமைந்த வீடு, கிணறுடன் கூடிய மூன்று பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு எண். : 0212264301*
*0778280711*

(107468)

# பிற்போடப்பட்டுள்ளது

நாளை (18.12.2010) சனிக்கிழமை நடைபெறவிருந்த கெனடி வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த திருமதி தம்பிப்பிள்ளை இராசம்மா அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் 02.01.2011 சனிக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*தகவல் : கோபால் (மகன்)*
0213217110

(107468)


# இலங்கை நிர்வாக சேவை (S.L.A.S)
## திறந்த போட்டிப் பரீட்சைக்கான வகுப்பு

ஆரம்பம்:- நாளை சனி (18/12) பி.ப. 1.00 மணி
* சனி, ஞாயிறு தினங்களில் பி.ப. 1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை மொத்தம் 60 மணித்தியால வகுப்புகள்.
* பொது உளச்சார்பு
* பொது அறிவு
* முகாமைத்துவ உளச்சார்பு
* கட்டுரைச் சுருக்கம்

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே. (சி/573567)


# மரண அறிவித்தல்

## திருமதி இராமசாமி பொன்னம்மா *(சின்னக்கிளி)*



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி பொன்னம்மா நேற்று (16.12.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கனகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற இராமசாமியின் அன்பு மனைவியும் மைனாவதி (கொழும்பு), விஜயகுமாரி, தர்மாவதி, மதுராம்பிகை (கனடா), ஸ்ரீரங்கநாதன் (ஜேர்மனி), யோகநாதன், உதயகுமாரி, சுசிலாம்பிகை (கனடா), கோபிநாதன் (டோகா), சுபாஷினி ஆகியோரின் பாசமிகு தாயும் நகுலேஸ்வரனின் பெரியதாயும் அன்னலிங்கம், மகிழலட்சுமி, லீலா, பாலசுப்பிரமணியம், பொன்ராசா, சாரதாம்பாள், தங்கராணி, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நவரட்ணம், அன்னலிங்கம், சிவராஜா (டோகா), கிருபாகரன், துஸ்யந்தி (ஆசிரியை, சண்டிலிப்பாய் தமிழ்க் கலவன் பாடசாலை), மயூரா, சந்திரமோகன், குணபாலன் (கனடா), றஜீனா, பார்த்தீபன் (பொறியியலாளர், மின்சாரசபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும் சசிகாந்தன், பாமினி (டோகா), சசிகலா, இளங்கோ, சசிகரன் (பிரான்ஸ்), சசிகாந்தினி, மதீஷ் (டோகா), பிரசாத் (இந்தியா), கிரிஷாந், திவாகரன், தக்ஷாயிணி, நிலக்ஷன், லக்ஷ்மன், தீபிகா, ஆதீசன், கஜானன், கஜனிகா, கரிஷ், ரிஸ்விதா, விபிசன், ஆஷ்வகா ஆகியோரின் பேர்த்தியும் அபினாஷ், அஸ்வின், அக்ஷயா, ரதீஷ், ஆகாஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*80/1, பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம். 0212228835*

(107460)

தகவல் :
குடும்பத்தினர்.

# சர்வதேச இந்துமத குருபீடத்தின்



# கண்ணீர் அஞ்சலி

சங்கானை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான ஆதீன குருவும், சர்வதேச இந்துமத குருபீடத்தின் யாழ். மாவட்டத் தலைவருமாகிய

பிரதிஷ்டா கிரியாரத்தினம்

## சிவாகம கலாநிதி சிவப்பிரம்ம ஸ்ரீ
## சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்

அவர்களின் திடீர் மறைவு குறித்து சர்வதேச இந்துமத குருபீடத்தின் அனைத்து குருமார்கள் சார்பில்

# கண்ணீர் அஞ்சலி

சிவாச்சாரியாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள், ஊர் பொதுமக்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, நித்தியானந்த சிவாச்சாரியாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P.
(சர்வதேச இந்துமத குருபீடாதிபதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இலங்கை ஒரு சிறிய நாடு. இதில் தமிழர் சிங்களவர், இஸ்லாமியர் என அனைவரும் ஒரு குடும்பம் போல் வாழ்வோம், வாழவேண்டும் என்பதே எங்களுடைய கொள்கை. இதனை இன ரீதியாகவோ மொழிரீதியாகவோ துண்டுபோடமுடியாது. அதற்கு இடம்மளிக்கவும் மாட்டோம்.

இப்படி நாம் கூறினால் எம்மை இனவாதிகள் என்று விமர்சிக்கின்றனர். நாங்கள் தமிழர்களுக்கோ முஸ்லிம்களுக்கோ விரோதமானவர்கள் அல்லர். சிங்களவரோ தமிழரோ அல்லது முஸ்லிமோ பயங்கரவாதச் செயலில் ஈடுபடுபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கே நாம் எதிரானவர்கள்.

1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற வன்முறைக்கும், இனப்படுகொலைகளுக்கும் சிங்களவர்கள் பொறுப்பாளிகள் அல்லர். அந்த இனக்கலவரம் அரசியல்வாத காடையர் கும்பலினால் மேற்கொள்ளப்பட்டது; சிங்களவர்களால் அல்ல.

சிங்களவர்கள் எப்போதும் தமிழர்களுடனோ, முஸ்லிம்களுடனோ சண்டையிடவில்லை. பிறமதங்களை நிந்திக்கவில்லை. பிற மத வழிபாட்டுத் தலங்களை இடிக்கவும் இல்லை.

இலங்கையை ஆண்ட மகாபாராக்கிரமபாகு, பர்மாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் எதிராகப் போரிட்டு, எம் நாட்டின் மீது மேற்கொள்ள முயன்ற ஆக்கிரமிப்பை முறியடித்தார்.

பயங்கரவாதி பிரபாகரனின் அணியினரும் சிறிதும் மனிதாபிமானற்ற முறையில் மாவிலாறு அணையைமூடி அப்பாவிகளான 50 ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்களைப் பட்டினி போட்டார். குடிக்கவும், மனிதாபிமான தேவைகளுக்கும் நீரின்றித் துன்பப்பட்டனர். ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமாதான வழியில் தீர்வு காணவே முயன்றார். ஆனால் பிரபாகரன் அதனை ஏற்கவில்லை.

நேரடியாகப் பாதிக்கப்பட்ட 50 ஆயிரம் ஜீவன்களைப் பாதுகாக்கும் மனிதாபிமானப் போராட்டத்தை ஆரம்பித்த ஜனாதிபதி முழு நாட்டையுமே பிர்பாகரனின் பயங்கரவாதப் பிடியில் இருந்து மீட்டு நாட்டு மக்கள் அனைவருக்கும் விடுதலை பெற்றுக் கொடுத்தார்.

ஜனாதிபதி தமிழர்களை அழிக்கவில்லை. பயங்கரவாதத்தையே அழித்துள்ளார். சர்வதேசம் இதனைப் பாராட்டியது.

எந்த ஒரு வெளிநாட்டுச் சக்திக்கும் ஜனாதிபதியின் செயற்பாட்டை விமர்சிக்கும் அருகதை கிடையாது.

பிரபாகரன் மூன்று நோக்கங்களைக் கொண்டே செயற்பட்டார். ஒன்று தமிழ் மொழியே பிரதான மொழியாக இருக்கவேண்டும். இரண்டாவது வடக்கும் கிழக்கும் இணைந்த தமிழ்த் தேசியம் உருவாக்கப்படவேண்டும். மூன்றாவது இந்தப் பிரதேசம் அனைத்தையும் தான் ஆளவேண்டும் என்பதே.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் சமாதானம், பொருளாதாரம் மற்றும் நாட்டில் சகல இன மத பாரம்பரிய மதக் கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற மூன்று சிந்தனைகளுடன் செயற்பட்டு வெற்றி கண்டார். கடந்த கால சரித்திரத்தைப் புரட்டினால் 2500 வருடங்களுக்கு மேல் 186 சிங்கள மன்னர்கள் இந்த நாட்டை ஆட்சி செய்துள்ளனர். இதற்கான கல்வெட்டுகளும் சான்றுகளும் இருக்கின்றன.

இலங்கையை தமிழ் மன்னர்கள் ஆண்டார்கள் என்று கூறுவது வெறும் கட்டுக்கதை. இதில் எந்த ஒரு உண்மையும் கிடையாது. அவர்கள் கூறுவது போல் தமிழ் மன்னர்கள் ஆண்டிருந்தால் அவர்கள் எந்த ஒரு நீர்த்தேக்கத்தையோ வாவிகளையோ அல்லது அணைக்கட்டுக்களையோ கட்டியிருக்கின்றனரா? இல்லவே இல்லை.

இன்று தமிழர்களின் சிறந்த வழிபாட்டுத் தலமாக விளங்கும் நல்லூர்க் கோவிலைக் கட்டியவர் சபுமல் குமரயா என்ற பராக்கிரமபாகு மன்னரின் பிரதிநிதி. இந்தியாவிலிருந்து வந்த காளிங்க மன்னரின் படையெடுப்பை முறியடித்து வெற்றிகண்டதன் ஞாபகமாகவே நல்லூர் கோயில் கட்டப்பட்டது.

காளிங்க மன்னருடன் வந்த கேரள சிப்பாய்களில் பலர் அங்கேயே தங்கிவிட்டனர். இவர்கள் பின்னர் தமிழர்கள் ஆனார்கள். ஆனால் இவர்கள் தமிழர்கள் அல்ல.

வந்தேறு குடிகளேயன்றி காலம் காலமாக வாழ்ந்தவர்கள் அல்ல. தமிழ் மொழி அங்கே இருந்தது என்றும் கூறமுடியாது.

பிரபாகரன் திம்புப் பேச்சு முதல் இறுதிப் போர் முடியும்வரை சமாதானத்தில் நாட்டம் கொண்டவராக இருக்கவில்லை.

பிரபாகரனின் பயங்கரவாத நடவடிக்கைகளினால் பல ஆயிரம் தமிழர்களும், சிங்களவர்களும், முஸ்லிம்களும் உயிரிழந்துள்ளனர். தமிழ் மக்களும் பிரபாகரனின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்தே வந்துள்ளனர். வாய்விட்டுச் சொல்லமுடியாத நிலைமை. சுதந்திரமாக நடமாடக்கூட பிரபாகரன் அனுமதிக்கவில்லை.

கப்பம், கட்டாயவரி, பேச்சுச் சுதந்திரம் எல்லாம் தமிழ் மக்களுக்கே வெறுப்பூட்டியுள்ளது. இப்பொழுது இதனை வெளிப்படையாகக் கூறுகின்றனர். வெளிநாட்டவர்களும், தமிழ் சிங்கள அரசியல்வாதிகளும் பாதிக்கப்பட்ட தமிழர்களை மீள்குடியேற்ற வேண்டும். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கவேண்டும் என்று குரல் எழுப்புகின்றனர். ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். ஆனால் பிரபாகரனால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர்கள் தான். சிங்களவர்களை மீள்குடியேற்றவேண்டும். புனர்வாழ்வழிக்க வேண்டும் என்று சிங்கள அரசியல்வாதிகள் கூடச் சிந்திக்கவில்லை.

பிரபாகரனின் பயங்கரவாத நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோண மலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 42 ஆயிரம் சிங்களவர்கள் நிரந்தமாக வாழ்ந்துள்ளனர். அதற்கான ஆதாரங்களும் உண்டு. இவர்கள் அனைவரும் பிரபாகரனால் விரட்டியடிக்கப்பட்டனர். இவர்கள் மீண்டும் அங்கே குடியேறுவதற்கு சகல உரித்தும் உடையவர்கள்.

எந்தவொரு சிங்களவரும் பிறமத வழிபாட்டுத் தலங்களை இடிக்கவில்லை. தமிழர் களுக்கு எதிராகச் சண்டை செய்யவும் இல்லை. ஆனால் வடக்குக் கிழக்கில் பௌத்தர்களின் பாரம்பரிய விகாரைகள், தூபிகள் தமிழர்க ளினால் தகர்க்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் இந்துக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

நான் 1950 களில் புதைபொருள் ஆய்வு தொடர்பாக அங்கு சென்று பல விவரங்களைத் திரட்டியுள்ளேன்.

1583 வாவிகளும் 1083 கிராமங்களும் 1583 பௌத்த வழிபாட்டுத் தலங்களும் இருந்தன. அவற்றைத் திரட்டி ஒரு புத்தகமாக வெளியிட்டுள்ளேன்.

ஒவ்வொரு வாவிகளிலும், கால்வாய்களிலும் ஆரம்ப இடத்தில் பௌத்த சின்னங்கள் காணப்பட்டன. ஆனால் அவை இப்பொழுது அழிக்கப்பட்டுள்ளன. இவை மீண்டும் புனரமைத்துப் பாதுகாக்கப்படவேண்டும்.

தமிழ் மக்களை விட சிங்கள மக்களே கல்வி, பொருளாதாரம் என்பவற்றில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கு ஒரு உதாரணம் கல்வி அபிவிருத்தி. கொழும்பில் 17 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இங்கு உயர்தரம் படிப்பிக்கும் பாடசாலைகள் 32 மட்டுமே இருக்கின்றன.

ஆனால் யாழ்ப்பாணத்தில் 4 லட்சத்து 92 ஆயிரம் பேர் மட்டுமே இருக்கின்றனர். அங்கு உயர்தரம் படிக்க 33 பாடசாலைகள் இருக்கின்றன. இதை நான் கேட்டால் இனவாதியாகுமா?

யாழ்ப்பாணம் முதல் மாத்தறை வரை "தத்த" என்ற பெயர் கொண்ட இனத்தவர்கள் இருந்தனர். இவர்கள் சிங்களவர் என்பதற்கும் பல ஆதாரங்கள் இருக்கின்றன.

காங்கேசன்துறை துறைமுகம் கூட முதலாவது பராக்கிரமபாகு மன்னரால் ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு காணப்படும் கல்வெட்டுக்கள் இதனை உறுதிப்படுத்துவதாக இருக்கின்றன. வர்த்தக ரீதியான கட்டளைகளும், சட்டங்களும் அறிவிப்புகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து தமிழர்கள் வியாபார நோக்கமாக இங்கு வந்தனர். இவர்களின் மொழி தமிழ். இவர்கள் இந்த அறிவிப்புகளைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் தமிழிலும் பொறிக்கப்பட்டுள்ளது. இதுதான் உண்மை. - இப்படி எல்லாவல மேதானந்த தெரிவித்தார். ஆணைக்குழு உறுப்பினர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் தேரர் பதில் அளித்தார்.

கேள்வி:- சிதைக்கப்பட்ட பௌத்த விகாரை கள் மீண்டும் கட் டப்பட வேண்டும் என்கின்றீர்கள். அப்படியானால் இந் துக் கோயில்களை இடித்து பௌத்த விகாரைகளைக் கட்டினால் மீண்டும் ஒரு மதக்கலவரம் வெடிக்காதா?

பதில்:- நான் கட்டிய கோவில்களை இடிக்க வேண்டும் என்று கூறவில்லை. அவை அப்படியே இருக்கட்டும். சிங்களவர் களின் புராதன இடங்கள் பாதுகாக்கப் படவேண்டும் என்று கூறுகின்றேன்.

கேள்வி:- 1983ஆம் ஆண்டில் தமிழர்கள் கொல்லப்பட்ட இனக்கலவரத்தால் தான் வடக்கே ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை ஏற்பட்டது எனப் பலர் சாட்சியமளித்துள்ளார்களே?

பதில்:- சிங்களவர்களால் இனக்கலவரம் ஏற்படவில்லை. அரசியல் காடையர்களினால் ஏற்பட்டது. அதற்கு சிங்களவர்கள் பொறுப்பல்ல. நீங்கள் இதைக் கூறுகின்றீர்கள். அப்படியானால் 16 சிங்கள இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டது சரியாகுமா?

கேள்வி:- அப்படியானால் இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு காணப்படவேண்டும்?

பதில்:- இங்கு வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும். அவர் அவர்களுடைய மதம், மொழி, கலாசாரம் பாதுகாக்கப்படவேண்டும். பிரிவினையின்றி ஒற்றுமையாக வாழ உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும். இது தான் நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தும் என்று தேரர் கூறினார். (ஐ-சி)

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
ஆசிரியர் :-திரு.சி.பிரணவன்
Kids Programming (Year1-10)
MSO, DTP
Hardware
Start on: 18, 20.12.2010
Softview Computer College
43, Arasady Road, Thaddatheru Junction Jaffna.
T.P: 021 2225170

36ஆவது வருட சாதனைப் பயணத்தில்
விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS - 2011
கணக்கீடு
திரு. A.P.பகீரதன் B.B.A (Fm.spl)
(Mon, Tue, Wed, Thurs, Fri: 12-2 வரை)
* ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
* பாடம் மாறிக் கற்போருக்கு விசேட கவனம் செலுத்தப்படும்.
* வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.
* அனைத்துப் பாடங்களும் தொடர்ச்சியாக நடைபெறும்.

36ஆவது வருட சாதனைப் பயணத்தில்
விக்னா
கல்வி நிறுவனம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
2011 A/L - DAY CLASS
கலைப் பிரிவு Mon to Fri

| | | |
|---|---|---|
| Tamil | - திரு. [illegible] | : 8 9 |
| Eco. | - திரு. N.B. [illegible] | : 2 3 |
| Logic | - திரு. [illegible] | : 7 8 |
| Hin.Cul. | - திரு. N.T. [illegible] | : 9 10 |
| Geo. | - திரு. [illegible] | : 12 2 |
| Hin. | - திரு. N.T. [illegible] | : |
| History | திரு. [illegible] | : 7 8 |
| P.Scien. | - திரு. [illegible] | : 2 3 |
| Christ. | - திரு. [illegible] | : 9 10 |
| Drama | - திரு. [illegible] | : 7 8 |

ஆரம்பமாகிவிட்டது
★ வெளிமாவட்ட மாணவர்களுக்குத் தங்குமிட வசதி செய்துதரப்படும்.

கல்வியாண்டு 2011 க்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
• கணனி விஞ்ஞானம்/தகவல் தொழில்நுட்பம் • குடிசார் பொறியியல்
• வர்த்தகமும் முகாமைத்துவக் கல்வியும்
மேற்படி உயர் தேசிய டிப்ளோமா (HND) மற்றும் விஞ்ஞானமானி (B.Sc.) கற்கைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கு : 021 4 900 900
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna.
T.P : 021 222 8060 Fax : 021 222 6933
E-Mail : info@iis.edu.lk Web : iis.edu.lk

சுந்தர்சன்
நிறுவனத்தின்
மாபெரும் மலிவு விற்பனை
30% வரையான விலைக்கழிவு



அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன்
இத்தினத்தில் கொள்வனவு செய்யும் அதிஷ்டசாலி வாடிக்கையாளர்கள் 30 பேருக்கு ரூபா 110,000 பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்
* Fridge
* Washing Machine
* LCD, LED, CRT TVs
* Water Filter
* Electric Kettle
* Toasters
* Rice Cooker with steamer
* Iron Box
* Table fan
* Pedestal fan
* Rechargeable Torch
* Blenders
* Electric Oven
* Gas Cooker
* Home Theater System
* Bulbs
* Chandelier
* Wall lamps
* Emersion Heater
* Table lamps
* Egg beater
* Sunk switches
* Mobile phones
* Kevilton, Belgryan, Aura CFL Bulbs
* DVD Players
* Anton (Dolphin) Plastics
18.12.2010 தொடக்கம் 24.12.2010 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.